# ஆண்டறிக்கை

# 2018

## மற்றும் கணக்கீட்டுக் கூற்று

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## செயற்பணிக்கூற்று

“வாழ்நாள் முழுவதுமான கற்றலில் மேன்மை வினைதிறன் மற்றும் உறுப்பாண்மை ஆகியவற்றின் மூலம் தெற்காசியாவின் முதன்மையான திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமாக திகழ்வதாகும்.”

## தொலைநோக்குக் கூற்று

“திறந்த தொலைக்கல்வி மூலம் உயர்தரமானதும் பெறக்கூடியதும் உகந்ததுமான கல்விப் பேறுவழித்தன்மையை மிகுதிப்படுத்துவதுடன், அறிவுசார் சமூகமொன்றில் சவால்களை எதிர்கொள்வதற்கான வாழ்நாள் கற்றல் வாய்ப்புக்களை உறுதிப்படுத்துவதுமாகும்.”

# இணைந்த இலக்குகள்

2016 முதல் 2020 வரையான காலப்பகுதிக்கான பல்கலைக்கழகத்தின் இணைந்த இலக்குகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

1. திறந்த மற்றும் தொலைக்கல்வி மூலம் உயர்தரத்திலானதும் பொருத்தமானதுமான கல்வியினை வழங்குதல்.
2. கற்பவர்களின் வாழ்க்கைப் போட்டிகளை அதிகரிப்பதற்கான ஆளுமையினை மேம்படுத்துதல் மற்றும் தொழில் ஆசைகளை நிறைவேற்றுதல்.
3. புலமைப்பரிசில், ஆய்வு மற்றும் கண்டுபிடிப்பு என்பவற்றில் சிறந்த மையமாக திகழ்தல்.
4. கல்விக்கான அணுகல் விரிவுபடுத்தல் மற்றும் வாழ்நாள் கல்வி வாய்ப்புக்களை அதிகரித்தல்.
5. பல்கலைக்கழகத்தில் உகந்த மற்றும் வினைதிறனான கல்விச் சூழலை உருவாக்குதல்.
6. உயர்தரத்திலான நிர்வாக சேவைகளை உறுதிப்படுத்துதல்.
7. தேசிய மற்றும் சமூக அபிவிருத்தியை நோக்கியதான நிறுவன ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.

## துணைவேந்தரின் செய்தி



இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நாட்டின் பிரஜைகளுக்கு உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது. நாம் இன்றுவரை நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தான 40,000 இற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வருடாந்தம் உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்குகின்றோம்.

2018 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் மற்றும் உயர் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வகிக்கப்படும் முக்கிய வகிபங்கினை கருத்தில் கொண்டு இந்நாட்டின் உயர் தரத்திலான கல்விக்கான வளர்ந்து வரும் கேள்வியை விரிவடையச்செய்வதற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான திட்ட முன்மொழிவினைக் கோரியுள்ளது. எமது குழுவினால் வழங்கப்பட்ட திட்ட முன்மொழிவானது பல்கலைக்கழக பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன் அது மேலதிக கலந்துரையாடல் மற்றும் இறுதித் தீர்மானத்திற்காக அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாம் இந்த திட்ட முன்மொழிவின் ஊடாக எமது பல்வேறு பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற சில வசதிகளை மேலும் மேம்படுத்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சிடமிருந்து ஆதரவினை எதிர்பார்த்து நிற்கின்றோம். இந்த நிலையங்களில் பதிவுசெய்கின்ற மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நிலையங்களுக்கு குறைந்த பட்ச நிரந்தர அலுவலர்களும் எமக்குத் தேவைப்படுகின்றனர். **பொருளாதார ரீதியில் அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்கு தரமான கல்வி வாய்ப்புக்களை வழங்குவதில் இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது கொள்கை உருவாக்குனர்களை கவர்வதாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்.** பாரம்பரிய பல்கலைக்கழகங்களுக்கு தேவைப்படும் முதலீட்டு அளவுடன் ஒப்பிடுகின்ற போது அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு சேவையினை வழங்குதற்கான முதலீட்டு அளவானது குறைவானதாக அமைகின்றமையே இதற்கான காரணமாகும். உண்மையில் நிதியாண்டு 2018 இல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் மாணவரொருவருக்கான மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்கள் என்பன முறையே ரூபா.72,157.39 மற்றும் ரூபா 5,948.19 ஆகும். இது பாரம்பரிய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகின்ற போது மிகவும் குறைவான தொகையாகும்.

வருடம் முழுவதுமான கல்விசார் செயற்பாடுகளுக்கான பல்கலைக்கழகத்தின் வெளிப்படைத் தன்மையானது, தொழில்புரிவோருக்கு கவர்ச்சியானதோர் தெரிவினை உருவாக்கியுள்ளதனால் சுமார் 80%ஆன மாணவர்கள் ஆதாயத்துடன்கூடிய தொழிலினைப் தொடர்ந்தும் பெற்றுவருகின்றனர். தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய பொறுப்பு வாய்ந்த பிரசைகளாக மாறுவதற்காக அவர்களது கல்வியை மேம்படுத்தவும் கல்விசார் மற்றும் தொழில் மேம்பாட்டு இலக்குகளை அடைந்துகொள்ளவும் வாய்ப்பொன்று அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

2018 இல் பல்கலைக்கழகமானது உலகலாவிய திறந்த மற்றும் தொலைக்கல்விப் பரப்பில் ஏற்படும் புதிய அபிவிருத்திகளை கவனத்தில் கொண்டு கற்றல் சாதனங்களை விருத்தி செய்கின்ற அணுகுமுறைகளில் மிக முக்கிய படிகளை எடுத்துள்ளது. அதன்படி இப்போது கிடைக்கப்பெறும் கல்வி மூலங்களைப் பயன்படுத்தி பாடப்புத்தகம் தயாரிக்கப்பட்டிருப்பதுடன் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் பட்டியல்கள் என்பன தயாரிக்கப்பட்டு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் புது டில்லியில் அமைந்திருக்கும் ஆசியாவிற்கான பொதுநலவாய ஊடக நிலையத்தின் ஆதரவுடன் “திறந்த கல்வி மூலங்கள் மற்றும் திறந்த கல்வி செயன்முறைகள் என்பவற்றினை பின்பற்றுதல்” பற்றியதான தொழில்வல்லுனர்களுக்கான தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்கான பாரியவிலான திறந்த நிகழ்நிலை நிகழ்நிலைக் கற்கையின் வடிவமைப்பு, அபிவிருத்தி, அமுல்ப்படுத்துகை மற்றும் மதிப்பீடு மீதான ஆய்வுச் செயற்றிட்டம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 2018இல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஆண்டில் பல்கலைக்கழகமானது இரண்டு புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றது. சுகாதார விஞ்ஞான பீடத்தின் உளவியல் மற்றும் ஆலோசனை துறையானது இலங்கையில் திறந்த மற்றும் தொலைக்கல்வி முறைமையினூடாக முதன்முறையாக வழங்கப்படுகின்ற உளவியல் பட்டமாகிய உளவியல் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்புப் பட்டத்தினை ஆரம்பித்தது. இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது நாட்டின் திறந்த மற்றும் தொலைக்கல்வி துறை வரலாற்றில் நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டத்தில் இளமாணிப்பட்டத்தினை ஆரம்பித்து மற்றுமொரு வரலாற்று மைற்கல்லினைப் பதிப்பதில் பெருமைகொள்கின்றது. திறந்த தொலைக்கல்வி தளத்தினூடாக தமது பரப்பினை மீள் பரிசீலனை, மீள் வாசிப்பு செய்தல் மட்டுமல்லாது சந்தையில் மாறி வரும் தொழில்சார் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் புதுப்பிக்கப்பட்ட மற்றும் நவீன அபிவிருத்திகளுக்கு முகங்கொடுக்கும் வகையிலான மாற்றங்களையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நூலகக் குழுவானது மேற்கொண்டு வருகின்றது. இந்த இளமாணிப் பட்டமானது இலங்கை நூலக ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட முன்மொழிவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இதனால் ஒன்றியத்தின் தூதுவர்கள் போட்டிமிக்க தேசிய பல்கலைக்கழகங்களில் அவர்களுடைய துறைசார் ஆற்றல்களுடன் தொடர்புடையதான தகுதிவாய்ந்த பட்டங்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தினால் வழங்கப்படுவதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணிப்பதற்கென தனியான பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

இலங்கை திறந்த பல்கலைக்கழக நூலகமானது உலக வலைத்தளத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் திறந்த கல்வி மூலங்களை பெயர்பட்டியல் வரிசைப்படுத்தி அவற்றினை அலுவலர்கள், மாணவர்கள், மற்றும் பொதுமக்களுக்கு கிடைக்கச்செய்கின்ற செயற்றிட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றது.

2018 ஆம் ஆண்டிலிருந்து கற்கை சாதனங்களை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையானது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே கல்விசார் துறைகள் தமது தேவையற்ற நிர்வாக சுமைகளிலிருந்து

விடுபடமுடிவதுடன் செயற்பாடுகளை சிறப்பாகவும் காத்திரமான முறையிலும் மேற்கொண்டு வருகின்றன. மேலும், பல்கலைக்கழக வரலாற்றில் முதல் தடவையாக அச்சிடப்பட்ட கற்கைநெறிச் சாதனங்களின் இருப்பினை சரிபார்க்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தமது புதிய ஆண்டுக்கான நேர சூசியினைத் தயாரிக்கும் போது நாள்-பாடசாலை வேளைகளில் அனைத்து துறையினரும் சீருடை அணிய இணங்கியுள்ளனர். பல வருடங்களாக பொறியியல் தொழில்நுட்ப பீடம் செய்து வருதனைப்போல திறந்த பல்கலைக்கழகம் முழுவததற்குமான கல்விச் செயற்பாடுகளுக்குமான நேர சூசி இப்பொழுது முதல் செயற்பாட்டு முகாமைத்துவ தகவல் முறைமையினால் தயாரிக்கப்படும். இதற்காக அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

கடந்த சில வருடங்களாக முழுப்பல்கலைக்கழகத்தினாலும் முன்னெடுக்கப்படும் மிகப்பெரிய பணிகளில் ஒன்றாக இலங்கைத் தகைமைக் கட்டமைப்புக்கு இசைவாக நிகழ்ச்சித் திட்டங்களை மீள்கட்டமைத்தல் அமைந்துள்ளது.

பல்கலைக்கழகமானது, 2018 ஆம் ஆண்டில் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கான அனுமதித் தகைமையினை கொண்டிராத மாணவர்களுக்கு விஞ்ஞானத்தில் அடிப்படை கற்கை நெறியினை மீள ஆரம்பித்தது. இந்த நோக்கத்திற்காக பல்கலைக்கழகமானது அதன் அடிப்படை கற்கைநெறிகளை நிர்வகிக்கின்ற அடிப்படை கல்விசார் அலகினை அமைத்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்பின் படி பால்நிலை சமநிலை மற்றும் சமத்துவம் என்பவற்றிற்கான நிலையத்தினை ஸ்தாபித்துள்ளது. இது 2018 தை முதல் தொழிற்பாட்டிற்கு வந்தது.

பொதுநலவாய கற்றலின் உதவியுடன் திறந்த பல்கலைக்கழகமானது, இலங்கை பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் இலங்கைப் பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் முறைமையில் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் பொதுநலவாய எண்மான கல்வி தலைமைத்துவ பயிற்சியின் அமுல்ப்படுத்துகை மற்றும் அதன் தாக்கத்தின் மதிப்பீடு பற்றியதான ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றது. பாடசாலை ஆசிரியர்களின் மத்தியில் திறன்களை விருத்தி செய்தல் மற்றும் பாடசாலைகளில் எண்மான சூழலின் தழுவலை மேம்படுத்தல் என்பன இந் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

2018 ஆம் ஆண்டில் திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றியங்களின் சிறந்த செயற்பாடுகளுக்கான தங்க மற்றும் வெள்ளிப் பதக்கங்கள், 350 பத்திரங்களின் மத்தியில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வென்றெடுக்கப்பட்டது. மேலும். 2020 இல் இலங்கை திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றிய மாநாட்டினை கொழும்பில் நடத்துவதற்கான தொகுப்பாளர் உரிமத்தினை பல்கலைக்கழகம் வென்றெடுத்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை திறந்த பல்கலைக்கழக முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தின் கல்விசார் சமூகத்தினருக்கு பல்வேறு வகைகளில் ஊக்குவிப்பினை வழங்குவதன் மூலம் ஆய்வுகளை பெருமளவிற்கு ஊக்குவிக்கின்றது. அதன்படி இப்போது ஆய்வுக்கான பணங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதுடன் கடந்த வருடத்தில் ஆய்வுக்கான நிதிக்காக விண்ணப்பித்தோருககுத் தேவையான நிதியினை பல்கலைக்கழகத்தினால் வழங்கக்கூடியதாக

இருந்தது. இறுதி வருட மாணவர்களின் செயற்றிட்டங்களுக்காக ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஆகக் கூடியது 50,000/- நிதியினை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிதி ஆண்டுக்கான செயற்றிட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகமானது அதன் தொலைக்கல்வியில் நிறுவன ரீதியிலான ஆய்வுகளை அதிகரிப்பதற்காக ஆலாசனை பற்றியதான குழுவினை மீள்நிறுவியது. இலங்கை திறந்த பல்கலைக்கழக ஆய்வு அமர்வுகள் 2018 இல் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பிரிவின் உதவியுடன் நூலகமானது 2018 ஆம் ஆண்டில் அதன் நாளேடுகளின் தரவுத் தளங்களுக்கு தொலைவழி அணுகல் மூலம் அலுவலர்களுக்கு அவர்கள் இருக்கும் இடங்களுக்கே பெற்றுக் கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்திருந்தன.

இலங்கை திறந்த பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக தொழில்துறை தொடர்பு நிலையத்தினால் வழங்கப்பட்ட பங்களிப்புடன் இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்விசார்அலுவலர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகளின் அடிப்படையில் காப்பாளர்களின் விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்டன. பல்கலைக்கழகம் மற்றும் தொழில் துறை என்பவற்றிற்கு இடையில் பங்குரிமையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தொழில்துறை தொடர்புநிலையமானது தொழில் துறையுடன் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. உயர்கல்வி அமைச்சின் உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் விருத்தியை விரைவுபடுத்தல் (எஹெட்) உலக வங்கிச் செயற்றிட்டத்தின் கீழ் இவ்வசதியானது மேலும் மேம்படுத்தப்படும்.

''உலக முப்பரிமாண அச்சிடல் தினத்தினை'' முன்னிட்டு பாடசாலை மாணவர்களை இலக்காக கொண்டு கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இடம்பெற்ற ''முப்பரிமாண அச்சிடல் முகாமிற்கு'' மென்பொருள் இயந்திரமனிதவியல் ஆய்வுக்குழுவின் அணியினர் அழைக்கப்பட்டனர். எமது ஆய்வுக்குழுவானது ''மென்பொருள் இயந்திரமனிதவியல் மற்றும் உலகப் போக்குகள்''எனும் விரிவுரை வழங்களினூடாக ''மென்பொருள் இயந்திரமனிதவியல் மற்றும் அதனோடு இணைந்த தொழில்நுட்பங்களை'' இளம் பாடசாலை பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தி அது தொடர்பான அவர்களின் அறிவை அதிகரித்தும் வளர்த்தும் இருக்கின்றனர். உலகில் வளர்ச்சியடைந்துவரும் போக்காக இது மாறியிருப்பதனால்

“மென்பொருள் இயந்திரமனிதவியலால் எதிர்கொள்ளும் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது பற்றிய கருத்துக்கள் இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

தை 2018 ஆம் ஆண்டு மன்னாரில் புதிய கற்கை நிலையம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டதுடன் இரத்தினபுர பிராந்திய நிலையத்திற்கான புதிய கட்டடத் தொகுதியினை நிறுவுவதற்காக இரத்தினபுரி புதிய நகரத்தில் அமைந்துள்ள காணித்துண்டொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு காலப்பகுதியில் யாழ் பிராந்திய நிலையத்தில் திட்டமிடப்பட்ட நான்கு மாடிக் கட்டடத்திற்கான பாரம்பரிய அடிக்கல்நாட்டு விழாவும் இடம்பெற்றது.

பொறியியல் தொழில்நுட்ப பீடத்தின் சிவில் பொறியியல் துறையின் 8 பட்டதாரி மாணவர்கள் மற்றும் கல்விசார் அலுவலக உறுப்பினர்களைக் கொண்ட குழுவானது ஒகாயம மற்றும் ஒசாகா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஜப்பான் - ஆசிய பரிமாற்ற விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டத்தில் (சகுரா பரிமாற்ற விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டம்) பங்குபற்றினர். இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு புதிய வகையிலான கல்விசார் சாதகத் தன்மைகளை இது வழங்கியிருப்பதுடன் இருபக்க புரிந்துணர்வுகளை உருவாக்குவதற்கும் வேறுபட்ட கலாசாரங்களை மதிப்பதற்கும் இது உதவியது.

மேலும் இந்த ஆண்டில் பல்கலைக்கழகத்தின் ஓப்பின் யூரிப் மற்றும் ஓப்பின்காஸ்ற் ஆகிய காணொலி அலைவரிசைகளும் நிறுவப்பட்டன.

எமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கும் வசதிகளைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதிலும் தரமான உயர்கல்வியினை வழங்குவதிலும் இலங்கைப் பிரஜைகளுக்கு தேவையான முழு ஆதரவினையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தொடர்ச்சியாக வழங்குமென நான் இங்கு குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.ஏ.அரியதுரை

துணைவேந்தர்

# உள்ளடக்கங்கள்

**பகுதி 1 – பொது……………………………………………………………………………..…....1**

1.0. பொது ........................................................................................................ 2

1.1 மீள்நோக்கு................................................................................................. 2

1.2 ஆளுகை அதிகார சபை ................................................................................ 4

**பகுதி 2 - அலுவலர்……………………………………………………………………….... 9**

2.0. அலுவலர்...................................................................................................10

2.1 ஒழுங்கமைப்பு வரைபடம் ........................................................................... 10

2.2 அலுவலர் விபரங்கள் ................................................................................... 12

2.2.1 கல்விசார் அலுவலர்கள்.............................................................................. 12

2.2.2 கல்விசார் ஆதரவு அலுவலர்கள்................................................................. 12

2.2.3 நூலக அலுவலர்கள்.................................................................................... 13

2.2.4 நிர்வாக அலுவலர்கள்: ................................................................................ 13

2.2.5 ஏனைய நிறைவேற்று அதிகாரிகள்.............................................................. 14

2.2.6 கல்விசாரா அலுவலர்கள்:........................................................................... 15

**பகுதி 3 - மாணவர் ஆற்றுகைகள்……………………………………………………….......16**

3.0. மாணவர் ஆற்றுகைகள்.............................................................................. 17

3.1 உள்ளீர்ப்புக்கள் .......................................................................................... 17

3.1.1 உள்நாட்டு மாணவர்கள் ............................................................................. 17

3.1.2 வெளிநாட்டு மாணவர்கள்:.......................................................................... 17

3.2 பூரணப்படுத்தல்கள் ..................................................................................... 18

3.2.1. பட்டமளிப்பு.............................................................................................. 18

3.2.2. விருது வழங்கல் வைபவங்கள்.................................................................... 19

3.3 மாணவர் சாதனைகள் ................................................................................... 19

**பகுதி 4 - பீடங்களின் அறிக்கை…………………………………………………….......24**

4.0. பீடங்களின் அறிக்கை ................................................................................. 25

4.1 கல்விப்பீடம்................................................................................................ 25

4.1.1 மீள்நோக்கு ................................................................................................ 25

4.1.2 தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் பூரணப்படுத்தல்................... 26

4.1.3 தனிநபர் நிகழ்ச்சித் திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் அலுவலர்கள் ..................... 29

4.1.4 புதிய கற்கைநெறிகள் / நிகழ்ச்சித்திட்டங்கள்............................................... 30

4.1.5 நிகழ்நிலையாக வழங்கப்படும் கற்கை நெறிகள்............................................. 30

4.2 பொறியியல் தொழில்நுட்ப பீடம் .................................................................. 31

4.2.1 மீள்நோக்கு ................................................................................................ 31

4.2.2.தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் பூரணப்படுத்தல் ..................... 32

4.2.3 தனிநபர் நிகழ்ச்சித்திட்ட மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் அலுவலர்கள் .................................... 33

4.2.4 புதிய கற்கை நெறிகள் / நிகழ்ச்சித்திட்டங்கள்.............................................. 34

4.2.5 நிகழ்நிலையாக வழங்கப்படும் கற்கைநெறிகள் ........ 34
4.3 சுகாதார விஞ்ஞான பீடம் ........ 36
4.3.1 மீள்நோக்கு ........ 36
4.3.2 தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் பூரணப்படுத்தல் ........ 38
4.3.3 தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் அலுவலர்கள் ........ 39
4.3.4 புதிய கற்கைநெறிகள் / நிகழ்ச்சித்திட்டங்கள் ........ 39
4.3.5 நிகழ்நிலையாக வழங்கப்படும் கற்கை நெறிகள் ........ 39
4.4 மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் ........ 42
4.4.1 மீள்நோக்கு ........ 42
4.4.2 தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் பூரணப்படுத்தல் ........ 44
4.4.3 தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் ........ 46
4.4.4 புதிய கற்கை நெறிகள் / நிகழ்ச்சித்திட்டங்கள் ........ 47
4.4.5 நிகழ்நிலையாக வழங்கப்படும் கற்கை நெறிகள் ........ 47
4.5 இயற்கை விஞ்ஞானங்கள் பீடம் ........ 48
4.5.1 மீள்நோக்கு ........ 49
4.5.2 தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் பூரணப்படுத்தல் ........ 51
4.5.3 தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் அலுவலர் ........ 53
4.5.4 புதிய கற்கைநெறிகள் / நிகழ்ச்சித்திட்டங்கள் ........ 54
4.5.5 நிகழ்நிலையாக வழங்கப்படும் கற்கை நெறிகள் ........ 54
**பகுதி 5 - ஆய்வு மற்றும் வெளியீடுகள் ........ 56**
5.0. ஆய்வு மற்றும் வெளியீடுகள் ........ 57
5.1 ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் / பத்திரங்கள் ........ 57
5.2 புத்தகங்கள் / காப்புரிமையாளர்கள் ........ 58
5.3 விருதுகள் ........ 58
**பகுதி 6 - நிலையங்களும் அலகுகளும் ........ 59**
6.0. நிலையங்களும் அலகுகளும் ........ 60
6.1 பிராந்திய கல்விச் சேவைகள் ........ 60
6.2 நூலகம் ........ 62
6.3 அலுவலர் அபிவிருத்தி நிலையம் ........ 64
6.4 தொழில் வழிகாட்டல் அலகு ........ 65
6.5 அச்சகம் மற்றும் மத்திய அனுப்புகை அலகு ........ 67
6.6 தேசிய நிகழ்நிலை தொலைக்கல்வி சேவைகள் ........ 69
6.7 சர்வதேச உறவுகள் பிரிவு ........ 69
6.8 தொழில் தொடர்பு நிலையம் ........ 75
6.9 கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையம் ........ 79
6.10 ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையம் ........ 82

**பகுதி 7- எதிர்காலத் திட்டங்கள்……………………………………………………………………84**

7.0. எதிர்காலத் திட்டங்கள் ........................................................................................85

**பகுதி 8 - நிதிகள்………………………………………………………………………………..88**

8.0. நிதிகள் ........................................................................................89

8.1 மீண்டெழும் செலவினம் ........................................................................................89

8.2 மூலதன செலவினம்........................................................................................89

8.3 செயற்றிட்டங்களின் விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதி பெறப்பட்டவை)......................90

8.4 நிதிசார் வளர்ச்சி விபரங்கள் : ( செலவினம்)........................................................................................95

8.5 நிதிசார் வளர்ச்சி விபரங்கள் ( பெறப்பட்ட வருவாய்)........................................................................................95

8.6 நிதியியல் பகுப்பாய்வு செயலாற்றுகை – 2018:........................................................................................95

8.7 2018 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட உட்கட்டுமான வசதிகள்........................................................................................95

**பகுதி 9- ஆண்டறிக்கையோடு தொடர்புடைய ஏனைய விபரங்கள் /**

**செயலாற்றுகைகள் ……………………………………………………………………96**

9.0. ஆண்டறிக்கையோடு தொடர்புடைய ஏனைய விபரங்கள் / செயலாற்றுகைகள் .............................97

9.1 கணக்காளர் நாயகம் அவர்களின் அறிக்கை........................................................................................97

9.2 கணக்காளர் நாயகம் அவர்களின் அறிக்கைக்கான மறுமொழி ........................................................................................105

9.3 2018.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைகள் தொடர்பான அறிக்கை ........................................................................................117

9.4 2018.12.31ஆம் திகதிக்கான நிதிச்செயன்முறை தொடர்பான அறிக்கை........................................................................................119

9.5 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதிச்செயன்முறை தொடர்பான அறிக்கை ......................121

9.6 2018.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று....................122

9.7 நிதி வெளிப்பாடுகளுக்கான குறிப்புகள் ........................................................................................124

9.8 வரவு செலவு மற்றும் உண்மையான பணம் ஒப்பீடு தொடர்பான கூற்று........................................................................................128

9.9 இயல்புக்கு அமைவான செலவுகள் வேறாக்கம் ........................................................................................129

9.10 முன்னைய 5 ஆண்டுகளில் நிதிசார் சிறப்பம்சங்கள் ........................................................................................130

A ஆய்வு புத்தாக்கம் மற்றும் வெளியீடுகளின் விபரங்கள் ( ஆங்கில மொழியின் இணைப்புப் பகுதியின் பக்க இலக்கம் 110-150 களில் உள்ளடக்கப்பட்டுள்ளன)………………………..132

B கல்விசார் / கல்விசார் அலுவலர்கள் விபரங்கள் - 2018 ........................................................................................133

கல்விசாரா அலுவலர்கள் விபரங்கள் - 2018 ........................................................................................135

# பகுதி 1 – பொது

## 1.0. பொது

### 1.1 மீள்நோக்கு




இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது, 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகங்கள் சட்ட இல. 16 இன் பிரிவு 23 (1) , பிரிவு 18 இன் கீழும் அதன்பின்னர் 1983 ஆம் ஆண்டின் இலங்கை திறந்த பல்கலைக்கழக கட்டளைச் சட்டங்கள் இல. 01, 1996 ஆம் ஆண்டின் இல. 12 என திருத்தியமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் இலங்கை திறந்த பல்கலைக்கழக கட்டளைச்சட்ட இல.03 இன் கீழும் திறந்த தொலைதூரக் கற்றல் பல்கலைக்கழகமாக 1980 ஆடி 19 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. உயர் கல்விக்கான அணுகுமுறையினூடாக வாழ்நாள் வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு பிரசையினதும் வாழ்நாள் கல்வியினையும் உரிமையையும் உறுதிப்படுத்தல்' இம் முன்னெடுப்பின் இறுதி நோக்கங்களில் ஒன்றாகும்.

திறந்த பல்கலைக்கழகமானது, இலங்கையிலுள்ள ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களைப் போன்று ஒரேமாதிரியான சட்ட,நிறுவன, கல்விசார் அந்தஸ்தினை அனுபவித்துவரும் பதினைந்து தேசிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். எனினும், வயது, முன்தகைமைகள், வருமானம், புவியியல் மற்றும் வேலைவாய்ப்புத் தடைகளைக் கருத்திற்கொள்ளாமல் உயர் கல்விக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் பொருட்டு திறந்த தூர கற்றல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இது ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து வேறுபடுகின்றது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது, கல்வி, பொறியியல் தொழில்நுட்பம், சுகாதார விஞ்ஞானம், மானுடவியலும் சமூக விஞ்ஞானமும், இயற்கை விஞ்ஞானம் ஆகிய ஐந்து பீடங்களையும், இருபத்தைந்து கல்விசார் துறைகளையும் கொண்டுள்ளது. கற்றலில் ஈடுபட்டுவரும் 39,908 மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய 64 கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றது. இதுதவிர, பல்கலைக்கழகமானது கேள்வி அதிகமாக இருக்கும் குறுகியகால கற்கைநெறிகளையும் வழங்குகின்றது. அதன் 62 கற்கை நிகழ்ச்சித் திட்டங்களில் 19 சான்றிதழ் கற்கைநெறிகள், 09 தகைமைச் சான்றிதழ் கற்கைநெறிகள், 16 இளமாணி கற்கைநெறிகள், 05 பட்டப்பின்படிப்பு தகைமைச் சான்றிதழ்

கற்கைநெறிகள், 13 முதுமாணிப்பட்ட கற்கைநெறிகள், 01 அடிப்படை நிகழ்ச்சித்திட்டம் மற்றும், குறிப்பிட்ட பட்டக்கற்கைகளுக்கான தேவைப்பாடுகளின் அடிப்படையில் பல எண்ணிக்கையான கற்கை நெறிகளுடன் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வழங்கப்படும் StART@ உள்ளடங்களாக 4 தனியாக நிற்கும் கற்கை நெறி சாராப் பயிற்சிக் கூறுகள் என்பன உள்ளடங்கும்.

அத்துடன் முதுதத்துவமாணி மற்றும் கலாநிதி நிகழ்ச்சித்திட்டங்களும் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது, பணிபுரியும் வயதுவந்தோர், பாரம்பரிய பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டவர்கள் ஆகியோர்களுக்கு மாற்றுவழிகளை வழங்குவதன் மூலம் உயர் கல்வித் துறைக்கான குறிப்பிடத்தக்களவு கடப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இணைந்துகொள்வதற்கான கொள்கை பின்வருவோரை தாம் விரும்பிய துறைகளில் மூன்றாம் மட்ட கல்வியினைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கின்றது.

- தொடர்ந்து தொழில்சார் விருத்தியை மேற்கொள்ள விரும்பும் பணியாற்றும் தரப்பினர்.
- நிதிக் காரணிகள், குடும்ப அர்ப்பணிப்புக்கள், போட்டித் தன்மையுள்ள புள்ளிகளை அடைந்துகொள்ள முடியாமை காரணமாக பாரம்பரிய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதியைப் பெற முடியாத உயர் தரத்தை முடித்துக்கொண்டவர்கள்.
- ஏனைய காரணங்களுக்காக அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டி இருப்பவர்கள்.

## 1.2 ஆளுகை அதிகார சபை

| | |
|---|---|
| **பல்கலைக்கழகத்தின் வேந்தர்:** | வித்யயோதி. பேராசிரியர்.கொல்வின் குணரத்தின |

**பல்கலைக்கழகத்தின் பேரவை:**

**பதவிவழி உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| துணை வேந்தர்: | பேராசிரியர்.எஸ்.ஏ.அரியதுரை |
| பிரதி துணை வேந்தர்: | பேராசிரியர்.ஜீ.எம்.கே.பி.குணஹேரத் |

**பீடங்களின் பீடாதிபதிகள்**

| | |
|---|---|
| கல்வி: | பேராசிரியர்.பீ.சி.பீ ஜவ்பர்<br>பேராசிரியர்.எஸ். பீ.கருணாநாயக்க<br>(04.03.2018 இலிருந்து) |
| பொறியியல் தொழில்நுட்பம்: | கலாநிதி.கே.ஏ.சி.உதயகுமார்<br>பேராசிரியர்.டீ.ஏ.ஆர்.தொலகே<br>(07.07.2018 இலிருந்து) |
| சுகாதார விஞ்ஞானம்: | பேராசிரியர்.ஜீ.ஆர்.ரணவக்க |
| மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் : | கலாநிதி.என்.எஸ்.அபேசிங்க |
| இயற்கை விஞ்ஞானங்கள்: | பேராசிரியர்.எல்.கே.சேனரத்தின<br>பேராசிரியர்.ஜே.சி.என்.ராஜேந்திரா<br>(17.10.2018இலிருந்து) |

**மூதவையினால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் :**

பேராசிரியர்.ஜே.சி.என்.ராஜேந்திரா
பேராசிரியர்.கே.எஸ்.வீரசேகர(16.10.2017இல் இருந்து)
பேராசிரியர்.எச்.ரீ.ஆர்.ஜயசூரிய

**உயர்கல்வி அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்**

திருமதி.எம்.எம்.கிரிஷாந்தி

**தகவல் இராஜாங்க அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்**

திருமதி டீ.பி.யூ வெலரத்தின

**துணை வேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்**

பேராசிரியர்.எஸ்.ஜு.ஜே.என் சேனநாயக்க

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்**

பேராசிரியர்.என்.ஆர்.அத்தநாயக்க (31.03.2018 வரை)
பேராசிரியர்.எஸ்.கருணாரத்தின (31.03.2018 வரை)
கலாநிதி.டப்ள்யூ.எம்.கே.விஜேதுங்க(31.03.2018 வரை)
திரு.விஜித யாப்பா (31.03.2018 வரை)
திரு.நிஷான் பிறேமரத்தின (31.03.2018 வரை)
பேராசிரியர்.லலிதா மெண்டிஸ்

பேராசிரியர்.ரஞ்சித்.நந்தலால் பத்திரண
கலாநிதி.அநுர ஏக்கநாயக்க
திரு.அத்தாஉத ஜயவர்த்தன
பேராசிரியர்.ஆனந்த ஜயக்கொடி (19.04.2018)
பேராசிரியர்.ஒலிவர் அபேநாயக்க
(19.04.2018 இலிருந்து 25.07.2018 வரை )
பேராசிரியர்.ஆர்.ஷெரிஃப் (19.04.2018 இலிருந்து)
பேராசிரியர்.யாசஸ்.டீ.சில்வா(19.04.2018 இலிருந்து)
திரு.என். செல்வகுமாரன் (19.04.2018இலிருந்து)
திரு.பேர்னாட்.வசந்த(19.04.2018இலிருந்து)

## பல்கலைக்கழகத்தின் மூதவை:

**பதவிவழி அலுவலக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| துணை வேந்தர்: | பேராசிரியர்.எஸ்.ஏ.அரியதுரை |

**பீடங்களின் பீடாதிபதிகள்**

| | |
|---|---|
| கல்வி: | பேராசிரியர்.எஸ்.பீ.கருணாநாயக்க |
| பொறியியல் தொழில்நுட்பம்: | பேராசிரியர்.டீ.ஏ.ஆர்.தொலகே |
| சுகாதார விஞ்ஞானங்கள்: | பேராசிரியர்.கயா.ஆர்.ரணவக்க |
| மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் : | கலாநிதி.என்.எஸ்.அபேசிங்க |
| இயற்கை விஞ்ஞானங்கள்: | பேராசிரியர்.ஜே.சி.என்.ராஜேந்திரா |

**பணிப்பாளர்கள்**

| | |
|---|---|
| பதில் பணிப்பாளர்/க.தொ.ஊ.நி: | கலாநிதி.டபிள்யூ.வீ.ஜே.பெரேரா |
| பதில் பணிப்பாளர் /பி.க.சே: | கலாநிதி.கே.எச்.ஜயவர்த்தன |
| பணிப்பாளர் /ஆ.ப.க.நி: | கலாநிதி.எச்.ரம்புக்கல |

**துறைகளின் தலைவர்கள்**

| | |
|---|---|
| தலைவர்/ முன்பிள்ளை மற்றும் ஆரம்பக் கல்வி: | செல்வி.டீ.எம்.டபிள்யூ.முனசிங்க |
| தலைவர்/இரண்டாம் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி: | கலாநிதி.டபிள்யூ.எம்.எஸ்.வனசிங்க |
| தலைவர் /விசேட தேவைகள் கல்வி: | கலாநிதி.கே.ஏ.சி.அல்விஸ் |
| தலைவர்/ விவசாயம் மற்றும்: பயிர்ச்செய்கை விஞ்ஞானம்: | கலாநிதி.எச்.கே.எல்.கே.கோணசேகர |

| | |
|---|---|
| தலைவர்/ புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம் மற்றும் புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்ப பேராசிரியர்: | கலாநிதி.எம்.ஈ.ஆர்.பெரேரா |
| தலைவர் /குடியியல் பொறியியல்: | திரு.எம்.என்.சீ.சமரவிக்கிரம |
| தலைவர்/ இலத்திரனியல் மற்றும் கணினி பொறியியல்: | கலாநிதி கே.ஜீ.எச்.யூ.டபிள்யூ. ரத்நாயக்க |
| தலைவர்/கணிதம் மற்றும் மெய்யியல் பொறியியல்:: | சி.பி.எஸ்.பத்திரண |
| தலைவர் /இயந்திரப் பொறியியல்: | கலாநிதி.டீ.எச்.ஆர்.ஜே.விமலஸ்ரீ |
| தலைவர்/மொழிக் கற்கைகள்: | கலாநிதி.கே.ஆர்.எம்.டீ.சில்வா |
| தலைவர் /சமூகக் கற்கைகள்: | கலாநிதி.எஸ்.என்.மொறைஸ் |
| தலைவர் /சட்டக் கற்கைகள்: | திரு.டபிள்யூ.டீ.ஆர்.டீ.குணரத்தன |
| தலைவர் /முகாமைத்துவ கற்கைகள்: | திரு.வீ.சிவலோகதாசன் |
| தலைவர் /கணிதம்: | செல்வி.எம்.ஏ.பி.டீ.சில்வா |
| தலைவர் /கணினி விஞ்ஞானம்: | திரு.டபிள்யூ.பி.சீ.டீ.சில்வா |
| தலைவர் /பௌதீகவியல்: | கலாநிதி.கார்த்திகேயன் |
| தலைவர் / இரசாயனவியல்: | கலாநிதி.செந்தில்நிதி |
| தலைவர் / தாவரவியல்: | கலாநிதி.எச்.எல்.டீ.வீரஹேவா |
| தலைவர் / விலங்கியல்: | கலாநிதி.என்.என். புஞ்சிஹேவா |
| தலைவர் / மருந்தியல் ஆய்வுகூட விஞ்ஞானங்கள்: | கலாநிதி.கே.ஏ.ஸ்ரீயாணி |
| தலைவர் / மருந்தகம்: | செல்வி.பீ.டபிள்யூ.ஜீ.டீ.பீ.சமரசேகர |
| தலைவர் / தாதியியல்: | கலாநிதி.டபிள்யூ.என்.பிரியாந்தி |
| தலைவர் /அடிப்படை விஞ்ஞானங்கள்: | திரு.எம்.ஆர்.எம்.ஹணீ∴பா |
| தலைவர் /உளவியல் மற்றும் ஆலோசனை: | கலாநிதி.ஜீ.பீ.கமகே |

**சிரேஷ்ட பேராசிரியர்கள்**

| | |
|---|---|
| இரசாயனவியலில் சிரேஷ்ட பேராசிரியர்: | பேராசிரியர்.ஜீ.எம்.கே.பி குணஹேரத் |
| இரசாயனவியலில் சிரேஷ்ட பேராசிரியர்: | பேராசிரியர்.கே.எஸ்.டீ.பெரேரா |
| விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கைப் பொறியியலில் சிரேஷ்ட பேராசிரியர் : | பேராசிரியர்.சீ.எஸ்.டீ.சில்வா |
| சிவில் பொறியியலில் சிரேஷ்ட பேராசிரியர் : | பேராசிரியர்.கே.எஸ்.வீரசேகர |

சிவில் பொறியியலில் சிரேஷ்ட பேராசிரியர்: பேராசிரியர்.ரீ.எம்.பெல்லவத்த

விலங்கியலில் சிரேஷ்ட பேராசிரியர்: பேராசிரியர்.எச்.ரீ.ஆர்.ஜெயசூரிய

**பேராசிரியர்கள்**

தாவரவியல் பேராசிரியர் : பேராசிரியர் எல்.கே.செனரத்

இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி பேராசிரியர்: பேராசிரியர்.பீ.சி.பி. ஜவ்பர்

சட்டக் கற்கைகள் பேராசிரியர்: பேராசிரியர்.சீ.ஈ.குணரத்ண

புவியியல் பேராசிரியர் : பேராசிரியர்.ஜீ.டபிள்யூ.ஏ.ஆர் பெர்ணான்டோ

பௌதீகவியல் பேராசிரியர்: பேராசிரியர்.ஜே.சீ.என்.ராஜேந்திர

இரசாயனவியல் பேராசிரியர்: பேராசிரியர்.எஸ்.எஸ்.இக்பால்

இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி பேராசிரியர்: பேராசிரியர்.ஜீ.டீ.லேகம்கே

பௌதீகவியல் பேராசிரியர்: வீ.பீ.எஸ்.பெரேரா

புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்ப பேராசிரியர் : பேராசிரியர்.சீ.என்.ஹேரத்

தாவரவியல் பேராசிரியர் : பேராசிரியர்.எஸ்.ஆர்.வீரக்கோன்

இரசாயனவியல் பேராசிரியா: பேராசிரியர்.சமன் சேனாநாயக்க

முகாமைத்தவ கற்கைகள் பேராசிரியர்: பேராசிரியர்.என்.அபேசேகர

**நூலகர்**

நூலகர்: கலாநிதி.டபிள்யூ.செனவிரத்தின

**பீட பிரதிநிதிகள் ;**

பிரதிநிதி/கல்விப் பீடம்: கலாநிதி.எஸ்.குகமூர்த்தி

பிரதிநிதி/கல்விப் பீடம்: செல்வி.சீ.ஹேவாப்பத்திரண

பிரதிநிதி/பொறியியல் தொழில்நுட்ப பீடம் : செல்வி.ரி.எம்.டீ.என்.ரீ.மெதகெதர

பிரதிநிதி/பொறியியல் தொழில்நுட்ப பீடம் : செல்வி.எச்.பஸ்கால்

பிரதிநிதி/மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்: கலாநிதி.பி.எம்.பீ.மெண்டிஸ்

பிரதிநிதி/மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்: கலாநிதி.என். அபேசேகர

பிரதிநிதி/இயற்கை விஞ்ஞானங்கள் பீடம்: கலாநிதி.எஸ்.கே.விஜேசேகர

பிரதிநிதி/இயற்கை விஞ்ஞானங்கள் பீடம்: செல்வி.டபிள்யூ.சீ.உதுவெல்ல

பிரதிநிதி/சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்: கலாநிதி.ஓ.கே.டீ.யூ.பீ.நிஷாந்த

| | |
|---|---|
| பிரதிநிதி/சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்: | கலாநிதி.டீ.ரீ.விஜேரத்தின |

**அழைப்பில் வருகை தந்தோர்**

| | |
|---|---|
| பணிப்பாளர்/தொழில் வழிகாட்டல் அலகு: | செல்வி.ஏ.எல்.கே.ஏ.ஏக்கநாயக்க |
| பணிப்பாளர் / அலுவலர் அபிவிருத்தி நிலையம் : | கலாநிதி.டீ.டீ.எம்.ரணசிங்க |
| தலைவர்/சுற்றாடல் கற்கைகள் மற்றும் நிலைபேண் அபிவிருத்தி: | கலாநிதி.ரீ.கே.வீரசிங்க |

**செயலாளர்**

| | |
|---|---|
| பிரதிப் பதிவாளர் /கல்விசார் நிர்வாகம் : | திரு பீ.கே.செனவிரத்தின |

## பல்கலைக்கழக அலுவலர்கள்:

| | |
|---|---|
| துணை வேந்தர்: | பேராசிரியர்.எஸ்.ஏ.அரியதுரை |
| பிரதித் துணை வேந்தர் : | பேராசிரியர்.யீ.எம்.கே.பி. குணஹேரத் |
| பதிவாளர் : | திருமதி.டபிள்யூ.எல்.வீ ஜயசேன |
| பீடாதிபதி/இயற்கை விஞ்ஞானங்கள்: | பேராசிரியர். ஜே.சீ.என்.ராஜேந்திர |
| பீடாதிபதி/மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் : | கலாநிதி.என்.எஸ்.அபேசிங்க |
| பீடாதிபதி/பொறியியல் தொழில்நுட்பம் : | பேராசிரியர்.டீ.ஏ.ஆர்.தொலகே |
| பீடாதிபதி/கல்வி : | பேராசிரியர்.எஸ்.பீ.கருணாநாயக்க |
| பீடாதிபதி/சுகாதார விஞ்ஞானங்கள் : | பேராசிரியர்.ஜீ.ஆர்ஆர்.ரணவக்க |
| நூலகர் : | கலாநிதி.டபிள்யூ.செனவிரத்தின |
| நிதியாளர் : | திரு.டபிள்யூ.எம்.கே.ஜீ.ஏ.விக்கிரமசிங்க |
| க.தொ.ஊ.நி பதில் பணிப்பாளர்: | கலாநிதி.டபிள்யூ.வீ.ஜே.பெரேரா |
| பிராந்திய கல்விச் சேவைகள் பதில் பணிப்பாளர்: | கலாநிதி.கே.எச்.ஜெயவர்த்தன |

# பகுதி 2 - அலுவலர்

# 2.0. அலுவலர்

## 2.1 ஒழுங்கமைப்பு வரைபடம்

திறந்த பல்கலைக்கழக நிர்வாகக்கட்டமைப்பானது (உரு 2) பணிப்பாளர்கள் /பிராந்தியக் கல்விச் சேவைகள், கல்விசார் தொழில்நுட்பம் மற்றும் ஊடகம் மற்றும் திறந்த தொலைக்கல்விப் பல்கலைக்கழகங்களுக்கே உரித்தான தொழிற்பாடுகள், போன்ற மேலதிக பதவி நிலைகள் தவிர்த்து, மரபு வழிசார்ந்த பல்கலைக்கழகங்களை ஒத்தவையாகவே உள்ளது. வேந்தர் பதவியானது கௌரவமானதாக அமைந்துள்ள அதேவேளை துணைவேந்தர் பிரதான நிறைவேற்று அலுவலராக உள்ளார். பதிவாளர் அதன் பொது நிருவாகத்திற்கும், பதிவேடுகள் பாதுகாப்பு மற்றும் பல்கலைக்கழகச் சொத்துக்கள் என்பவற்றிற்கு பொறுப்புடையவராவார். பீடங்களின் பணிப்பாளர்கள், கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையத்தின் பணிப்பாளர், பிராந்தியக் கல்விச் சேவைகளின் பணிப்பாளர், நூலகர் மற்றும் நிதியாளர் ஆகியோர் பல்கலைக்கழகத்தின் ஏனைய அலுவலர்களாவர்.




உரு 2: இலங்கை திறந்த பல்கலைக்கழக ஒழுங்கமைப்பு கட்டமைப்பு

## 2.2 அலுவலர் விபரங்கள்

மாணவர் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யவென கல்விசார் நிர்வாக அதிகாரிகள் (நிரந்தரம்) 337, கல்விசாரா நிர்வாக அதிகாரிகள்(80) கல்விசாரா நிர்வாகம்சாரா அதிகாரிகள் 611 மற்றும் கல்விசார் உதவியாளர்கள் 189 என 2018 இன் அதிகாரிகள் பலம் அமைந்துள்ளது.

### 2.2.1 கல்விசார் அலுவலர்கள்

| **பதவி** | **கல்வி** | **பொறியியல் தொழில்நுட்பம்** | **சுகாதார விஞ்ஞானங்கள்** | **மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள்** | **இயற்கை விஞ்ஞானங்கள்** | **பிராந்திய கல்விச் சேவைகள்** | **கல்வி தொழில் நுட்பம் மற்றும் ஊடக நிலையம்** |
|---|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட பேராசிரியர்கள் | | 04 | - | 01 | 03 | - | - |
| பேராசிரியர்கள் | 03 | 03 | - | 02 | 08 | - | - |
| இணை பேராசிரியர்கள் | - | - | - | 01 | 02 | - | - |
| சிரேஷ்ட விரிவுரையாளர் தரம். I | 03 | 27 | 02 | 17 | 21 | 01 | 01 |
| சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்.II | 21 | 19 | 10 | 22 | 30 | 07 | 01 |
| விரிவுரையாளர் | - | 08 | 1 | 09 | 13 | 04 | |
| விரிவுரையாளர் (தகுதிகாண்) | 09 | 23 | 17 | 20 | 10 | 02 | 02 |
| **மொத்தம்** | **36** | **84** | **30** | **72** | **87** | **14** | **04** |

**அட்டவணை 1: கல்விசார் அலுவலர்கள்**

### 2.2.2 கல்விசார் ஆதரவு அலுவலர்கள்

| **பதவி** | **கல்வி** | **பொறியியல் தொழில் நுட்பம்** | **சுகாதார விஞ்ஞானங்கள்** | **மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள்** | **இயற்கை விஞ்ஞானங்கள்** | **தகவல் தொழில் நுட்பம்** | **பிராந்திய கல்விச் சேவைகள்** | **கல்வி தொழில் நுட்பம் மற்றும் ஊடக நிலையம்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| பொறியியல் கற்பித்தல் உதவியாளர் | - | 02 | - | - | - | - | 06 | - |
| கல்வி உதவியாளர் | - | 01 | - | 01 | 02 | - | 02 | - |
| தற்காலிக விளக்கவுரையாளர் | 03 | 44 | 21 | - | 58 | - | 24 | 09 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆய்வு உதவியாளர் கள் | 02 | 05 | - | - | - | - | - | - |
| தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் | - | - | - | - | 01 | 08 | - | - |
| **மொத்தம்** | **05** | **52** | **21** | **01** | **61** | **08** | **32** | **09** |

**அட்டவணை 2 : கல்விசார் உதவி அலுவலர்கள்**

### 2.2.3 நூலக அலுவலர்கள்

| **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|
| நூலகர் | 01 |
| பிரதி நூலகர் | 01 |
| சிரேஷ்ட உதவி நூலகர்கள் | 06 |
| உதவி நூலகர்கள் | 02 |
| உதவி பதிவாளர் / நூலகம் | 01 |
| நூலக தகவல் உதவியாளர்கள் | 20 |

**அட்டவணை 3 : நூலக அலுவலர்கள்**

### 2.2.4 நிர்வாக அலுவலர்கள்:

| **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|
| பதிவாளர் | 01 |
| நிதியாளர் | 01 |
| பிரதி பதிவாளர் | 01 |
| பிரதி நிதியாளர் | 01 |
| சிரேஷ்ட உதவி பதிவாளர்கள் | 07 |
| சிரேஷ்ட உதவி நிதியாளர்கள் | 03 |
| சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| உதவி பதிவாளர்கள் | 09 |
| உதவி நிதியாளர்கள் | 02 |
| உதவி உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| **மொத்தம்** | 27 |

**அட்டவணை 4: நிர்வாக அலுவலர்கள்**

## 2.2.5 ஏனைய நிறைவேற்று அதிகாரிகள்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதான நிறைவேற்று அலுவலருக்கான சிரேஷ்ட அந்தரங்க செயலாளர் | 01 |
| புள்ளிவிபரவியல் அலுவலர் | 01 |
| பிரதம பாதுகாப்பு அலுவலர் | 01 |
| இலத்திரனியல் பொறியியலாளர் | 02 |
| பயிற்சிப் பொறியியலாளர் | 01 |
| பிரதான தொழில்நுட்ப அலுவலர் | 02 |
| பதவிநிலை தொழில்நுட்ப அலுவலர் | 02 |
| சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் | 01 |
| உதவிப் பணிப்பாளர் | 22 |
| விளக்கவுரைஞர் | 01 |
| ஒலி-ஒளி தொழில்நுட்ப அலுவலர் (உயர் தரம்) | 10 |
| வேலைகள் பொறியியலாளர் (குடியியல்)-II | 02 |
| பல்கலைக்கழக மேற்பார்வையாளர் | 01 |
| உதவி அச்சகர் | 01 |
| பணிப்பாளர் / தகவல் தொழில்நுட்பம் | 01 |
| தகவல் முறைமைகள் முகாமையாளர் | 01 |
| பிரதி தகவல் முறைமைகள் முகாமையாளர் | 01 |
| பணிப்பாளர்/ செயற்பாட்டுப் பிரிவு | 01 |
| வேலைப்பட்டறை பொறியியலாளர் | 01 |
| மொத்தம் | **53** |

**அட்டவணை 5 : ஏனைய நிறைவேற்று அலுவலர்கள்**

## 2.2.6 கல்விசாரா அலுவலர்கள்:

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் | 341 |
| திறன்சார் தரங்கள் | 140 |
| சிற்றூளியர்கள் | 130 |
| **மொத்தம்** | **611** |

**அட்டவணை 6 : ஏனைய நிறைவேற்று அலுவலர்கள்**

சிற்றூளியர்கள்- வேலைகள் உதவியாளர்கள், அலுவலக இயந்திர செயற்படுத்துனர்கள் பின்னிணைப்பில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அனைத்து அலுவலர்களினதும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

# பகுதி 3
# மாணவர் ஆற்றுகைகள்

## 3.0. மாணவர் ஆற்றுகைகள்

## 3.1 உள்ளீர்ப்புக்கள்

### 3.1.1 உள்நாட்டு மாணவர்கள்

START @ OUSL நிகழ்ச்சித்திட்டத்திற்கென பதிவு செய்த மாணவர்கள் உட்பட 2018 ஆம் ஆண்டில் மாணவர்களின் அனுமதியானது **39940** ஆக இருந்தது.

| உள்ளீர்ப்பு மட்டம் | பீடம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பொறியியல் தொழில்நுட்பம் | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் | கல்வி | இயற்கை விஞ்ஞானம் | சுகாதார விஞ்ஞானம் | ஓ.யூ.எஸ்.எல் | மொத்தம் |
| சான்றிதழ் | 144 | 3039 | 608 | 04 | - | - | **3795** |
| தகைமைச் சான்றிதழ் | 120 | 284 | 1138 | 86 | - | - | **1628** |
| பட்டம் | 5208 | 11090 | 328 | 3841 | 3986 | - | **24453** |
| பட்டப்பின் பட்டம் | 30 | - | 3959 | - | - | - | **3989** |
| முதுமாணி | 15 | 426 | 651 | 110 | - | - | **1202** |
| StART@OUSL* | - | - | - | - | - | 3866 | **3866** |
| ஏனையவை | 02 | - | - | 03 | - | 970 | **975** |
| முதுதத்துவ மாணி, கலாநிதி | 08 | 06 | 05 | 12 | 01 | - | **32** |
| மொத்தம் | **5522** | **14845** | **6689** | **4056** | **3987** | **4836** | **39940** |

**அட்டவணை 7 - 2018 இன் மாணவர் உள்ளீர்ப்பு -உள்நாடு**

### 3.1.2 வெளிநாட்டு மாணவர்கள்:

| பீடம் | நிகழ்ச்சித் திட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|
| மானிடவியல் மற்றும் சமூகவியல் விஞ்ஞானங்கள் | சமூக விஞ்ஞானங்களில் உயர் சான்றிதழ் | 01 |
| | இளைஞர் அபிவிருத்தி பணிகளில் தகைமைச் சான்றிதழ் | 01 |
| | சமூக விஞ்ஞானங்களில் இளமாணிப்பட்டம் | 01 |
| | தமிழில் ஆரம்பிப்போருக்கான கற்கைநெறி | 01 |
| | வணிகம் / பொது நிர்வாகம் பொதுநலவாய நிறைவேற்று முதுமாணி | 01 |
| கல்வி | ஆசிரியர் கல்வியில் முதுமாணி(சர்வதேசம்) | 01 |
| இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | Start@ OUSL | 02 |

**அட்டவணை 8 – 2018 இல் மாணவர் உள்ளீர்ப்பு - வெளிநாடு**

## 3.2 பூரணப்படுத்தல்கள்

### 3.2.1. பட்டமளிப்பு

30 மற்றும் 31 வது பொதுப்பட்டமளிப்பு விழாவானது 12,13 ஆனி 2018 மற்றும் 14 கார்த்திகை 2018 ஆகிய இரு தினங்களில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றதுடன், கலாநிதி.டபிள்யூ.ஏ.விஜேவர்த்தன, கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்தின, பேராசிரியர் ரொர்ஸ்டன் ஹென்றி பிரான்சன், மற்றும் வேந்தர்.வித்யஜோதி. பேராசிரியர் கொல்வின் குணரத்தின ஆகியோரால் பட்டமளிப்பு உரைகள் நிகழ்த்தப்பட்டன. பட்டக்கற்கைகள், முதுமாணிப்பட்டக்கற்கைகள் மற்றும் கலாநிதிப்பட்டம் உள்ளிட்ட 4,765 பட்டங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

| **பீடம்** | **கலாநிதி** | **முதுதத்துவ மாணி** | **முதுமாணி** | **பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்** | **பட்டம்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| கல்வி | 01 | - | 65 | 2651 | 80 | **2797** |
| பொறியியல் தொழில்நுட்பம் | 02 | 01 | 03 | 06 | 229 | **241** |
| சுகாதார விஞ்ஞானம் | - | - | - | - | 247 | **247** |
| மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் | 01 | - | 98 | 18 | 1025 | **1142** |
| இயற்கை விஞ்ஞானங்கள் | - | 03 | 11 | 06 | 366 | **386** |
| ஆங்கிலப் பட்டப்பின் கற்கை நிறுவனம் | - | - | 09 | 04 | - | **13** |
| **மொத்தம்** | **04** | **04** | **186** | **2685** | **1947** | **4826** |

**அட்டவணை 9 –பட்டமளிப்பில் பீடத்தால் வழங்கப்பட்ட விருதுகள்**

## 3.2.2. விருது வழங்கல் வைபவங்கள்

சான்றிதழ் மற்றும் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கிவைப்பதற்கான விருதுவழங்கல் விழாவானது ஏழு பிராந்திய நிலையங்களிலும் 2018 புரட்டாதி இடம்பெற்றதுடன் அங்கு மொத்தமாக 2910 மாணவர்கள் பல்வேறு சான்றிதழ் மற்றும் தகைமைச் சான்றிதழ் என்பவற்றினைப் பெற்றுக் கொண்டனர். குறித்த புள்ளிவிபரங்கள் அட்டவணை 10 இல் தரப்பட்டுள்ளன.

| **விருதின் வகை பீடம்** | **உயர்தகைமைச் சான்றிதழ்** | **தகைமைச் சான்றிதழ்** | **மேலதிக சான்றிதழ்** | **சான்றிதழ்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| கல்வி | - | 270 | 79 | 295 | 644 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 242 | 24 | - | 43 | 309 |
| மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் | - | 361 | 525 | 517 | 1403 |
| இயற்கை விஞ்ஞானங்கள் | - | 22 | - | 02 | 24 |
| மொத்தம் | **242** | **677** | **604** | **907** | **2380** |

**அட்டவணை 10 - பீடத்தினால் விருதுவழங்கல் வைபவத்தில் வழங்கப்பட்ட விருதுகள்**

## 3.3 மாணவர் சாதனைகள்

மாணவர் நலன்புரி அலகானது வேறுபட்ட பின்புலங்களில் இருந்து வந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர்களின் திறன்களை வெளிக்கொணர்வதும் குழுவாக செயற்பட உதவுவதுமான செயற்பாடுகளில் ஈடுபடுவதனை ஊக்குவிக்கின்றது. இந்த முயற்சிகளின் காரணமாக, பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள்ளும் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயும் விளையாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு பரிசில்களை வென்றெடுத்துள்ளனர்.

இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தினுள் அவர்களுடைய விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக உடற் கல்வி அலகிற்கு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பல்கலைக்கழகத்தினுள் விளையாட்டு சார்ந்த செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கான பௌதீக உட்கட்டுமானங்களை விருத்தி செய்தவற்கு பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

## <u>பொதுப் பட்டமளிப்பு 2017 இல் வழங்கப்பட்ட தங்கப் பதக்கங்கள் மற்றும் பரிசில்கள்</u>

### தங்கப் பதக்கங்கள்

கல்வியில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழில் சிறந்த ஆற்றுகைக்கான ஜே.ஈ.ஜயசூரிய தங்கப் பதக்கம்-2016

வழங்கி வைத்தவர் : திருமதி.டீ. ஜயசூரிய

பெற்றுக் கொண்டவர் :அணிஷா ஷாணிக்க றம்புக்கல

தாதியியல் விஞ்ஞானமாணியில் சிறந்த செயற்பாட்டிற்காக அதபாஸ்கா பல்கலைக்கழக தங்கப் பதக்கம் -2017

வழங்கி வைத்தவர் : தலைவர்,அதபாஸ்கா பல்கலைக்கழகம்,கனடா

பெற்றுக் கொண்டவர் : செல்வி.கே.எம்.ஆர்.பிரியதர்சி தர்மரத்தின

சட்டத்திற்கான கிருஷாந்தி விஜேதுங்க டீ.சில்வா ஞாபகார்த்த தங்கப்பதக்கம்-2016

வழங்கி வைத்தவர் : ஜவர் விஜேதுங்க

பெற்றுக் கொண்டவர் : செல்வி.எம்.எம்.ஜு.சத்துரா மன்னப்பெரும

சமூக விஞ்ஞான இளமாணிப் பட்டத்தில் வெகுசன ஊடகத்தில் சிறந்த மாணவருக்கான அனுர குணசேகர தங்கப்பதக்கம்-2017

வழங்கி வைத்தவர் : திருமதி.ஜே.குணசேகர

பெற்றுக் கொண்டவர் : செல்வி.ரம்புக்கண லியணகே சுவாணி மிஹிசர

சமூக விஞ்ஞான இளமாணிப் பட்டத்தில் பொருளியலில் சிறந்த செயற்பாட்டிற்காக எச்.ஏ.டீ.எஸ்.குணசேகர தங்கப்பதக்கம்-2017

வழங்கி வைத்தவர் : பேராசிரியர்.எஸ்.எஸ்.கொலம்பகே

பெற்றுக் கொண்டவர் : செல்வி ஹபுராச்சி பாக்கிய சஞ்சால பெரேரா

முகாமைத்துவ கற்கைகளில் சிறந்த செயற்பாட்டிற்காக தங்கப்பதக்கம்-2017

வழங்கி வைத்தவர் : முகாமைத்துவ கற்கைகள் துறை

பெற்றுக் கொண்டவர் : திருமதி.கே.எம்.டபிள்யூ.சதுரி.மதுஷாணி அபேரத்தின

மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான இளமாணியில் சிறந்த மாணருக்கான நந்தாணி டீ.சில்வா தங்கப்பதக்கம்

-2017

வழங்கி வைத்தவர் : சுகாதார விஞ்ஞான பீட விருதுகள் நிதி

பெற்றுக் கொண்டவர் : திரு.கே.கே.யூ.ஹர்ஷான நாத் அபேரத்தின

பொறியியலில் தொழில்நுட்பமாணி சிறப்புப் பட்டத்தில் சிறந்த மாணவருக்கான ஓ.பீ.குழ்ஷ்றேஷ்த தங்கப்பதக்கம்-2017

வழங்கி வைத்தவர் : கலாநிதி ஓ.பீ.குழ்ஷ்றேஷ்த

பெற்றுக் கொண்டவர் : திரு. தங்கவேல். அபிநாஷ்

செயற்றிட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட சிறந்த தொழில்நுட்பப் பத்திரத்திற்கான பொறியியல் ஆய்வு அலகு தங்கப்பதக்கம்-2017

வழங்கி வைத்தவர் : பொறியியல் ஆய்வு அலகு

பெற்றுக் கொண்டவர் : திரு.ரூபசின்.கட்டதிக்கே நாலகா பிரதீப் குமார

பொறியியலில் தொழில்நுட்பமாணி சிறப்புப் பட்டத்தில் சிறந்த செயற்றிட்டத்திற்கான துரைராஜா தங்கப்பதக்கம்- 2017

வழங்கி வைத்தவர் : பொறியியல் ஆய்வு அலகு

பெற்றுக் கொண்டவர் : திரு. திரு.ரூபசின்.கட்டதிக்கே நாலகா பிரதீப் குமார

பொறியியலில் தொழில்நுட்பமாணி சிறப்புப் பட்டத்தில் மெக்கற்றோணிக் பொறியியலில் சிறந்த மாணவருக்கான எஸ்.எம் அபேகுணசேகர டீ. சில்வா தங்கப் பதக்கம்- 2017

வழங்கி வைத்தவர் : பேராசிரியர் .கிளாறன்ஸ்.டபிள்யூ.டீ.சில்வா

பெற்றுக் கொண்டவர் : திரு. தங்கவேல். அபிநாஷ்

பொறியியலில் தொழில்நுட்பமாணி சிறப்புப் பட்டத்தில் சிவில் பொறியியலில் சிறந்த மாணவருக்கான எஸ்.எம் அபேகுணசேகர டீ. சில்வா தங்கப் பதக்கம்- 2017

வழங்கி வைத்தவர் : பேராசிரியர்.கொலித்த.வீரசேகர

பெற்றுக் கொண்டவர் : செல்வி.ரீ.ஏ.யூ.சஞ்யீவனி.சந்தானபெரும

பொறியியல் கற்கைகள் சிறப்பு இளமாணிப் பட்டத்தில் விவசாயத்தில் சிறந்த மாணவருக்கான லியனகுருகே.அசய்.அன்னட்டி.டீ. சில்வா தங்கப் பதக்கம்- 2017

வழங்கி வைத்தவர் : கலாநிதி.றொஷான்.டீ.சில்வா

பெற்றுக் கொண்டவர் : கே.ஜூ.ஏ.இரேசா.ரசன்ஜலி

விவசாயத்தில் தொழிற்துறை கற்கைகள் சிறப்பு இளமாணிப் பட்டத்தில் சிறந்த மாணவருக்கான லியனகுருகே.அசய்.அன்னட்டி.டீ. சில்வா தங்கப் பதக்கம்- 2017

வழங்கி வைத்தவர் : கலாநிதி.றொஷான்.டீ.சில்வா

பெற்றுக் கொண்டவர் : கே.ஜூ.ஏ.இரேசா.ரசன்ஜலி

மென்பொருள் பொறியியல் சிறப்பு இளமாணிப் பட்டத்தில் சிறப்பு செயற்பாட்டிற்கான வி்ருசா கல்விசார் தங்கப் பதக்கம்- 2017

வழங்கி வைத்தவர் : வி்ருசா பிறைவெட் லிமிற்றட்

பெற்றுக் கொண்டவர் : திரு.பதாகம குருப்புகே தறிண்டு

சமூகவியலில் சமூகவிஞ்ஞான இளமாணியிலில் சிறந்த செயற்பாட்டிற்கான காணத் ஒபேசேகர தங்கப் பதக்கம்- 2018

வழங்கி வைத்தவர் : சமூக கற்கைகள் துறை

பெற்றுக் கொண்டவர் : திருமதி. டீ.எம்.லக்ஷ்மி தனபால

சமூகவிஞ்ஞானங்களில் சிறந்த மாணவருக்கான காமினி கொரே தங்கப் பதக்கம்- 2018

வழங்கி வைத்தவர் : வி்ருசா பிறைவெட் லிமிற்றட்

பெற்றுக் கொண்டவர் : திருமதி.டீ.எம்.லக்ஷ்மி தனபால

**பரிசில்கள்**

தாதியியலில் சிறந்த செயற்பாட்டிற்கான றொபேட்டா.எல்.கறே பரிசு-2017

வழங்கி வைத்தவர் : பேராசிரியர்.றொபேட்டா.எல்.கறே

பெற்றுக் கொண்டவர் : செல்வி கண்ணிமி முதியன்சலகே ராசிக பிரியதர்ஷி தர்மரத்தின

தாதியியலில் சந்திரா டீ.சில்வா ஞாபகார்த்த விருது

வழங்கி வைத்தவர் : திரு.பீ.எல்என். டீ.சில்வா

பெற்றுக் கொண்டவர் : செல்வி கண்ணிமி முதியன்சலகே ராசிக பிரியதர்ஷி தர்மரத்தி

நீதி பரிபாலத்திற்கான அத்துலத்முதலி பரிசு-2016

வழங்கி வைத்தவர் : லலித் அத்துலத்முதலி

பெற்றுக் கொண்டவர் : திரு. திமுன்குவாரிகே சுபஷ் மதுரங்க பெனாண்டோ

: செல்வி சூரியஆராச்சிகே பாக்ய கௌஷல்யா பிறேமரத்தின

<u>**வெளி நிறுவனங்களில் இருந்து வென்றெடுக்கப்பட்ட விருதுகள்**</u>

1. இலத்திரனியல் பொறியியலில் சிறந்த பட்டதாரி செயற்றிட்டத்திற்கான பொறியியலாளர்.ஈ.டபிள்யூ. கருணாரத்திண விருது

விருதுகளைப் பெற்றுக் கொண்டோர் - திரு.எச்.பீ.டீ.எஸ்.மதுரங்க

- திரு.பீ.ஜீ.பீ.எஸ்.ஐ.பணன்கல
- திரு.ஏ.ஜீ.எம். லொகுலியனகே

- திரு.ஆர்.கே.என்.பீ.குமார

2. பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான பொறியியல் பயிற்சிக்கான மிகார ரணதுங்க நன்கொடை விருதுகள் 2017/2018

விருதுகளைப் பெற்றுக் கொண்டோர் - திருமதி.ஜுூ.எல்.ஈ.பெரேரா

- திருமதி.கே.ஏ.டீ.பீ.ஜுூ.தில்றுக்ஷி

3. முன் உணவு முன் பொதி மற்றும் அக்பிஸ் 2018 “ கண்காட்சி”

- “உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துவதான சிறந்த புத்தாக்கத்திற்கான” வெற்றியாளர்
- “மிகவும் சிறந்த புத்தாக்க படைப்பிற்கான நிறுவன ரீதியான வகைக்கான” வெற்றியாளர்
- “உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துவதான சிறந்த புத்தாக்கத்திற்கான” இரண்டாம் பரிசு
- “வர்த்தக ரீதியாக சாத்தியமான செயன்முறைக்கான” இரண்டாம் பரிசு

விருதுகளைப் பெற்றுக் கொண்டோர் - விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை துறையின் மாணவர்கள் குழுவாக இந்த கண்காட்சிகளை வழங்கினர்

**<u>ஏனையவை</u>**

1. இலங்கை திறந்த பல்கலைக்கழக கைத் தொழில் கற்கைகள் இளமாணியில் (ஆடை உற்பத்தி மற்றும் முகாமைத்துவம்) சிறந்த மாணவர்

செல்வி.எச்.எம்.ஐ.யூ.கே. நவரத்தின அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது

2. அனுர.டீ.சில்வா தங்கப் பதக்கம்- இலங்கை திறந்த பல்கலைக்கழக ஆடை உற்பத்தி மற்றும் முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழில் சிறந்த மாணவருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

எச்.எம்.டபிள்யூ.டீ.ஹேரத் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது

# பகுதி 4
# பீடங்களின் அறிக்கை

## 4.0. பீடங்களின் அறிக்கை

## 4.1 கல்விப்பீடம்

### 4.1.1 மீள்நோக்கு




திறந்த மற்றும் தொலைக்கல்வியினூடாக இலங்கையிலும் பிராந்தியத்திற்குள்ளும் அடிப்படை மானிட முயற்சியாக கல்வியின் அறிவு மற்றும் தொழில்சார் செயற்பாடுகளை விருத்தி செய்யும் தலைமைத்துவ நிறுவனமாக இருப்பதற்கு கல்விப் பீடமானது சான்றிதழ் மட்டம் தொடக்கம் பட்டப்பின் பட்டம் வரையில் விரிவான பரம்பலைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. இலங்கையில் தொலைக்கல்வி முறைமைக்கமைய முன்பள்ளி, ஆரம்பக் கல்வி, இரண்டாம் மற்றும் விசேட தேவைகள் கல்வியுடன் தொடர்புபட்ட ஆசிரியர்களுக்கு அடிப்படையான மற்றும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை வழங்கும் மிகப் பெரிய ஏற்பாட்டாளர்களில் பிரதானியாக இப் பீடத்தினை குறிப்பிட முடியும். இப் பீடத்தினால் வழங்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மாணவர்களின் உள்ளீர்ப்பானது ஒவ்வொரு கல்வியாண்டிலும் 7000 இற்கு அதிகமாக இருப்பதுடன் சித்தி வீதமானது 80% இற்கும் அதிகமாக உள்ளது.

பீடத்திற்குள் ஆராய்ச்சியானது ஒன்றிணைந்த அம்சமாக அமைவதுடன் அலுவலக உறுப்பினர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களில் துடிப்புடன் ஈடுபட்டனர்.

கல்விப் பீடமானது தற்போது பின்வரும் 3 கல்வித் துறைகளைக் கொண்டிருக்கின்றது.

1. இரண்டாம் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வித்துறை
2. முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித்துறை
3. விசேட தேவைகள் கல்வித் துறை

**இரண்டாம் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வித்துறையானது** உயர் கல்வி வாய்ப்புக்கான தகுதியைப் பெற்றும் பாரம்பரிய பல்கலைக்கழகங்களில் பயிலமுடியாத , ஆசிரிய துறையில் ஆர்வம் கொண்ட பட்டதாரிகள் அல்லாத ஆசிரியர்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கான துறைசார் தகைமைக்கான மேலதிக கல்வி வசதிகளை வழங்கும் நோக்குடன் தற்போது 10 கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றது.

**முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித்துறையானது** தற்போது 3 நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதுடன் முன்பள்ளிக் கல்வியில் புதிய கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டமும் தற்போது நடைமுறையில் உள்ளது. நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக இந்த துறையானது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கொழும்பு, கண்டி, மாத்தறை பிராந்திய நிலையங்கள் மற்றும் சிறுவர் கற்கை நிலையங்களுக்குரிய மூன்று மாதிரி முன்பள்ளிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றது.

**விசேட தேவைகள் கல்வித் துறையானது** விசேட தேவைகள் உடைய பிள்ளைகள் மற்றும் இலங்கையின் விசேட சூழ்நிலைகளில் வாழும் பிள்ளைகளின் உரிமைகளை உறுதிப்படுத்தவும் மேம்படுத்தவும் விசேட தேவைகள் கல்வித் துறையின் குறுகிய கால கற்கை நெறிகள் உள்ளடங்களாக தற்போது ஆறு கற்கை நெறிகளை வழங்குகின்றது. விசேட தேவைகள் கல்வியில் முதுகல்விமாணியில் புதிய செயற்றிட்டமும் நடைமுறையில் உள்ளது.

### 4.1.2 தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் பூரணப்படுத்தல்

| **விசேட தேவைகள் கல்வித்துறை** | | | | |
|---|---|---|---|---|
| **நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்** | **மட்டம்** | **மொழி மூலம்** | **புதிய உள்ளீர்ப்புக்கள்** | **பூரணப்படுத்தியவர்கள்** |
2017 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மற்றும் பதுளை ஆகிய பிராந்திய நிலையங்களுக்கான நிலங்களைக் கொள்முதல் செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வளங்கியுள்ளது. அதனைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் மன்னார் மற்றும் திருகோணமலை பிரதேச செயலகங்கள் இவ்விடங்களில் பிராந்திய நிலையங்களை நிறுவுவதற்காக 5 ஏக்கர் காணியினை ஒதுக்கியிருக்கின்றன.

அனுராதபுர பிராந்திய நிலையத்தின் விரிவாக்கப்பட்ட பிரதான கட்டட மற்றும் மாத்தறை பிராந்திய நிலையத்தின் புதிய நூலகக் கட்டடம் என்பன 2017 இன் நடுப்பகுதியில உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இடவசதியுடன் கூடிய விரிவுரை மண்டபங்கள், மாணவர் ஆய்வு கூடங்கள் மற்றும் மாநாட்டு மண்டபங்கள் என்பன அநுராதபுர பிராந்திய நிலையத்தின் திறனை அதிகரித்தன. மாத்தறை பிராந்திய நிலையத்தின் புதிய நூலக கட்டடமானது மாணவர்களுக்கு அதிக வசதிகளை வழங்குகின்றது.

கொழுப்பு பிராந்திய நிலையத்தின் 1-20 வரையிலான கட்டடத் தொகுதிகளின் புனருத்தாரண வேலைகள் பெருமளவுக்கு நிறைவெய்தியிருக்கின்றன. யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய புதிய கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுகாதார விஞ்ஞான

பீடத்திற்கான புதிய கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் மற்றும் பிரதான நூலக கட்டடத்தினை விரிவுபடுத்தல் என்பவற்றிற்கான வேலைகள் தேவையான அங்கீகாரங்களுடன் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பண்டாரவலை, கம்பஹா கற்கை நிலையங்கள் மற்றும் கொழும்பு பிராந்திய நிலையம் என்பவற்றிற்கான புதிய பரீட்சை நிலையங்களின் கட்டுமானப்பணிகளுக்கான திட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாத்தறை பிராந்திய நிலையத்தில் புதிய பல்- களஞ்சிய கட்டடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கான திட்டமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கண்டி மற்றும் மாத்தறை பிராந்திய நிலையங்களில் தற்காலிக வதிவிட வசதிகளை அமைப்பதற்கான திட்டம் உயர் கல்வி அமைச்சிடம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் உயர் கல்வியினைப் பெற்றுக் கொள்வதனை அதிகரிப்பதற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்துகின்ற திட்டம், கௌரவ பிரதமர் மற்றும் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடனான சந்திப்பின் போது முன்வைக்கப்பட்டது.

## 6.2 நூலகம்



இலங்கை திறந்த பல்கலைக்கழக நூலக வலையமைப்பானது நாவல பிரதான பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்திருக்கும் பிரதான நூலகம் மற்றும் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல் ஆகிய எட்டு பிராந்திய நிலையங்களில் அமைந்திருக்கும் நூலங்கள் என ஒன்பது நூலகங்களை உள்ளடக்கியிருக்கின்றது. பிரதான நூலகம், மாத்தறை மற்றும் கண்டி நிலைய நூலகங்கள் தனியான கட்டடங்களை கொண்டமைந்தவையாக காணப்படுகின்றன.

முறைமைக்குரிய புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 156047ஆகும். அச்சிடப்பட்ட மற்றும் இலத்திரனியல் பருவ இதழ்கள் 31, பல்கலைக்கழகதத்தினால் சந்தா செலுத்தி வெளியிடப்படும் இலத்திரனியல் பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் புத்தக தரவுத் தளங்களின் எண்ணிக்கை 2, ஒலி,ஒளி மூல வளங்களின் எண்ணிக்கை 3,223 ஆகும்.

இதற்கு மேலதிகமாக இலத்திரனியல் களஞ்சியப்படுத்துகை, எண்மான வாசிப்பு அறைகள், திறந்த அணுகள் எண்மான மூலங்கள், பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டிருக்கும் பாரியளவிலான தரவுத் தளங்கள் போன்ற ஆராய்ச்சி மற்றும் பாடங்களோடு தொடர்புடைய தகவல்களுக்கான இலவச அணுகலை வழங்கும் இணையத்தினை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு வளங்களும் காணப்படுகின்றன.

இலங்கை திறந்த பல்கலைக்கழக இணையத்தளத்தினூடாகவும் அனைத்து பிராந்திய நிலைய நூலகங்களிலும் இந் நிகழ்நிலை மூலங்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மொத்த நூலக முறைமைக்குரிய உறுப்பினர்களாக பதிவுசெய்திருப்போரின் எண்ணிக்கை 7961 ஆகும். ஆண்டில் விநியோகிக்கப்பட்ட சுற்றுநிருபங்களின் எண்ணிக்கை 32,314 ஆகும். ஆண்டில் நூலகத்திற்கு வருகைதந்தோரின் எண்ணிக்கை 77,843 ஆகும். 2018 ஆம் ஆண்டில் மெய்நிகர் நூலகத்தினை பயன்படுத்தியோரின் எண்ணிக்கை 164,000 ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை திறந்த பல்கலைக்கழக நூலக சேவைகளை, அதன் பயனாளிகள் வளாகத்திலும் நிகழ்நிலையாகவும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. தானியக்க நூலக முறைமையினூடாக வழங்கப்படும் பிரதான முழுநேர சேவைகளாக நூல் விநியோக சேவை மற்றும் தகவல் தேடுகை சேவை கல்விசார் விசாரணை சேவை - கரும பீடம் மற்றும் நிகழ்நிலை வாயிலாக இணைய வசதிகள் ஊடான ஆவண விநியோக சேவை, இரண்டு கணினி ஆய்வுகூடங்களினூடக மெய்நிகர் மூலங்கள் அணுகல் ˙ கணினி அணுகலுடன் கூடியதான கொத்து கற்றல் வசதிகள் மடிக்கணினி கடன் வழங்கல் சேவை, கலந்துரையாடல் அறை வசதி , குளிரூட்டப்பட்ட வாசிப்பு அறைகள் மாணவர் ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன ஆகியன அமைகின்றன.

தானியக்க சூழலில் பணிபுரிவதற்காகவும் நாடு பூராகவும் சிதறியிருக்கும் திறந்த கற்றல் சமூகத்திற்கு சேவையாற்றுவதற்கும் தேவையான பல்வேறு சேவைகளை வழங்குவதற்காகவும் தேவைப்படும் திறனைப் பெற்றுக்கொள்வதற்காக பவ்வேறு மட்டங்களில் உள்ள அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் குறிப்பாக, தகவல்களைக் கையாளுதல், கற்றல் மற்றும் ஆய்வுக்கு ஆதரவளித்தல், பொது மக்களுடனான உறவுகளைப் பேணுதல், இலத்திரனியல் மற்றும் வலைத்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட சேவைகளை உருவாக்கல் மற்றும் பேணுதல், துறை சார் மற்றும் சமூக நிகழ்வுகள் போன்றவற்றினை கையாளுதல் என்பவற்றிற்குப் பயிற்றப்பட்டுள்ளனர். ஒப்பந்த அலுவலர்கள் உள்ளடங்களாக மொத்த நூலக முறையின் அலுவலர்களின் எண்ணிக்கை 51 ஆகும்.

## 6.3 அலுவலர் அபிவிருத்தி நிலையம்




இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அலுவலர் அபிவிருத்தி நிலையமானது பல்கலைக்கழகத்தின் அலுலர்களின் திறன்களை மேம்படுத்துதவற்காக கல்விசார் மற்றும் நிர்வாக வேலைகளை மேம்படுத்தவும் ஆதரவளிக்கவும் நிறுவப்பட்டது. ஆகவே அலுவலர் அபிவிருத்தி நிலையமானது பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் வினைதிறனாக தொழிற்படப் தேவையான திறன்களையும், ஆளுமைகளையும் விருத்தி செய்து கொள்வதற்கான பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் வேலைத்திட்டங்களையும் ஒழுங்குசெய்து வளப்படுத்தி வருகின்றது.

அலுவலர் அபிவிருத்தி நிலையத்தின் முக்கிய நிகழ்ச்சித்திட்டமாக விரிவுரையாளர்களுக்கு (தகுதிகாண்) நடத்தப்படும் உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ் விளங்குகின்றது. அனைத்து விரிவுரையாளர்களும் (தகுதிகாண்) அவர்களுடைய பதவியை உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருக்க வேண்டும். அலுவலர் அபிவிருத்தி நிலையமானது உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தனை 4 முறை நடத்தியிருக்கின்றது. சிரேஷ்ட கல்விசார் அலுவலக உறுப்பினர்களுக்கான அறிமுக நிகழ்ச்சித்திட்டமானது ஏனைய பல்கலைக்கழகங்களின் மத்தியிலும் நன்கு இனங்காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாகும்.



அலுவலர் அபிவிருத்தி நிலையமானது வருடாந்தம் ஊழியர்களின் மொழி ஆற்றலினை மேம்படுத்துதவற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றது. ரோஸ்ட் மாஸ்டர் கைவினை நிகழ்வு, கல்விசார் எழுதுகை நிகழ்ச்சித்திட்டம், பல்கலைக்கழகத்தின் அனைத்து அலுவலர்களையும் உள்ளடக்கி தமிழ் மற்றும் ஆங்கிலத்திற்கான தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை அவற்றின் சில நிகழ்ச்சித்திட்டங்களாகும். உள நலனுக்காக வருடாந்தம் ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஆலோசனை வழங்கல் வேலைத்திட்டங்களும் நடத்தப்படுகின்றன. இந்த அனைத்து வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் அலுவலர் அபிவிருத்தி நிலையமானது அனைத்து பங்குதாரர்களினதும் அறிவு, திறன்கள், மற்றும் மனப்பாங்குகள் என்பவற்றினை மேம்படுத்த எதிர்பார்க்கின்றது.





2018 ஆம் ஆண்டில் அலுவலர் அபிவிருத்தி நிலையமானது அனைத்து தரத்திலான அலுவலர்களுக்குமென 30 வேலைப்பட்டறைகளை நடத்தியிருக்கின்றது. அனைத்து வேலைப்பட்டறைகளிலும் பெரும் எண்ணிக்கையான அலுவலர்கள் பங்குபற்றியதுடன் இந்த வேலைப்பட்டறைகளில் 50% ஆன பல்கலைக்கழக ஊழியர்கள் அலுவலர் அபிவிருத்தி நிலையத்தின் தங்களுடைய அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை மேம்படுத்துவதில் பயனடைந்துள்ளனர்.





## 6.4 தொழில் வழிகாட்டல் அலகு



தொழில் வழிகாட்டல் அலகானது மாணவர்களுக்கு அவர்களது திறன்கள், ஆசைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்பவற்றின் அடிப்படையில் ஆதாயத்துடன் கூடிய தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு பீடங்களுடன் இணைந்து வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றினை முன்னெடுத்து வருகின்றன. அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள பொருத்தமான தொழில் வழங்குனர்களால் தேவையான அறிவு, திறன்கள், அணுகுமுறைகள், ஊக்குவிப்பு என்பவற்றுடன் பட்டதாரி பயிலுனர்களுக்கு கல்வியூட்டுவதன் மூலம் இது எய்தப்படவுள்ளது.

## தை மாதம் 1ஆம் திகதி முதல் மார்கழி மாதம் 31ஆம் திகதி 2018 ஆம் ஆண்டு வரை தொழில் வழிகாட்டல் அலகினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்.

பங்குனி – ஆய்வு முறையியல் பற்றியதான வேலைத்திட்டம்

வைகாசியிலிருந்து ஆடி -இலங்கை திறந்த பல்பலைக்கழகத்தில் மாணவர் கல்விசார் தயார்ப்படுத்துகை பயிற்சி (StART@OUSL – 1ஆம் சுற்று)

மேற்குறிப்பிட்ட 3 மாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விஞ்ஞானமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பொறியியல் தொழில்நுட்ப பட்ட நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கு 2 கட்டாய கற்கை நெறிகள் மற்றும் ஒரு தெரிவுக் கற்கைநெறி என்பன வழங்கப்பட்டன.

ஆனி- சுயவிபரக் கோவை தயாரித்தல் , நேர்முகத் தேர்விற்கு முகங்கொடுத்தல் மற்றும் மற்றும் தொழில்தருனர்களின் எதிர்பார்ப்புக்கள் பற்றியதான வேலைப்பட்டறை

ஆனி- கல்விக்காக கூகுள் அம்சங்களைப் பயன்படுத்தல் பற்றியதான வேலைப்பட்டறை

புரட்டாதி- கல்விசார் எழுதுகை பற்றியதான வேலைப்பட்டறை

ஐப்பசியிலிருந்து தை 2019 வரை- இலங்கை திறந்த பல்பலைக்கழகத்தில் மாணவர் கல்விசார் தயார்ப்படுத்துகை பயிற்சி (StART@OUSL – 2ஆம் சுற்று)

மேற்குறிப்பிட்ட 3 மாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முகாமைத்துவ கற்கைகள் இளமாணி, கலைமாணி மற்றும் சுகாதார விஞ்ஞானங்கள் பீட மாணவர்களுக்கான 2 கட்டாய கற்கை நெறிகள் மற்றும் ஒரு தெரிவுக் கற்கைநெறி என்பன வழங்கப்பட்டன.

ஐப்பசி- மாணவ ஆசிரியர்களுக்கான ஆசிரியர் அபிவிருத்தி பற்றியதான வேலைப்பட்டறை

## 6.5 அச்சகம் மற்றும் மத்திய அனுப்புகை அலகு

இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது தொலைக் கல்வி முறைமையினூடாக அறிவை வழங்குவதற்கும் பரப்புவதற்குமென நிறுவப்பட்டதாகும். இந்த இலக்கை அடைவதற்காக மாணவர்களுக்கு கற்கை சாதனங்களை வழங்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) உதவியுடன் 1982 இல் அச்சகம் நிறுவப்பட்டது.

ஐந்து பீடங்களால் நடத்தப்படுகின்ற வேறுபட்ட கற்கை நெறிகளுக்காக 35,000 மாணவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்திருக்கின்றதுடன் இக்கற்கை நெறிகளுக்காக கற்கை சாதனங்களை வெளியிடுதல் அச்சகத்தின் முதன்மை தொழிற்பாடாகும். மேலதிகமாக அச்சகமானது, நிர்வாகப் பிரிவுகளுக்குத் தேவையாக இருக்கும் பல்வேறுபட்ட எழுதுபொருட்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பவற்றினை அச்சிட்டு வழங்கும் செயற்பாட்டினையும் மேற்கொள்கின்றது.

மேலும் வெளிவாரி வள நிலைய ஆலோசனையின் அங்கீகாரத்துடன் அச்சகமானது உயர்கல்வி அமைச்சு மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சாதனங்களை அச்சிடலையினையும் மேற்கொள்கின்றது.

**அச்சகத்தின் அச்சிடப்பட்ட கற்கை சாதனங்கள் மற்றும் ஏனைய கற்கை சாதனங்கள் -2018**

| மாதம் | கற்கை சாதனங்களின் பிரதிகளின் எண்ணிக்கை | கற்கை துண்டுப்பிரசுர பிரதிகளின் எண்ணிக்கை | ஏனைய சாதனங்களின் பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தை | 43,021 | - | 200 |
| மாசி | 21,122 | 202 | 445,082 |
| பங்குனி | பணிப்பகிஷ்கரிப்பு காலப்பகுதி | | |
| சித்திரை | 16,048 | - | 54,732 |
| வைகாசி | 38,308 | 1,040 | 24,144 |
| ஆனி | 68,853 | 13,996 | 666,333 |
| ஆடி | 33,947 | - | 829,132 |
| ஆவணி | 30,345 | 2,560 | 414,632 |
| புரட்டாதி | 49,476 | 1,436 | 173,722 |

| மாதம் | கற்கை சாதனங்களின் பிரதிகளின் எண்ணிக்கை | கற்கை துண்டுப்பிரசுர பிரதிகளின் எண்ணிக்கை | ஏனைய சாதனங்களின் பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஐப்பசி | 57,015 | 4,190 | 171,681 |
| கார்த்திகை | 21,454 | 190 | 129,017 |
| மார்கழி | 22,489 | 70 | 25,518 |
| **மொத்தம்** | **402,078** | **23,684** | **2,934,193** |

**கொழும்பு பிராந்திய நிலையத்தின் பணிகள்**

| விபரிப்பு | பிரதிகள் |
|---|---|
| பல்கலைக்கழக நாட்காட்டி – கிழக்குப் பல்கலைக்கழகம் | 200 |
| முகாமைத்துவ வழிகாட்டி பகுதி I - கிழக்குப் பல்கலைக்கழகம் | 300 |
| முகாமைத்துவ வழிகாட்டி பகுதி II - கிழக்குப் பல்கலைக்கழகம் | 300 |
| பட்ட சான்றிதழ் – ருகுண பல்கலைக்கழகம் | 1986 |
| தங்கப்பதக்க சான்றிதழ் - ருகுண பல்கலைக்கழகம் | 72 |
| இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பட்டமளிப்பு 2018 இல் பட்டதாரிகளுக்கு அனுப்பும் கடிதம் | 1500 |
| இயந்திரவியல் பொறியியல் நிறுவன அழைப்பிதல் அட்டை | 40 |
| இயந்திரவியல் பொறியியல் நிறுவன மாணவர் அத்தியாயம் (ஏ3) | 50 |
| இயந்திரவியல் பொறியியல் நிறுவன மாணவர் நிகழ்வுகள் அறிவிப்பு | 50 |
| ஆர்.கே.டபிள்யூ. குணசேகர சினைவுப் பேருரை அழைப்பிதல் | 350 |
| ஆர்.கே.டபிள்யூ. குணசேகர சினைவுப் பேருரைப் புத்தகம் | 300 |
| தொழிற் சங்க ஆண்டறிக்கை | 130 |
| சட்ட முதுமாணி குறிப்புப் புத்தகம் | 200 |

## 6.6 தேசிய நிகழ்நிலை தொலைக்கல்வி சேவைகள்

உயர் கல்வி அமைச்சின் கீழ் தொலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக 2013 ஆம் ஆண்டு தேசிய நிகழ்நிலை கல்விசேவைகள் நிலையம் நிறுவப்பட்டது. பங்குனி மாதம் 2015 ஆம் ஆண்டு இது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டது. இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியிலும் நிகழ்நிலை தொலைகல்வி வழங்குனர்களையும் பெற்றுக்கொள்பவர்களையும் வழிநடத்துதலே எமது இலக்காக இருக்கும்.

அந்த இலக்குடன், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் உள்ள தேசிய நிகழ்நிலை கல்விசேவைகள் நிலையமானது பின்வரும் வழிகளில் நிகழ்நிலைக் கல்விக்கு ஆதரவு வழங்குவதற்கான வசதிகளைக் கொண்டிருக்கின்றன.

- நிகழ்நிலை உள்ளடக்க அபிவிருத்தி, தொகுப்பு மற்றும் பராமரிப்பு
- காணொலி மாநாட்டு வசதிகள்
- நிகழ்நிலை பரீட்சைகள்
- வேலைப்பட்டறைகள் மற்றும் பயிற்சிகள்

2015 முதல் 2018 வரை தேசிய நிகழ்நிலை கல்விசேவைகள் நிலையமானது பல்வேறு தாக்க ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்ததுடன் அவை தற்போது அடையாளங் காணப்பட்டிருக்கின்றன. 2019 ஆம் ஆண்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் உள்ள தேசிய நிகழ்நிலை கல்விசேவைகள் நிலையமானது முழுமையாக செயற்பட்டு அது நிறுவப்பட்டதன் நோக்கினை எய்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 6.7 சர்வதேச உறவுகள் பிரிவு

சர்வதேச உறவுகள் பிரிவானது உபவேந்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணிப்பாளர் ஒருவரின் தலையீட்டின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது. நிர்வாக மற்றும் நிதியியல் செயற்பாடுகள் முகாமைத்துவ சபையினால் நிர்வகிக்கப்படுகின்றன. சர்வதேச உறவுகள் பிரிவின் பணிப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விசார் அலுவலராக அல்லது சிரேஷ்ட விரிவுரையாளராக அல்லது அதனைவிட உயரிய மட்டத்திலான தரம் கொண்ட ஒருவர் துணைவேந்தரின் சிபாரிசுடன் பேரவையினால் நியமிக்கப்படுவார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது உலகத் தரத்திலான கல்வி ஆய்வுத் தொகுதி, முழுமையானதும் இயக்கவியல் தன்மையானதுமான பல்கலைக்கழக அனுபவம் மேலதிக அறிவிற்கான வலுவான சர்வதேச இணைப்புக்களை வழங்குகின்றது.

நிறுவனத்தின் அபிவிருத்தித் தேவைகளுக்கு ஏற்றவாறாக போதியளவு பீடங்கள் மற்றும் நிறுவன மட்டத்திலான உடன்படிக்கை இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் எதிர்பார்க்கின்றது. சர்வதேச உறவுகள் தொடர்பான மூல

உபாயங்களை வழங்கும் போதும் உலகில் உள்ள ஏனைய பல்கலைக்கழகம் உட்பட ஏனைய நிறுவனங்களுடன் முறையான தொடர்பாடல் தரப்பு இணைப்புக்களை ஏற்படுத்தும் போது சா்வதேச உறவுகள் பிரிவானது பல்கலைக்கழகத்திற்கு உரிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்றது.

சா்வதேச உறவுகள் பிரிவின் நோக்கங்கள் கீழ்வருமாறு

அ. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் நிறுவனங்கள், பீடங்கள், மூதவை மற்றும் பேரவை என்பவற்றிற்கு தந்திரோபாயங்கள் மற்றும் நாடுகளுக்குரியதான பரிந்துரைகளை உருவாக்குதல்

ஆ.அபிவிருத்திகளை ஒருங்கிணைத்தல் மற்றும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் இருதரப்பு மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகள் மற்றும் வெளிநாடுகளுடன் புரிந்துணா்வு ஒப்பந்தங்கள் என்பவபற்றினை மீளாய்வு செய்தல்

இ.உலகலாவிய ரீதியான பகிா்ந்தளிப்புக்களை தொடா்புபடுத்தவும் பரப்புவதற்கும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அலுவலா்களுக்கும் மாணவா்களுக்கும் சந்தா்ப்பங்கள் வழங்குதல்.

ஈ.வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளை பணித்தல்.

உ.சா்வதேச கூட்டுஆய்வுச் செயற்பாடுகள் மற்றும் கல்விசாா் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்தல்

ஊ.சா்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சியாளா்களாகவும் ஆசிரியா்களாகவும் விருத்தி செய்து கொள்வதற்கு இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் அலுவலா்களுக்கு சந்தா்ப்பங்கள் வழங்குதல்.

எ.சா்வதேச ரீதியாக குறிப்பிடத்தக்கவையாக அமையும் ஆராய்ச்சிகள் மற்றும் இலங்கையின் பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடிய ஏனைய செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அலுவலா்களுக்கு உதவுதல்.

ஏ.வெளிநாட்டு மாணவா்கள், ஆசிரியா்கள் மற்றும் விருந்தினா்களுக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தங்கியிருக்கையில் தேவையான உதவிகளை வழங்குதல்.

ஐ.இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை வெளிநாட்டிலும் பங்குடைமையிலும் மேம்படுத்துதல்

ஒ.முக்கிய சா்வதேச அரசாங்கம் மற்றும் அரசாங்கம்சாரா முகவா்கள், இலங்கைத் தூதரங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரங்களுடன் தொடா்புகளை ஒருங்கிணைத்தல்

மேற்சொல்லப்பட்ட நோக்கங்களை அடைவதில் சா்வதேச உறவுகள் பிரிவானது 2013 முதல் 2018 வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளில் துடிப்புடன் ஈடுபட்டது. 2018 இல் சா்வதேச உறவுகள் அலகின் செயற்பாடுகளின் சுருக்கம் கீழே காட்டப்பட்டுள்ளது.

## 2018 இல் சர்வதேச உறவுகள் அலகின் செயற்பாடுகள்

## இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

| தொ.இ | நிறுவனத்தின் பெயர் | நாடு |
|---|---|---|
| 01 | புதிய மெக்ஸிக்கோ பல்கலைக்கழகம் | அமெரிக்கா |

**ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட சிறப்பு விரிவுரைகள்**

| | சிறப்பான விரிவுரைத் தலைப்பு | வழங்கியவர் | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|
| 01 | நுண்ணுயிரியல் , மருத்துவத்தின் எதிர்காலம் | கலாநிதி.ஜானகி. லெல்வெல குருகே | வோஷிங்டன் பல்கலைக்கழகம் ஐக்கிய அமெரிக்கா |
| 02 | திறந்த மற்றும் தொலை கல்வியில் முக்கிய அனர்த்தக் கல்வி மற்றும் ஆய்வு | ஹொண்டோகர் மொஹடீம் ஹொன்சன்,கலாநிதி | பேராசிரியர் துணைவேந்தர்- பங்களாதேஷ், பல்கலைக்கழகம்<br><br>அனர்த்த முகாமைத்துவம் மற்றும் பாதிப்புகள் கற்கை நிறுவனத்தின் ஸ்தாபகர் , பேராசிரியர்<br><br>மற்றும் டாக்கா பல்பலைக்கழகத்தின் முன்னால் சமூகவியல் பேராசிரியர் |
| 03 | உளவியலின் நெறிமுறைகள்: உலக மற்றும் இலங்கை சூழல் | பேராசிரியர் ஜுன் மரிசீக் | ஸ்வத்மோ கல்லூரி,<br><br>தாராண்மைவாத கலைக்கல்லூரி , ஸ்வத்மோ,பென்சில்வேனியா, ஐக்கிய அமெரிக்கா |
| 04 | கல்வி மற்றும் விஞ்ஞானத்தில் புரட்சியை ஏற்படுத்தும் தத்துவவியல் மற்றும் செயன்முறைகள் | கலாநிதி.ரஜுவ்.ஜங்கியாணி | க்குவாட்லீன் பல்தொழில்நுட்ப நிறுவனம்,கனடா |

**இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வெளிநாட்டு வேலைப்பட்டறைகள் - 2018 இல் சர்வதேச தொடர்புகள் அலகினால் வசதிப்படுத்தப்பட்டவை**

| | **வேலைத்திட்டத்தின் பெயர்** | **தூதுவர்** | **இணைந்த நிறுவனம்** |
|---|---|---|---|
| 01 | திறந்த கல்வி மூலங்கள்- திறந்த கல்வி செயன்முறைகள்பற்றியதான தொடர்ச்சியான துறைசார் அபிவிருத்தி பாரிய திறந்த நிகழ்நிலை கற்கைகளின் வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றியதான ஆசியாவிற்கான பொதுநல கல்வி ஊடக நிலையம் | பேராசிரியர்.சொம் நாய்டு மற்றும் கலாநிதி மானஸ் பணிக்கிராகி | ஆசியாவிற்கான பொதுநல கல்வி ஊடக நிலையம், இந்தியா |
| 02 | ஆசியா மற்றும் பசுபிக்கில் சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான பிராந்திய ஆளுமை அபிவிருத்தி தொழில்நுட்ப உதவி பலப்படுத்துகை ஆளுமை | 31 தென் இந்தியர்கள் | ஆசிய அபிவிருத்தி வங்கி |

**வெளிநாட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வெளிநாட்டு வேலைப்பட்டறைகள் -**

| | **வேலைத்திட்டத்தின் பெயர்** | **தூதுவர்** | **இணைந்த நிறுவனம்** |
|---|---|---|---|
| 01 | ஹொங் கொங் திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்களுடன் மாணவர் பரிமாற்றுகை அமர்வு | 30 மாணவர்கள் | ஹொங் கொங் திறந்த பல்கலைக்கழகம் |
| 02 | மாலைதீவு வியாபார நிர்வாக முதுமாணி மாணவர்களுக்கான பல்கலைக்கழக சுற்றுலா | 15 மாணவர்கள் | ஏ.வீ.ஐ.சீ. கல்லூரி-மாலைதீவு |

**வருகைதரு ஆய்வு மாணவர்கள்- 2018 இல் சர்வதேச தொடர்புகள் அலகினால் வசதிப்படுத்தப்பட்டவை**

| | மாணவர்களின் எண்ணிக்கை | இணைந்த வெளிநாட்டு பல்கலைக்கழகம் | நாடு | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 01 | 07 | லியூவென் மற்றும் லிம்பொர்க் பல்கலைக்கழக கல்லூரி-பெல்ஜியம் | பெல்ஜியம் | 6 மாதங்கள் (கார்த்திகை 2018-சித்திரை 2019) |





**வழமையான கற்கை நெறிகளுக்கான வெளிநாட்டு மாணவர்கள் - சர்வதேச உறவுகள் அலகினால் வசதிப்படுத்தப்பட்டவை**

| | **மாணவர்களின் எண்ணிக்கை** | **நிகழ்ச்சி** | **நாடு** | **காலப்பகுதி** |
|---|---|---|---|---|
| 01 | 01 | வியாபார நிர்வாகம்/ பொது நிர்வாகத்தில் பொதுநலவாய நிறைவேற்று முதுமாணி | மாலைதீவு | 2 ஆண்டுகள் |
| 02 | 01 | ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி | மாலைதீவு | 15 மாதங்கள் |
| 03 | 01 | இளைஞர் அபிவிருத்தியில் தகைமைச் சான்றிதழ் | பிலிப்பைன்ஸ் | 2 ஆண்டுகள் |

**இலங்கை திறந்த பல்கலைக்கழக அலுவலர்களுக்காக 2018 இல் வெளிநாட்டில் இடம்பெற்ற வெளிப்பாடுகள்**

| | விபரம் | அலுவலர் எண்ணிக்கை | பல்கலைக்கழகம் | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 01 | தென்னிந்திய பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டில் வெளிப்பாட்டு விஜயம்- இலங்கை திறந்த பல்கலைக்கழக நூலக அலுவலாகள் | 10 இலங்கை திறந்த பல்கலைக்கழக நூலக அலுவலர்கள் | அண்ணா பல்கலைக்கழகம் வொலோ தொழில்நுட்ப நிறுவனம் பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 04.03.2018- 10.03.2018 |
| 02 | மலேசியாவில் அமைந்துள்ள வவசான் திறந்த பல்கலைக்கழகத்தில் உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் பிராந்திய கல்விச் சேவைகள் பணிப்பாளர்களுக்கான நாடுகடந்த பயிற்சி | 14 உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் பிராந்திய கல்விச் சேவைகள் பணிப்பாளர்கள் | வவசான் திறந்த பல்கலைக்கழகம், மலேசியா | 08.04.2018- 12.04.2018 |
| 03 | நிர்வாக தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றியதான வெளிநாட்டில் வெளிப்பாட்டு பயிற்சி | நிர்வாகத்தில் 15 நிறைவேற்று அலுவலர்கள் | புற்றா பல்கலைக்கழகம், மலேசியா | 02.12.2018- 08.12.2018 |

**2018 இல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்த வெளிநாட்டு புலமையாளர்கள்**

| | **விபரம்** | **புலமையாளரின் பெயர்** | **பல்கலைக்கழகம்** |
|---|---|---|---|
| 01 | அனர்த்த முகாமைத்துவம் பற்றிதான விஞ்ஞானமாணி பாடத்திட்டத்தினை விருத்திசெய்தல் பற்றியதான கற்கைநெறி | ஹொண்டோகா் மொஹடீம் ஹொன்சன்,கலாநிதி | பேராசிரியர் துணைவேந்தா்- பங்களாதேஷ், பல்கலைக்கழகம் |
| 02 | சாதகமான கல்விசாா் மற்றும் ஆய்வு இணைப்புக்களுக்காக வேலைசெய்யும் மாதிரியை உருவாக்கல் மற்றும் விசேட கல்விசாா் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாணவா் பரிமாறுகை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றினை விருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல். | கலாநிதி.போ்ணட்.மாக்கண்டா்வெயா | மாலவிப் பல்கலைக்கழகம் |

**2018 இல் சா்வதேச தொடா்புகள் அலகினால் வசதிப்படுத்தப்பட்ட ஏனைய நிகழ்வுகள்**

| | **விபரம்** | **காலப்பகுதி** |
|---|---|---|
| 01 | சீனக்குழுவின் வருகை (16 சீன பல்கலைக்கழகங்கள்) | 05 மாசி, 2018 |
| 02 | மாலைதீவு எம்.ஐ. கல்லூரியில் விசேட கல்வியில் குறுகியகால கற்கைநெறி வழங்கல் ஆரம்பிக்கப்பட்டமை | 03 ஆவணி, 2018 |
| 03 | திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றியங்களின் 34 வது வருடாந்த மாநாட்டினை நடத்துவதற்கான பிட் முன்மொழிவு அளிக்குகை | 23 ஐப்பசி, 2018 |
| 04 | திறந்த பல்கலைக்கழக சா்வதேச ஆய்வு அமா்வுகளுக்கான முக்கிய பேச்சாளா்களை வசதிப்படுத்தியமை | 29 -30 காா்த்திகை, 2018 |







## 6.8 தொழில் தொடர்பு நிலையம்

தையில் இருந்து மார்கழி 2018 வரை தொழில் தொடர்பு நிலையத்தில் பின்வரும் செயற்றிடங்கள் ஆரம்பிக்கப்பட்டன / தொடக்கப்பட்டன.

**(அ) காப்பாளர்களை விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்கான ஆதரவு**

தொழில் தொடர்பு நிலையமானது 7 காப்பாளர் விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்கான ஆதரவினை வழங்கியிருப்பதுடன் காப்பாளர்களின் தகுதி நிலையினை வசதிப்படுத்தி பதிவுகளை சேகரித்து வைத்திருக்கின்றது.

**(ஆ)உள்ளக அலங்காரங்களுக்காக ஒக்கிட் தாவரங்களை விருத்தி செய்தல்- நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டம்**

அலங்கார ஒக்கிட் செயற்றிட்டத்தின் நோக்கம் வர்த்தகமயப்படுத்தல் ஆகும். இவ்வாய்வானது தாவரவியல் துறையின் கலாநிதி ஸ்ரீயாணி அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. வளர்ச்சிக்கு உதவும் எல்.ஈ.டீ வெளிச்சம் மற்றும் உள்ளக ஆவியாக்கலினைப் பயன்படுத்தி அலங்கார ஒக்கிட் தாவரங்களுக்கான வர்த்தக முன்மாதிரிகளை கட்டியெழுப்புதல் இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும். தொழில் தொடர்பு நிலையத்தின் அலுவலர்கள் முன்மாதிரியொன்றினை உருவாக்கியுள்ளனர்.





**(இ) புதுமையான உணவுப் படைப்புக்கள்**

நாம் பொறியியல் மற்றும் விவசாய துறையுடன் இணைந்து புதுமையான உணவுப் படைப்புகளை தயாரித்து வருகின்றோம்.

(i) ஊட்டச்சத்து மிக்க மட்பாண்டங்கள் மற்றும் வெட்டு கருவிகள்





(ii) மொபைல் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டமுடைய சூடான / குளிரான மதிய உணவுப் பெட்டி



“மொபைல் செயலி மூலம் கட்டுப்படுத்தக்கூடிய குளிர்ந்த நீர் சிறப்பான மதிய உணவுப் பெட்டியினை விருத்தி செய்வதற்கான முறைமையே” காப்பாளரின் தலைப்பாகும்.குறுந்தகவல் மூலம் அனுப்பப்படும் கட்டளையினால் மதிய உணவுப் பெட்டியானது குளிரினை / சூட்டினைப் பெற்றுக் கொள்ளும்.

(iii) உலர் உணவு

உலர் உணவுகளைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் ஆண்டின் மேலதிக உணவு நிரம்பலுக்கு தீர்வு காணுவதற்காகவும் உலர் உணவுகளை தயாரிப்பதற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.





(iv) “ கொஸ்கட்டினைப் பயன்படுத்தி கட்லட்”

கொஸ்கட்டினைப் பயன்படுத்தி கட்லட் தயாரித்தலே உற்பத்தி ஆகும். இது மீன் கட்லட் இனை ஒத்த வாசனையைக் கொண்டதாகும். காப்பாளர் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் தொழில் தொடர்பு நிலையமானது இத் தொழில்நுட்பத்தினை விற்பதற்கு பேரம்பேசி வருகின்றது.

## (ஈ) களப் பயணம்

உயர்தரப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் புதுமையான உணவுப் பொருட்களை வணிகமயப்படுத்தல் பற்றிக் கலந்துரையாடுவதற்காக நாம் பொதியிடல் தனியார் நிறுவனத்திற்கு விஜயம் செய்திருந்தோம். புதுமையாளர்களுக்கு குறிப்பிட்ட வட்டத்திற்கு வெளியே சிந்திப்பதற்கும் இறுதி வாடிக்கையாளருக்கான புதுமையாக்கத்தினை தனிப்பயனுடையதாக்கிக் கொள்வதற்காகவும் உதவுவற்கான தொழிற்துறையின் தேவைகளை இனங்காண்பதற்கு இது மிகச் சிறந்த வாய்ப்பாக

அமைந்தது. ஆய்வுப் பரப்பினை மேலும் விரிவுபடுத்துவதற்கு கிடைக்கப்பெறக்கூடிய சந்தர்ப்பங்களை நாம் இனங்கண்டு கொண்டோம். பரந்த அளவில் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தேவையான தகவல்களை நாம் இனங்கண்டு கொண்டதுடன் இது ஆராச்சியாளர்களுக்கு உற்சாகமூட்டும் ஓர் அமர்வாகவும் அமைந்தது.



## தொழில்நுட்ப போக்குகள் பற்றியதான கருத்தரங்குகள்

தொழில்தொடா்பு நிலையமானது, புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டில் விழிப்புணா்வு மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக ஒரு தொகுதி தொழில்நுட்ப கருத்தரங்குகளை ஆரம்பித்தது.

(அ) பிளக் செயின் பற்றியதான கருத்தரங்கானது 05 ஆடி அன்று இயற்கை விஞ்ஞான பீட கருத்தரங்கு அறையில் இடம்பெற்றது.



(ஆ) “பின்ரெக்கிற்கான அறிமுகம்” பற்றியதான கருத்தரங்கு

பொறியியல் தொழில்நுட்ப பீடத்தின் சபை மண்டபத்தில் 27 புரட்டாதி மு.ப 11.00 மணிக்கு பின்ரெக் தொழில்நுட்பம் பற்றியதான கருத்தரங்கு இடம்பெற்றது.





இ)“இலத்திரனியல் படைப்பு அபிவிருத்தி செயன்முறை மற்றும் படைப்பு வணிகமயப்படுத்தல்” பற்றியதான கருத்தரங்கு





## தொழில்முனைவோர் நிகழ்ச்சித்திட்டம்

2016 ஆம் ஆண்டில் இருந்து தொழில் தொடர்பு நிலையமானது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மூன்று தொகுதியினருக்கு தொழில்முனைவோர் தொடக்க நிகழ்ச்சித்திட்டம் பற்றியதான குறுகிய கால நிகழ்ச்சித்திட்டத்தினை வடிவமைத்து வழங்குகி வருகின்றது.

## இலங்கை திறந்த பல்கலைக்கழக அலுவலக உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கான குறியீட்டு செயற்பாட்டு மணித்தியாள திறந்த அக்ரோஹக் ’19

22-23 மாசி, 2019 இல் பல்கலைக்கழக வளாகத்தில் ஹகத்தனினை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிகழ்வுக்காக ஹகத்தனின் கருத்து, நிகழ்வின் பங்குதாரர், ஹகத்தனின் நோக்கம் என்பன பூரணப்படுத்தப்பட்டிருக்கின்றன. 9 தை , 2019 அன்று அனுராதபுரத்திற்கான உண்மை அறிதல் பயணமானது திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன் இலக்கிற்காக வழிகாட்டல் குழுவின் உறுபபினர்கள், ஐ,ஈ,ஈ,ஈ இன் மாணவர் பிரிவிலிருந்தான உறுப்பினர்கள் மற்றும் தொழில் தொடர்பு நிலையத்தின் அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றுவர். ஹகத்தனில் விவசாய துறை பற்றிய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்படும் என்பதுடன் விவசாயத்தின் அடையாளங்காணப்பட்ட துறைகளுக்கான சாதகமான தீர்வுகளை ஹகத்தன் வழங்கும். பெறுபேற்றின் தொனியானது இறுதி நாள் நிகழ்வின் போது கலந்துரையாடப்படும். முதலீட்டளர்களாக வருவதற்கு, முதலீட்டாளர்கள் தீர்வினை வாங்கிக்கொள்ள முடியும் அல்லது தீர்வினை வழங்குவோருக்கான பொருளாதார உதவியினை வழங்க முடியும். இலங்கையில் விவசாய துறையின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்காக நடத்தப்படும் முதல் ஹகத்தனாக இது இருக்கும். விசாரணைகள் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் தொழில் தொடர்பு நிலையமானது நிகழ்விற்கான அனுசரணையாளர்களை கண்டுகொள்வதற்காக பணியாற்றும்.

## தரவுத்தள மற்றும் ஆய்வு விபரக்குறிப்பு தயார்ப்படுத்துகை

அலுவலர் ஆய்வு விபரக்குறிப்புடன் தொடர்புடைய அனைத்து தகவல்கள் , அலுவலர் செயற்றிட்டங்களின் விபரங்கள், இறுதி ஆண்டு மாணவர் செயற்றிட்டங்கள் என்பவற்றினை சேகரிப்பதற்கு தொழில் தொடர்பு நிலையமானது தரவுத் தளமொன்றினை தயார்ப்படுத்துகின்றது. தகவலானது சேகரிக்கப்பட்டு களஞ்சியப்படத்தப்பட்ட பின்னர் உரிமத்தின் சாதகத்தன்மையினை வெளிப்படுத்துவதல், இலங்கை திறந்த பல்கலைக்கழக ஆய்வினை வணிகமயப்படுத்தல் போன்றவற்றிற்காக தொழிற்துறையுடன் இணைந்து தொழில் தொடர்பு நிலையமானது கலந்துரையாடல் ஒன்றினை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. பல்கலைக்கழக தொழிற்துறை இணைப்பு செயற்றிட்டங்களின் ஆரம்பிப்பினையும் இது வசதிப்படுத்துவதாக அமையும்.

## கட்டட புத்தாக்க நிலையம் மற்றும் பொருட்கள் கொள்வனவு

தொழில் தொடர்பு நிலையத்தின் பணிப்பாளர், சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தினால் முன்னர் பயன்படுத்தப்பட்டு தற்போது குறைவாகப் பயன்படுத்தப்படும் சில அறைகளை அடையாளங் கண்டிருக்கின்றார். புனருத்தாரணம் மற்றும் பொருட்களின் கொள்வனவு என்பவற்றிற்காக எஹெட் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நிறுவனமானது உயர் பெறுமான கருவிகளுடன் வளப்படுத்தப்படும்.

எஹெட் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 10 மில்லியன் நன்கொடையானது புத்தாக்க நிலையத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும். இது முழுமையாக நிறுவப்பட்டதன் பின்னர் எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் 1 மில்லியனாக இருக்கும். முதற் கூறாக வழங்கப்பட்ட 4 மில்லியன் ரூபாய்க்கான கட்டட தொகுதி இலக்கம் 34 தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் , நிலையத்திற்காக லேசர் கட்டர், முப்பரிமாண பிறின்டர்ஸ், மற்றும் தேவையான ஏனைய உபகரணங்கள் என்பன கொள்வனவு செய்யப்படும். கலாநிதி .எச்.ஜூ.பீ.ஏ.ரத்ணவீர அவர்கள் புத்தாக்க நிலையத்திற்காக கட்டட புனருத்ததாரணத்திற்காக இணைந்து பணியாற்றுவார்.

## 6.9 கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையம்






இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடகங்களுக்கான நிலையமானது சுய வழிகட்டல் கற்கை சாதனங்களை வடிவமைப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல், கல்வி ஊடகங்களை வடிவமைத்தல் மற்றும் விருத்தி செய்தல் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கைச் சாதனங்களின் தரச் சான்றிதழ்களை உறுதி செய்தல் போன்ற விடயங்களில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.இது ஐந்து துறைகளுக்கும் நிகழ்நிலை கற்கை நெறிகள் உள்ளடங்களாக அவர்களுடைய கற்கை நெறி மற்றும் கற்கை சாதனங்கள் என்பவற்றினை விருத்தி

செய்வதிலும் சேவை வழங்குனராக செயற்படுகின்றது. இதுவரை இந்த நிலையமானது ஜப்பான், ஈரான், யூ.என்.டீ.பி ஆகியவற்றில் இருந்து கல்விக் காணொளிகளுக்கான 9 சர்வதேச விருதுகளை வென்றுள்ளது.

கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடகங்களுக்கான நிலையமானது இரண்டு அலகுகளைக் கொண்டள்ளது: கல்விசார் மற்றும் ஆராய்ச்சி அலகு மற்றும் படைப்பு அலகு (ஊடக இல்லம்)

## கல்வி மற்றும் ஆராய்ச்சி அலகு

கல்வி மற்றும் ஆராய்ச்சி அலகானது

- கற்கைச் சாதனங்களின் விருத்திக்கு வளம் சேர்த்தல் மற்றும் உதவுதல் ( அச்சு, ஒலி-ஒளி மற்றும் நிகழ்நிலை)
- இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் அலுவலர்களுக்கு சுய வழிகாட்டிக் கற்றல் கையேடுகளை எழுதுதலுக்காக திறன் கட்டியெழுப்புதல் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- ஒலி-ஒளி நிகழ்நிலை கற்கை நெறிகளை விருத்தி செய்தல் மற்றும் வடிவமைத்தல் கற்கைச் சாதனங்களின் விருத்திக்கு உதவுதல் (அச்சு, ஒலி-ஒளி மற்றும் நிகழ்நிலை) மற்றும் நிகழ்நிலைக் கற்கை நெறிகளை நிர்வகித்தல் மற்றும் பதிவேற்றுதல்
- இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கைச் சாதனங்கள் மற்றும் வெளியீடுகள் என்பவற்றினை நகல்பதிப்புச் செய்தல்.
- இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கைச் சாதனங்களின் தரச் சான்றிதழ்களை உறுதி செய்தல் மற்றும்
- திறந்த மற்றும் தொலைக் கல்வி ஆய்வுகளை முன்னெடுத்தல்

என்பவற்றிற்குப் பொறுப்பாக அமைகின்றது.

பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் நிகழ்நிலைக் கற்கை நெறி விருத்தி மற்றும் வழங்குகை பற்றி இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்வியியளாளர்களுக்கு கல்வி தொழில்நுட்ப மற்றும் ஊடக நிலையமானது வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது:

- ➢ தேசிய நிகழ்நிலை தொலைக்கல்விச் சேவைகளுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழக நிகழ்நிலை கற்கைநெறிகளை ஒருங்கிணைத்தல்.
- ➢ கற்கை முகாமைத்துவ முறைமையில் பயனாளிகளுக்கு அதிகாரமளித்தல்.
- ➢ கற்கை முகாமைத்துவ முறைமையினை நிர்வகித்தல்.

- நிகழ்நிலை கற்கைநெறி வடிவமைப்பு மற்றும் விருத்தி பற்றி இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்வியாளர்களுக்கு பயிற்சியளித்தல்.
- பதிவிடுவதற்கு முன்னர் நிகழ்நிலை கற்கை நெறிகளை மீளாய்வு செய்தல்.
- இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்குமான உதவி மையமாக செயற்படுதல்.

புதிய மாதிரி பதிப்பு 2.3 இனை கையாள்வதற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்வியாளர்கள் 154 பேருக்கு கல்வி தொழில்நுட்ப மற்றும் ஊடக நிலையமானது 2018 இல் பயிற்சிகளை வழங்கியிருந்ததுடன் புதிய மாதிரி பதிப்பு பற்றியதான நிகழ்நிலை க்கற்கை நெறிகளை விருத்திசெய்வது பற்றி புதிய கல்வியாளர்கள் 28 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

## படைப்பு அலகு (ஊடக நிலையம்)

கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலைத்தின் படைப்பு அலகானது முழுநீள உயர்தர தொலைக்காட்சி ஸ்ரூடியோ டப்பிங் மற்றும் ஓடியோ ஸ்ரூடியோ ஒப்பனை அறைகள் மற்றும் பின்-படைப்பு அலகு போன்றவற்றுடன் வசதிப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒலி-ஒளி நூலகம்: பல்வேறுபட்ட காணொலிக் காட்சிகள் என்பவற்றினையும் கொண்டுள்ளது. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கான வடிவமைப்பு கிர∴பிக்ஸ் மற்றும் அனிமேஷன் என்பன கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலைத்தின் கிர∴பிக்ஸ் பிரிவின் பொறுப்பாகும். கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலைத்தின் படைப்பு அலகானது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்விசார் செயற்பாடுகள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் என்பவற்றிற்கான ஒலி-ஒளி வசதிகளை மேற்கொள்ளுகின்றன. இது இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பட்டமளிப்பு வைபவத்தின் புகைப்படங்களை எடுப்பதிலும் தனது சேவையினைப் புரிந்து வருகின்றது.

கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையமானது கற்கை உருவாக்கல், நிகழ்நிலைக் கற்கை வடிவமைப்பு மற்றும் விருத்தி, நிகழ்நிலை இலத்திரனியல் வழிகாட்டல் மற்றும் பயிற்சி மற்றும் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி உற்பத்தி என்பவற்றில் குறுகிய காலக் கற்கை நெறியினையும் வழங்குகின்றது.



கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையமானது 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியியல் பல்வேறு விடயங்கள் பற்றியதான 32 புதிய கல்விசார் காணொலிப் படைப்புக்களை கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையமானது படைத்திருக்கின்றது.

கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையமானது தொலைக்காட்சி ஸ்ரூடியோ, மதியுரை மற்றும் வெளியுரை வளங்கள் நிலையத்திற்கான ஏனைய வசதிகள் மற்றும் சேவைகள் என்பவற்றினை வழங்குவதுடன் 2018 ஆம் ஆண்டில் 5.8 மில்லியன் பெறுமதியான மதிப்பிடப்பட்ட உபரியுடன் ரூபா 10,370,350.00 தொகையினை ஈட்டியுள்ளது.

2018 கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையமானது இலங்கை திறந்த பல்கலைக்கழக காணொலிகள் அனைத்தினையும் பதிவேற்றம் செய்து பொது இணையத்தளமாக பயன்படுத்துவதற்காக"ஓபன் காஸ்ட் " எனும் பெயரில் யூ ரியூப் அலைவரிசையினையும் "ஓபன் காஸ்ட்' எனும் தொகுபதிவகத்தினையும் நிறுவியது.





## 6.10 ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையம்

ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையமானது, பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை சமூகங்களுக்கிடையிலான இணைப்பினை மேம்படுத்துவதற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நிறுவப்பட்ட பிரிவாகும். ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையத்தினூடாக தேவையேற்படும் போது நாட்டின் நலனுக்காக பல்கலைக்கழகமானது அதன் மனித மற்றும் பௌதீக வளங்களை பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையமானது துணைவேந்தரை தலைவராகவும் பணிப்பாளர், கல்விசார் மற்றும் நிர்வாக அலுவலர்களில் தெரிவுசெய்யப்பட்ட இரு பிரதிநிதிகளையும், பேரவை பிரதிநிதிகள் இருவரையும் கொண்ட முகாமையாளர் சபையினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள், குறுகிய கால கற்கை நெறிகள், ஆலோசனை சேவைகள் , நீண்ட கால கற்கை நெறிகள், பயிற்சி மற்றும் தொடர்ச்சியான துறைசார் பயிற்சி கற்கை நெறிகள் போன்ற வேலைத்திட்டங்களை ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையமானது முன்னெடுக்கின்றது. உரிய கல்விசார் துறைகள் மற்றும் பிரிவுகளின்

கல்வியியளார்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களுக்கு பங்கம் விளைவிக்காத வகையில் இத்தகைய கற்கை நெறிகளை பயில முடியும். சமூகத்தின் தற்கால போக்குகள் மற்றும் தேவைகள் என்பன பகுப்பாய்வு செய்யப்பட்ட பின் கல்விசார் துறையினால் ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையத்தின் வேலைத்திட்டங்கள் விருத்தி செய்யப்படுகின்றன. வெளிவாரி நிலையங்களில் உள்ள வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு மிகப் பொருத்தமான வேலைத்திட்டங்கள் பலவும் இங்கு காணப்படுகின்றன. ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை ஆரம்பிக்க முடியும். இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது அந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக நடத்தி பூரணப்படுத்துவதற்கு தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்கும். இலங்கை சமூகத்தினரை, குறிப்பாக அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், அரசாங்க அதிகார சபைகள், சக கல்விசார் நிறுவனங்கள் போன்றவற்றின் அலுவலர்கள் தமது இலக்குகளை அடைவதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நீடித்த மனித மற்றும் பௌதீக வளங்களை பயன்படுத்திக்கொள்வதனை ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையமானது எப்பொழுதும் வரவேற்கின்ற அதே வேளை இலங்கை திறந்த பல்கலைக்கழக அலுவலர்களின் சுறுசுறுப்பான பங்குபற்றுதலை ஊக்குவிப்பதுடன் அதன் முழுமையான ஆதரவினையும் வழங்குகின்றது. 2018 ஆம் ஆண்டில் 304 வேலைத்திட்டங்களை நடத்துவதற்கான அங்கீகாரம், ஆலோசனை மற்றும் வெளிவாரி மூலங்கள் நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 241 வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டுள்ளன. கேட்டல் மற்றும் பேச்சில் குறுகியகால கற்கைநெறி, மனித வள முகாமைத்துவத்தில் குறுகியகால கற்கைநெறி, சுற்றுலா மற்றும் சுற்றுலா விடுதி செயற்பாடுகளில் குறுகியகால கற்கைநெறி, கொரிய மொழியில் குறுகிய கால கற்கைநெறி, துறைசார் கணினி பிரயோகங்களில் குறுகிய கால கற்கைநெறி, புதுமையான கட்டடவியலில் குறுகியகால கற்கைநெறி, தாவர வளர்ப்பு தொழில்நுட்பங்களில் குறுகியகால கற்கைநெறி, பொறியியல் வரைபுகளுக்கான ஓட்டோகாட்களின் வினைதிறனான பயன்பாடு பற்றியதான குறுகியகால கற்கைநெறி, துறைசார் இணைய வடிவமைப்பில் குறுகியகால கற்கைநெறி, கற்றல் இயலாமையுடைய மாணவர்களைக் கற்பித்தலில் குறுகியகால கற்கைநெறி, ஆய்வு முறையியலில் குறுகியகால கற்கைநெறி, பொது நூலகங்கள் மற்றும் பல்கலைக்கழக நூலகங்கள் போன்ற இலங்கையின் குறிப்பிட்ட நூலகங்களின் நூலக தானியக்கம், மற்றும் மன இறுக்கம் பற்றியதான குறுகிய கால கற்கைநெறி போன்றன வேலைத்திட்டங்களில் சிலவாகும்.

# பகுதி 7
# எதிர்காலத் திட்டங்கள்

## 7.0. எதிர்காலத் திட்டங்கள்

இலங்கையின் திறந்த மற்றும் தொலைகல்வி உயர் நிறுவனமாக அதன் பணிக்கூற்றின் இலக்குகளை அடைவதில், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சேவைகளை மேலும் விரிவடையச் செய்வதற்காகவும் மேம்படுத்துவற்காகவும் செயற்படுத்த எண்ணியிருக்கும் எதிர்கால திட்டங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன. இந்த நிலைபேண் அபிவிருத்தியின் நிகழ்ச்சித்திட்ட அம்சங்களை முன்மொழியும் அதே வேளை / அது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

1. பல்கலைக்கழகத்தின் பச்சைக் கொள்கையின் அடிப்படையில் பிரதான வளாகமும் கொழும்பு பிராந்திய நிலையமும் பச்சை வளாகமாக மாற்றப்பட உள்ளது.
2. அண்மைக்கால தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நீர் மீள்சுழற்சியுடன் கூடிய கழிவுநீர், வடிகால் முறைமையானது பிரதான வளாகம், கொழும்பு பிராந்திய நிலையம் என்பவற்றில் அறிமுகப்படுத்தபடும்.
3. 2019ஆம் ஆண்டில் மாத்தளையில் புதிய கற்கை நிலையத்தினை நிறுவுவதன் மூலம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய வலையமைப்பானது மேலும் விரிவுபடுத்தப்பட்டுப் பலப்படுத்தப்படும். பல்கலைக்கழகத்தின் இலக்குகளில் ஒன்றான ஒவ்வொரு கற்கை நிலையத்திலும் குறைந்தது ஒரு கற்கை நிலையத்தினையாவது கொண்டிருத்தல் எனும் இலக்கானது பூர்த்திசெய்யப்படும்.
4. மத்திய வளாகம், பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களை தரமுயர்த்துவதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் பற்றி திட்டமிடப்பட்டுக் கொண்டிருப்பதுடன் 2019/2020 ஆண்டு காலப்பகுதியில் அவை பூர்த்தி செய்யப்படும் என எதிப்பார்க்கப்படுகின்றன.

   i. சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான புதிய 5 மாடிக் கட்டடம்
   ii. மத்திய வளாகத்தில் புதிய நான்கு மாடி பரீட்சை மண்டபம்
   iii. பரீட்சைப் பிரிவின் புனருத்தாரணம்
   iv. ஆதன வேலைகளுக்கான அலுவலகப் புனருத்தாரணம்
   v. மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீட கட்டடத்தின் இரண்டாம் மாடி புனருத்தாரணம்
   vi. கொழும்பு பிராந்திய நிலையத்தில் மாணவர் கற்றல் பகுதியின் புனருத்தாரணம்
   vii. குருநாகல் மற்றும் மட்டக்களப்பு பிராந்திய நிலையங்களுக்கான தற்காலிக பரீட்சை மண்டபங்கள்
   viii. கண்டி மற்றும் மாத்தறை பிராந்திய நிலையங்களுக்கான தற்காலிக வதிவிட வசதிகள்
   ix. மட்டக்களப்பு பிராந்திய நிலையத்திற்கான புதிய பரீட்சை மண்டபம்
   x. பதுளை பிராந்திய நிலையம், இரத்தினபுர பிராந்திய நிலையம், திருகோணமலை கற்கை நிலையம், மன்னார் கற்கை நிலையம் மற்றும் ஹற்றன் கற்கை நிலையம் என்பவற்றில் புதிய நிலையங்களை நிறுவுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை.

5. திறந்த மற்றும் தொலைக்கல்வி முறைமையினூடாக சைஷெல்ஸ் குடியரசு மற்றும் மாலைதீவு குடியரசில் இலங்கை திறந்த பல்கலைக்கழக நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதன் சாத்தியப்பாடு உள்ளடங்களாக உள்ளூர் மற்றும் சர்வதேச பங்குடமையாளர்களுடன் இணைப்புக்களை அதிகரித்தல்.

6. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் மற்றும் சிக்கலான நிர்வாகக் கட்டமைப்பு, அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை விஸ்தரித்தல் என்பவற்றின் காரணமாக பல்கலைக்கழகத்தினால் எதிர்நோக்கப்படும் சவால்களை முகங்கொடுப்பதற்கு இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் கட்டளைச் சட்டமானது திருத்தியமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. 2019ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வரைவு கட்டளைச் சட்டத்தினை சமர்ப்பிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

7. பல்கலைக்கழகத்தின் பிரதான தரப்பினர்களின் வழிகாட்டலுடன் உரிய இடங்களில் பெரும்பாலான கல்விசார், நிர்வாக மற்றும் நிதியியல் செயற்பாடுகளை கையாளுவதற்கு பிராந்திய கல்விச் சேவைகளை மீளத் திருத்தியமைக்கும் நடவடிக்கை 2019 இல் நிறைவடையும்.
8. இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்றல் கற்பித்தல் தொழிற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதான அனைத்து கல்விசார், முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பவற்றிற்கு ஆதரவு வழங்குவதான பரந்துபட்ட முகாமைத்துவ தகவல் முறைமையினைக் கொண்டிருக்கின்றது. புதிய போக்குகளுடன், பல்கலைக்கழகமானது 2021ஆம் ஆண்டில் முழுமையாக செயற்படுத்தப்படுவதற்கு வெளிப்புற நிபுணர்களுடன் புதிய முகாமைத்துவ தகவல் முறைமையினை விருத்தி செய்யும் செயற்பாட்டினை ஆரம்பித்திருக்கின்றது.
9. 2019 ஆம் ஆண்டில் பிரதான வளாகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் வை.ஃ.பை வசதி வழங்கப்படும். பெரும்பாலான பிராந்திய நிலையங்களுக்கும் வை.ஃ.பை வசதி வழங்கப்படும்.
10. திறந்த மற்றும் தொலைக்கல்வி துறையில் இடம்பெற்றுவரும் நவீன போக்குகள் மற்றும் அபிவிருத்திகள் பற்றி அலுவலர்கள் விழிப்புணர்வுடன் இருப்பதற்கும் நிறுவன ரீதியான ஆய்வுகளை நடத்துவதற்காக ஆய்வு முன்மொழிவுகளை விருத்தி செய்வதற்கும் லண்டன் திறந்த பல்கலைக்கழகத்தின் வளவாளர்களுடன் கற்றல் பகுப்பாய்வு பற்றயதான வேலைத்திட்டத்தினை 2019 தை மாதம் நடத்த திட்டமிடப்பட்டள்ளது.
11. இலங்கையில் நடைபெற இருக்கம் திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றியம் 2019 இல் பல்கலைக்கழகம் பங்குபற்றும்.
12. நூலகமானது, தேசிய இலத்திரனியல் நூலக செயற்றிட்டத்திலும் உள்வாங்கப்படுவதுடன் நாடு முழுவதிலும் பல்வேறு பொது நூலகங்களையும் தானியக்கம் செய்திருக்கின்றன. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கை நிலையங்கள் அமைந்திருக்கும் நகரங்களில் இலங்கை திறந்த பல்கலைக்கழக

மாணவர்களுக்கு நூலக சேவையினை மேம்படுத்துவதற்கு இப்பொது நூலகங்களுடன் பங்குடமைகளை விருத்திசெய்ய திட்டமிட்டு வருகின்றன.

13. தேசிய நிகழ்நிலை தொலைக்கல்வி சேவைகள் 2016 இல் பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டிருப்பினும் பல்வேறு தர்க்க ரீதியான காரணங்களினால் அதன் செயற்பாடுகளை பல்கலைக்கழகத்தினால் மேம்படுத்த முடியவில்லை. இப்போது இந்த விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதுடன் 2019 இல் அது முழுமையாகச் செயற்பட்டு அது நிறுவப்பட்டதன் நோக்கினை நிறைவேற்றும்.
14. பல்கலைக்கழகத்தினுள் விளையாட்டு செயற்பாடுகளை விருத்திசெய்வதற்காக பௌதீக உட்கட்டுமானங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
15. பல்கலைக்கழக வாரியிலான கண்காணிப்பு கமரா முறைமை மற்றும் கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் ஆகிய புதிய தொடர்பாடல் தீர்வினை அறிமுகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

என்பவற்றினை உள்ளடக்கின்றன.

# பகுதி 8 – நிதிகள்

# 8.0. நிதிகள்

## 8.1 மீண்டெழும் செலவினம்

| விடயம் | | 2017 ரூபாய் | 2018 ரூபாய் |
|---|---|---|---|
| அ. | தனியாள் ஊழியங்கள் | 1,503,377,232 | 1,833,468,187 |
| ஆ. | போக்குவரத்து | 8,730,050 | 12,003,076 |
| இ. | வழங்கல்கள் | 46,532,248 | 52,276,201 |
| ஈ. | பராமரிப்பு | 53,559,716 | 90,936,317 |
| உ. | ஒப்பந்த சேவைகள் | 342,022,001 | 312,938,768 |
| ஊ. | ஏனையவை | 275,600,005 | 241,051,827 |
| **மொத்தம்** | | **2,229,821,252** | **2,542,674,376** |

## 8.2 மூலதன செலவினம்

| விடயம் | | 2017 ரூபாய் | 2018 ரூபாய் |
|---|---|---|---|
| அ | தளபாட மற்றும் ஏனைய காரியாலய உபகரண ஈட்டல் | 148,905,806 | 116,026,371 |
| ஆ. | இயந்திரதாதிகள் ஈட்டல் | 7,126,108 | 9,008,809 |
| இ. | கட்டட மற்றும் கட்டமைப்புக்கள் ஈட்டல் | 55,869,211 | 82,049,827 |
| ஈ. | ஏனையவை (நூலக நூல்கள், பட்டதாரி அங்கிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள்) | 14,128,638 | 14,030,997 |
| | **மொத்தம்** | **226,029,763** | **221,116,004** |

## 8.3 செயற்றிட்டங்களின் விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதி பெறப்பட்டவை)

| | பெயர் மற்றும் விபரங்கள் | நிதி முகவர் | மொத்த ரீ.சீ.ஈ செலவு மதிப்பீடு (ரூபா) | 2016 இன் செலவினம் | 2017 இன் செலவினம் | ஒன்றுதிரட்டப்பட்ட செலவினம் 31.12.2018 | பௌதீக வளர்ச்சி வீதத்தின் 0% | உள்நாட்டு நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திறனிற்கான இணைந்த திறந்த கல்வி மூலங்கள் கற்கைகள் அபிவிருத்தி (சட்ட இலக்கம். சீ.ஏ16-340) | பொதுநலவாயக் கற்றல் | 1,261,250.00 | 170,140.69 | 735,930.00 | 906,070.69 | 71.84 | - |
| 02 | 21ம் நூற்றாண்டில் கற்பவர்களின் பன்முக தேவைகளை பூர்த்திசெய்வதற்கான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (சட்ட இலக்கம். சீ.ஏ16-xxx) | பொதுநலவாயக் கற்றல் | 2,070,060.31 | - | - | - | - | - |
| 03 | இலத்திரனியல் கற்கைநெறி அபிவிருத்தி- கற்பித்தல் மற்றும் கற்றலில் வழிகாட்டல் காணொலிகளைத் தயாரித்தல் ( சீ17- 054) | பொதுநலவாயக் கற்றல் | 1,565,751.32 | - | - | 700,000.00 | 44.71 | - |
| 04 | கல்வியாளர்களுக்கான தொடர்ச்சியான தொழில்சார் விருத்திக்காக வடிவமைப்பு விருத்தி அமுல்ப்படுத்துகை மற்றும் பாரியளவிலான திறந்த நிகழ்நிலை கற்கை நெறிக்காக " திறந்த கல்விவள மற்றும் திறந்த கல்வி செயன்முறை என்பவற்றினை பின்பற்றுதல்: வடிவமைத்தல் அடிப்படையான ஆளுமை விருத்தி ஆரம்பிப்பு". (19 ஈ,டீ- 262) - **பாகம் - 2** | பொதுநலவாயக் கற்றல் | 1,700,000.00 | - | - | 146,437.00 | 8.61 | - |
| 05 | இலத்திரனியல்-நூலகத் தானியங்கிச் செயற்றிட்டம் | இலங்கை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | 15,000,000.00 | - | 8,181,293.00 | 11,841,293.00 | 78.94 | 15,000,000.00 |

| | பெயர் மற்றும் விபர்கள் | நிதி முகவர் | மொத்த ரீ.சீ.ஈ செலவு மதிப்பீடு (ரூபா) | 2016 இன் செலவினம் | 2017 இன் செலவினம் | ஒன்றுதிரட்டப்பட்ட செலவினம் 31.12.2018 | பௌதீக வளர்ச்சி வீதத்தின் 0% | உள்நாட்டு நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06 | கல்வி அமைச்சுடன் இணைந்து, ஆய்வு முறையியலில் ஆசிரியக் கல்வியாளர்களுக்கான குறுகியகால கற்கைநெறி வழங்கல் | இலங்கை கல்வி அமைச்சு | 1,250,000.00 | - | 248,520.00 | 381,820.00 | 30.55 | 1,250,000.00 |
| 07 | "இலங்கை ஆரம்ப பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டம் " பற்றியதான ஆய்வு | யுனிசெப் | 1,791,350.00 | - | 1,215,000.00 | 1,264,000.00 | 70.56 | - |
| 08 | பால் சமத்துவ நிலையத்திற்கான நிதி | பல்கலைக்கழகமாணியங்கள் ஆணைக்குழு | 770,000.00 | - | 6,640.00 | 57,008.22 | 7.40 | 770,000.00 |
| 09 | இலங்கை அரசாங்கத்தின் முன்பிள்ளை விருத்தி செயற்றிட்டத்தின் கீழ் முன்பிள்ளை விருத்தி ஆசிரியப் பயிற்றுவிப்பாளர்களின் பயிற்றுவிப்பாளர்கள், மற்றும் முன்பிள்ளை விருத்தி ஆசிரியர்களுக்கான செயற்றிட்டம் | மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு | 956,425.00 | - | 128,598.00 | 582,134.00 | 60.87 | 956,425.00 |

| | பெயர் மற்றும் விபர்கள் | நிதி முகவர் | மொத்த ரீ.சீ.ஈ செலவு மதிப்பீடு (ரூபா) | 2016 இன் செலவினம் | 2017 இன் செலவினம் | ஒன்றுதிரட்டப்பட்ட செலவினம் 31.12.2018 | பௌதீக வளர்ச்சி வீதத்தின் 0% | உள்நாட்டு நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | கிராமிய பெண் விவசாய சமூகத்தின் இடையில் நடமாடும் கற்கைகளை மேம்படுத்துவதற்கான மகளீர் வலுவூட்டல் அதிகாரமளிப்பு | பொதுநலவாயக் கற்றல் | 1,423,245.94 | - | - | 821,277.41 | 57.70 | - |
| 11 | இலங்கையின் விவசாய விரிவாக்கலில் ஏற்றுமதி விவசாய விருத்தி அலுவலர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு மீதான ஆளுமைகளைக் கட்டியெழுப்புதல் | பொதுநலவாயக் கற்றல் | 600,000.00 | - | 475,538.04 | 525,538.04 | 87.59 | - |
| 12 | இலங்கை தொலைத் தொடர்பு மற்றும் எண்மான உட்கட்டமைப்பு அமைச்சுடன் இணைந்து திறந்த பல்கலைக்கழகத்தினால் விவசாயிகளுக்கான மேல்தட்டு வாழ்நாள் கற்றல் (சட்ட இலக்கம். சீ.ஆர் 18-299) | பொதுநலவாயக் கற்றல் | 1,766,500.00 | - | - | 178,354.06 | 10.10 | - |

| | பெயர் மற்றும் விபர்கள் | நிதி முகவர் | மொத்த ரீ.சீ.ஈ செலவு மதிப்பீடு (ரூபா) | 2016 இன் செலவினம் | 2017 இன் செலவினம் | ஒன்றுதிரட்டப்பட்ட செலவினம் 31.12.2018 | பௌதீக வளர்ச்சி வீதத்தின் 0% | உள்நாட்டு நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | இலங்கையின் உயர்தர இரண்டாம்நிலைப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களினால் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் பொதுநல எண்மான கல்வி தலைமைத்துவ பயிற்சி கற்கை (சட்ட இலக்கம்.சீ 19-008) | பொதுநலவாயக் கற்றல் | 2,539,000.00 | - | - | 819,970.50 | 32.30 | - |
| 15 | பொறியியல் தொழில்நுட்ப பீடத்தின் மாணவர் கல்விசார் மாநாடு | விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 244,625.00 | - | - | 129,250.00 | 52.84 | 244,625.00 |
| 16 | "ஆசியா மற்றும் பசுபிக்கில், சூழலியல் மற்றும் காலநிலை மாற்ற சட்டங்களின் ஆளுமையினை பலப்படுத்தலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிராந்திய ஆளுமை விருத்தி தொழில்நுட்ப உதவி" பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டம்" | ஆசிய அபிவிருத்தி வங்கி | 308,000.00 | - | - | 12,750.00 | 4.14 | - |

| | பெயர் மற்றும் விபர்கள் | நிதி முகவர் | மொத்த ரீ.சீ.ஈ செலவு மதிப்பீடு (ரூபா) | 2016 இன் செலவினம் | 2017 இன் செலவினம் | ஒன்றுதிரட்டப்பட்ட செலவினம் 31.12.2018 | பௌதீக வளர்ச்சி வீதத்தின் 0% | உள்நாட்டு நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | இலங்கை கல்வி அமைச்சுடன் இணைந்து வவுனியா கற்கை நிலையத்தில் ஆசிரிய கல்வியாளர்களுக்காக ஆய்வு முறையியல் பற்றியதான குறுகிய கால கற்கை நெறியினை நடத்துதல் | இலங்கை கல்வி அமைச்சு | 675,000.00 | - | - | - | - | 675,00.00 |

## 8.4 நிதிசார் வளர்ச்சி விபரங்கள் : ( செலவினம்)

| விடயம் | | 2018 இல் ஏற்பாடு (ரூபா) | 2018 இல் செலவினம் (ரூபா) | சேமிப்பு / மேலதிகம் (ரூபா) |
|---|---|---|---|---|
| அ. | செயற்றிட்டம் தவிர்ந்த மீண்டுவரும் செலவினம்* | 2,638,900,000 | 2,885,285,311 | (246,385,311) |
| ஆ. | மூலதனம் தவிர்ந்த மீண்டுவரும் செலவினம் | 516,269,000 | 222,278,349 | 293,990,651 |
| **மொத்தம்** | | **3,155,169,000** | **3,107,563,660** | **-** |

*** பெறப்பட்டவைகளின் தேய்மானம் மற்றும் செயல்முடக்கல் உள்ளடங்களாக (மாணவர்கள்)**

## 8.5 நிதிசார் வளர்ச்சி விபரங்கள் ( பெறப்பட்ட வருவாய்)

| வருமான மூலம் | | 2018 இல் ஏற்பாடு (ரூபா) | 2018 இல் சேகரிப்பு (ரூபா) | பற்றாக்குறை / மேலதிகம் (ரூபா) |
|---|---|---|---|---|
| அ. | பட்டக் கற்கைகள் | 621,601,725 | 514,052,856 | 107,548,869 |
| ஆ. | பட்டப்பின் கற்கைகள் | 310,800,863 | 257,026,428 | 53,774,435 |
| இ. | ஏனையவை | 50,097,412 | 41,429,611 | 8,667,801 |
| **மொத்தம்** | | **982,500,000** | **812,508,895** | **-** |

## 8.6 நிதியியல் பகுப்பாய்வு செயலாற்றுகை – 2018:

| விடயம் | | சூத்திரம் | மாணவர் ஒருவருக்கான செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| அ. | மாணவர் ஒருவருக்கான மீண்டெலும் செலவினம் | மீண்டெலும் செலவினம் / மாணவர் தொகை | 72,157 |
| ஆ. | மாணவர் ஒருவருக்கான மூலதன செலவினம் | மூலதன செலவினம் / மாணவர் தொகை | 5,558 |

## 8.7 2018 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட உட்கட்டுமான வசதிகள்

| உட்கட்டுமான விபரங்கள் | செலவினம் ( ரூபா.) | பௌதீக வளர்ச்சி |
|---|---|---|
| நான்கு மாடிக்கட்டடம்-யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் | 53,099,606 | பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன |
| ஐந்து மாடிக்கட்டடம் - சுகாதார விஞ்ஞான பீடம் | 503,125 | பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன |

# பகுதி 9

# ஆண்டறிக்கையோடு தொடர்புடைய ஏனைய விபரங்கள் / செயலாற்றுகைகள்

## 9.0. ஆண்டறிக்கையோடு தொடர்புடைய ஏனைய விபரங்கள் / செயலாற்றுகைகள்

### 9.1 கணக்காளர் நாயகம் அவர்களின் அறிக்கை

உப வேந்தர்

திறந்த பல்கலைக்கழகம்

இலங்கை திறந்த பல்கழலைக்கழகத்தின் 2018 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வெளியீடுகள் மற்றும் நாளாந்த சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான 2018 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 வது பந்திற்கு அமைவான கணக்காய்வாளரின் அறிக்கை.

---

மேம்படுத்தப்பட்ட அறிக்கை இதனுடன் அனுப்பப்பட்டுள்ளது.

டப்லியூ.ஜீ.சீ விக்ரமரத்ன

கணக்காய்வாளர் நாயகம்

பிரதிகள்:- 1. செயலாளர், நனர திட்டமிடல், நீர்ப்பாசன உயர்கல்வி அமைச்சு

2. செயலாளர், நிதி அமைச்சு

3. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

உப வேந்தர்

திறந்த பல்கலைக்கழகம்

இலங்கை திறந்த பல்கழலைக்கழகத்தின் 2018 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வெளியீடுகள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 வது பந்திற்கு அமைவான கணக்காய்வாளின் அறிக்கை.

---

1. நிதி வெளிப்பாடுகள்

1.1 தரம்கணிக்கப்பட்ட அபிப்பிராயங்கள்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிற்கு நிதி நிலமைகளின் வெளிப்பாடு மற்றும் அன்றுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதி செயற்பாட்டு வெளிப்பாடு ,சுமை வேறுபாடு மற்றும் நிதி வெளிப்பாடுகளுடன் தொடர்புடைய குறிப்புக்கள், சுருக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதி வெளிப்பாடுகள் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154(1) யாப்புடன் இணைதது வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) உப பிரிவு மற்றும் 108(1) உப பிரிவிற்கு ஏற்ப என்னுடைய கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியல் யாப்பின் 154(6)இற்கு அமைவாக எனது அறிக்கை உரிய காலத்தில் பராளுமன்ற சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனது அறிக்கையின் தரம்கணிக்கப்பட்ட அபிப்பிராயத்தின் அடிப்படைப் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படுகின்ற தாக்கம் அல்லாது பல்கலைக்கழகத்தில் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிற்கு நிதி நிலமைகள் மற்றும் அன்றுடன் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை அரச பிரிவின் கணக்காய்வு தரத்திற்கு ஏற்ப உண்மையானதாகவும் நேர்மையானதாகவும் நியாயமானதாகவும் காணப்படுகின்றது என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும்.

1.2 தரம்கணிக்கப்பட்ட அபிப்பிராயம் தொடர்பான அடிப்படை

(அ) இலங்கை அரசாங்கப் பிரிவின் கணக்கீட்டு தரங்கள்

தரம் 07 க்கு ஏற்ப சொத்து மதிப்பீடு செய்யப்பட்டு நிதி வெளிப்பாடுகளுக்கு காட்டவேண்டியதுடன் சொத்து மதிப்பீடு முறையாக மேற்கொள்ளப்படாமையினால் நிதி வெளிப்பாடுகளில் காட்டப்பட்டப்பட்டுள்ள காணி 11 இன் பெறுமதி ரூபா.149,950,000 உம் ரூபா.236,567,269 பெறுமதியான நூலகக புத்தகங்களின் நியாயமான பெறுமதி வெளிப்படாமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வு கொள்கைகள்

வருட முடிவின் மொத்த தொகை பௌதீக தொகை மதிப்பிட்டு நிதி வெளிப்பாடுகளில் கணக்கிடப்பல் நிறுவன கணக்கீட்டுக் கொள்கையாவதுடன் பிரதான களஞ்சியத்தின் தொகை ருபா.5,594,534 ஆக பேரேட்டுக் கணக்கின் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டிருந்ததுடன் பிராந்திய மற்றும் கற்கை நிலயங்களில் ரூபா. 77,991,842 ஆகின்ற தொகை பௌதீக பேரேட்டுத் தொகையுடன் ஒப்பிட்டுடப்படாமல் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) கணக்கீட்டு குறைபாடுகள்

கடந்த வருடத்தில் ரூபா.34,847 ஆகின்ற தொட்டுணர முடியாத சொத்துக்களின் ஆயுட் காலத்தை கணிப்பிட்டு முன்வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருத்தல்.

இலங்கை கணக்காய்வு தரங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வு செய்துள்ளேன். இந்த கணக்காய்வு தரங்களின் கீழான எனது கடமை, இந்த அறிக்கையின் நிதி வெளிப்பாட்டு கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பானது மேலும் விவரிக்கப்பட்டுள்ளது.

என்னுடைய தூழ்கணிக்கப்பட்ட அபிப்பிராயத்தின் அடிப்படையில் அறக்கட்டளை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு ஆதாரங்கள் போதுமாவை மற்றுமு் சரியானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தினரின் வகிபாகம்

---

இந்த நிதி வெளிப்பாடுகள் இலங்கை அரச பிரிவின் கணக்காய்வு தரத்திற்கு ஏற்ப வரிசைப்படுத்தல், நியாயமாக முன்வைத்தல், மற்றும் மோசடி அல்லது தவறான காரணம் ஏற்படக்கூடிய போதுமான அளவிலான வெளியீடுகள் அல்லாமல் நிதி வெளியீடுகளை ஒழுங்குபடுத்த முடியுமானவாறு தேவைப்படுகின்ற உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதி வெளிப்பாடுகளை ஒழுங்குபடுத்தும் போது, நிறுவனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் தகைமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதடன் ,முகாமைத்துவம் நிறுவனத்தை கலைப்பதற்கு யோசிப்பதாயின் தொடர்ச்சியான நடைமுறையின் ஸ்தீரத்தன்மையயின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான நடாத்துகைக்கு தேவையான காரணங்களை இணங்காண்பது முகாமைத்தவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடும் செயற்பாடு சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கும் தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 16(1) ஆம் உப பந்திற்கு ஏற்ப. நிறுவனத்தின் வருடாந்த மற்றும் தவணை நிதி வெளிப்பாடுகளை ஒழுங்குபடுத்த இயலுமானவாறு வருமானம்,செலவுகள்,சொத்து மற்றும் வைப்புக்கள் தொடர்பாக உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கையை நடாத்திச் செல்லல் வேண்டும்.

1.4 நிதி வெளிப்பாடுகள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதி வெளிப்பாடுகள், மோசடி மற்றும் தவறுகள் போன்றவற்றினால் ஏற்படுகின்ற போதியளவு மெய் வெளியிடுகளில் இருந்து வேறுபட்டவை என சாதாரன உறுதிப்பாட்டை வழங்குதலும் என்னுடைய அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். சாதாரனமாக சான்றளித்தல் என்பது உயர் மட்ட சான்றளித்தல் ஆகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு தரத்திற்கு ஏற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்படும் போது, அது எப்போதும் போதியளவு அசத்திய வெளியீடுகளை உள்வாங்கிக் கொள்கின்றது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. மோசடி மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கம் செலுத்துவதால் போதியளவு அசத்திய வெளியீடுகள் ஏற்படக்கூடியதுடன், இந்நிதிய வெளிப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பரிசோதகர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
என் மூலம் தொழில்சார் தீர்மானம் மற்றும் தொழில்சார் நம்பிக்கையின்மையுடன் இலங்கை கணக்காய்வு தரத்திற்கு ஏற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

மோசடி அல்லது தவறு காரணமாக நிதி வெளிப்பாடுகளில் ஏற்படக்கூடிய அசத்திய வெளியீட்டு அவதானங்களை அடையாளம் காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உரிய கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகளையும் தவறுகள் மூலம் ஏற்படும் அவதானங்களை அல்லாதொழிப்பதற்கும், போதியளவு மற்றும் தகுதியான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக் கொள்வது என்னுடைய அபிப்பிராயம் ஆகும். அசத்திய வெளியீடுகளினால் ஏற்படும் தாக்கத்தைவிட மோசடியால் ஏற்படும் தாக்கம் கடுமையானதுடன், கூட்டுசதி , போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்று தவறவிடல் அல்லது உள்ளக நிருவாகத்தினால் தவறவிடல் போன்றன மோசடிகள் ஏற்படுவதற்கான காரணம் ஆகும்.

சந்தர்ப்பங்களுக்கு உரிய கணக்காய்வு நடைமுறையை செயற்படுத்தும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக நிருவாகம் தொடர்பாக புரிந்துணர்வைப் பெற்றுக் கொண்டுருப்பினும், உள்ளக நிருவாகத்கின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயத்ததை தெரியப்படுத்துவதற்கு திட்டமில்லை.

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும முகாமைத்துவம் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைவு வெளிக்கொணர்தலின் சாதகத்தன்மை மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவங்கள் அல்லது நிலமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலமைகள் தொடர்பான அசத்திய வெளியீடுகள் காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொண்ட கணக்காய்வு சாட்சியின் அடிப்படையில் கணக்காய்விற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான ஸ்தீரத்தன்மை தொடர்பாக அறக்கட்டளை வழங்குவது தீர்மானிக்கப்பட்டது. அசத்திய வெளியீடுகள் உள்ளதாக நான் தீர்மானித்துவிட்டால் நிதி வெளிப்பாடுகளில் அது தொடர்பான வெளிக்கொணர்வுகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் அவதானம் செலுத்த வேண்டியதுடன், அவ்வெளிக்கொணர்வுகள் போதுமானதாக இல்லாவிடின் என்னுடைய அபிப்பிராயம் திருத்தப்படல் வேண்டும்.எது எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடையக்கூடும்.

வெளிக்கொணர்வுகளை உள்ளடக்கிய நிதி வெளிப்பாடுகளின் முன்வைப்பு, வியூகம் மற்றும் உள்ளடக்கம் போன்றவற்றை கணிப்பிட்டதுடன் அவற்றிற்கு காரணமாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உரிய மற்றும் நியாயமாக நிதி வெளிப்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

என்னுடைய கணக்காய்வில் இணங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிருவாகக் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்வாக நிருவகிக்கின்ற பிரிவினர் அறியப்படுத்தப்பட்டுள்ளனர்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

---

2018 ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தில் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட மானியங்கள் உள்ளடங்குகின்றன.
1978 ஆம் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காகய்வு சட்டத்தின் 12(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, என்னுடைய அறிக்கையின் தூய்கணிக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படையின் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள காரணங்களினால் ஏற்படுகின்ற தாக்கம் அல்லாமல், கணக்காய்விற்குத் தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், என்னுடைய ஆய்வின் அடிப்படையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டிருந்தன.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஐ) (ஆ) (ஐஐஐ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப பல்கலைக்கழகத்தின் நிதி வெளிப்பாடு கடந்த வருடத்துடன் இசைந்து செல்கின்றது.

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 69ஐ) (ஆ) (ஐஎ) பந்தியின் தேவைப்பாட்டிற்கு அமைவாக கடந்த வருடம் என்னளால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையில் முன்வைக்கப்பட்ட நிதி வெளிப்பாடுகளில் உள்ளடங்குகின்றன.

பின்பற்றப்பட்ட வழிமுறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படை மற்றும் போதியளவு காரணங்களுக்கு வரையறுத்தல், கீழ்வருவனவற்றை குறிப்பிடும் அளவிற்கு ஏதும் என்னுடைய அவதானத்திற்கு வரவில்லை.

2.1 2018ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வ சட்டத்தின் 12(ஆ) பந்தியின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப பல்கலைக்கழகத்தின் நிர்வாக்குழுவின் ஒரு உறுப்பினருக்கு பல்கலைகக்கழகத்துடன் தொடர்பு கொண்டு ஏதாவது ஒரு உடன்படிக்கை தொடர்பாக நேரடியாக அல்லது வேறு எவ்வகையிலாயினும் சாதாரன வியாபார நிலமைகளில் இருந்து அண்ணியமான தொடர்பு உள்ளதாக.

2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வ சட்டத்தின் 12(ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டடிற்கு ஏற்ப கீழ்வரும் கண்காணிப்புக்களை விடுத்து எழுத்து மூலமான நீதிக்கு அல்லது பல்கலைக்கழக நிர்வாகக்குழு மூலம் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு ஏற்பற்றதாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

சட்டங்கள்,விதிகள்,பிராமணங்களுடன் தொடர்பு இணக்கமின்மை

(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக்கோவை

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணங்கள் 751(1) | தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்டிருந்த பாடநெறிப் புத்தகங்கள் மற்றும் கல்விப் பண்டங்கள் தொடர்பாக பிராந்திய கல்வி நிலையங்களில் இருப்புப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (II) நிதிப் பிரமாணங்கள் 756 மற்றும் 757 | வருடாந்த தொகை மதிப்பீடு செய்து அவ்வறிக்கைகளின் பிரதியை கணகாய்வாளருக்கு அனுப்ப வேண்டியதுடன் 2018டிசம்பர் 31ஆம் திகதிற்கு ரூபா 236.567.269 ஆகின்ற செலவு நூலக புத்தகங்கள் மற்றும் ரூபா.4,748,975 ஆகின்ற செலவு பட்டமளிப்பு அலங்காரங்களுக்காக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (III) நிதிப் பிரமாணங்கள் 1645 | வாகன லொக் குறிப்புப் புத்தகம் மற்றும் நாளாந்த ஓட்டக்குறிப்பு தொடர்பாக பேணவேண்டிய ஆவணங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படவில்லை. |
| (ஆ) பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனக்கோவையின் | சகல உயர்கல்வி நிறுவனங்களிலும் வரவு ஆவணங்களை பராமரிக்க வேண்டியதுடன், நிறுவனத்தில் வேலைபார்க்கும் சகலரும் வரவு மற்றும் வெளியேற்ற நேரங்களை பதிய வேண்டியதுடன் பல்கலைக்கழக கல்விசார் பிரிவின் ஊழியர்கள் வரவு ஆவணங்களை பராமரிக்கமல் இருந்துள்ளதுடன் வரவை உறுதிப்படுத்தால் சம்பளம் மற்றும் கொடுப்பணவுகள் வழங்கப்பட்டுள்ளன. |
| (II) XXVI பந்தியில் 3.2 மற்றும் 3.3 | வருடாந்த தொகை மதிப்பீடு மூலம் அறயப்பட்ட நிலையான சொத்து 115 ………….. தொடர்பாக விமர்சனம் செய்ததன் பின்னர் உரிய குறைபாடு, காணமற் போதல் அல்லது சேதத்திற்கு பதில் சொல்ல வேண்டிய நபரை அறிந்து கொண்டு அவரிடமிருந்து அதனை மீளப்பெறும் பெறுமதியை அறவிட வேண்டியதுடன் அது அவ்வாறு நிறைவேற்றப்படவில்லை. |
| (இ) 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதியுடைய 118 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையின் 2.1.7 பந்திற்கு அமைவாக | உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்று வந்து 02 மாதங்களுக்குள் அல்லது உத்தியோத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்கள் கடந்த நிலையில் திணைக்களங்களுக்கிடையில் தீர்க்கப்படாத கடன்களை கணக்கில் காட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுடன் அதற்கு மாறாக 08 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா.324,644 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) உப வேந்தர் மூலம் வெளியிடப்பட்ட 2010 டிசம்பர் 27ஆம் திகதியுடைய இலக்கம் OU/F/IC/01 ஆலோசனைப் பத்திரத்திற்கு அமைவாக | முற்பணம் பெற்றுக் கொண்ட நாள் முதல் 30 நாட்களுக்குள் தீர்க்கவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் 2018 ஆம் வருடத்தில் வெளியிடப்பட்டிருந்த ரூபா.1,221,719 |

பெறுமதியான முற்பணம் 40ஐத் தீர்க்கும் காலம் 60 நாட்களை விட அதிகமாக இருந்தது.

2.3 2018 ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் (12)உ பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்பற்றதாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

2.4 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஊ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் அடிப்படையில் கீழ்வரும் கணிப்பீடுகள் அல்லாத பல்கலைக்கழகத்தின் வளதிட்டமிடுபவர்களாக, வினைதிறனுடனும் விளைதிறனுடனும் காலப்பகுதிற்குள் உரிய சட்டதிட்டங்களுக்கு ஏற்ப பெறுகையை மேற்கொண்டு இருக்கவில்லை.

(அ) மிகையான புத்தகங்களை அச்சிட்டதன் காரணமாக கடந்த வருடத்தின் செலவுகள் ரூபா. 21,283,087 ஆகின்ற புத்தகங்கள் 121,248 ஐ அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் சுத்தப்படுத்தல் சேவைக்காக உடன்படிக்கைக்கு ஏற்ப ரூபா.1,568800 மாதந்தம் வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும் போதியளவு ஊழியர்களை பயன்படுத்தாமல் இருந்ததுடன் சுத்தப்படுத்தல் வேலைகள் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) சுகாதார விஞ்ஞானபீடத்தின் ஐந்தாம் மாடியை நிறுவுவதற்காக 2016 ஒக்டோபர் 11 ஆம் திகதி ரூபா.402.5 மில்லியன் சிபாரிக்கிப்பட்டுள்ளதுடன் அன்று முதல் 02 வருடங்களுக்குள் நிர்மாணப்பணிகளை முடிக்க வேண்டியதுடன் கடந்த வருடத்தின் இறுதிநாள் ஆகின்ற போது உரிய நிர்மானப்பணிகளை ஆரம்பித்திருக்கவில்லை.

(ஈ) கல்விப்பீடத்தின் நான்காம் மாடியின் கூரையை புனர்நிர்மாணம் செய்யும் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான செலவு ரூபா.5,392,936 பெறுமதி 2016 ஆம் ஆண்ட முதல் 2018 ஆம் வரையிலான நிதி வெளிப்பாடுகளில் இடம் பெறும் வேலைத்திட்டங்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தன. அதன் சமாந்திரமான வருடத்தின் இறுதிநாள் ஆகின்ற போது உரிய நிர்மானப்பணிகளை முடிந்திருக்கவில்லை.

3. ஏனைய அவதானங்கள்

(அ) 19888 ஆம் வருடம் முதல் 2000 ஆம் வருடம் ஒப்பத்தத்தை முறியடித்த கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் 14 பேர்களிலிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா.48,085,752 பணத்திலிருந்த எந்தப்பணமும் ஒப்பந்தம் முறியடிக்கப்பட்ட திகதி முதல் முழு வருடத்திற்கும் அறவிடப்படாமல் இருந்ததுடன் ஒப்பந்தத்தை 15 பேர்களிடமிருந்த முறியடித்த வேண்டிய மொத்தம் ரூபா.35,521,351 முழு உடன்படிக்கைப் பெறுமதி ரூபா.18,499,495க்கு முன்னனைய வருடம் வரை அறவிடப்பட்டிருப்பினும் முழு வருடத்திலும் அவ்வுத்தியோகத்தர்களிடமிருந்து எத்தகைய அறவீடும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) ஊழியர்களுள் 56 பேர்களில் 2018 டிசம்பர் 31 ஆமம் திகதிற்கு அறவிடப்படாத ஊழியக் கடன் ரூபா.2,497,789 ஆகின்றதுடன் அதற்குள் நிறுவனத்தை விட்டுச் சென்ற செயற்குழுவினர்களுள் 47 பேர்களிடமிருந்மு அறவிடப்பட வெண்டிய ரூபா. 1,754,223 ஆகும்.

(இ) உடன்படிக்கைத்திட்டம் மற்றும் செயற்பாட்டுத்திட்டத்தை ஒழுங்கமைத்து கணக்காய்விற்கு முன்வைத்திருப்பினும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிராக உரிய திட்டங்களைப் பயன்படுத்தி உயர் மட்ட முகாமைத்துவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லலை.மேலும் மதிப்பாய்வு வருடத்திற்குரிய செயற்திறன் அறிக்கையை ஒழுங்குபடுத்தும் போது வருடாந்த செயற்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் தெளிவாக அறிந்து கொள்ள முடியுமானவாறு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்தில் 2018 டிசம்பர் 31ஆம் திகதி அனுமதியளிக்கப்பட்ட செயற்குழு 1.494 ஆவதுடன் உண்மையான ஊழியக்குழு 1220 ஆகின்றது. பல்கலைக்கழகம் மூலம் 112 கல்விசார் ஊழிய வேலைவாய்ப்புக்கள் மற்றும் கல்விசாரா ஊழிய வேலைவாய்ப்புக்கள் 162 ஐ பூரணப்படுத்துவதற்காக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக தேசிய வரவு செலவுதிட்ட திணைக்களம் வெளியிட்ட சுற்றறிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களின் அடிப்படையிலான 2030 நியாயப்பத்திரம் தொடர்பாக திறந்த பல்கலைக்கழகத்திற்கு அறியப்படுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தின் பேண்தகு அபிவிருத்திகளின் இலக்குகளை இணங்கண்டு இருந்ததுடன் அதற்குரிய வேலைத்திட்ட திட்டங்களை உள்ளடக்கல், …. அறிந்து

கொள்ளல், பணி சூசகங்களை அறிந்து கொள்ளல், வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல் முறைமையினை நிறுவுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிப்பிராமணங்கள் 133 மற்றும் 134 போன்றவற்றிற்கான கட்டளைகள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக நிறுவனத்தின் உள்ளக நிருவாக குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றை மெருகூட்டுவதற்காக உள்ளக கணக்காய்வை மேற்கொள்வது தொடர்பாக முகாமைத்துவம் கரிசனைகாட்டியிருக்கவில்லலை.

(எ) திறந்த பல்கலைக்கழத்தின் மூலதனச் செலவை அரசாங்கத்தினால் ஏற்பதற்காக ஏனைய மீண்டெழும் செலவுகளை உள்ளடக்குவதற்காக கற்கைநெறிக் கட்டணங்கள் போன்ற உள்ளக வருமானங்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும். 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மீள் பிரதானங்கள் ரூபா.207.4 மில்லியன் ஆக 19 வீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் உழைக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா. 441.1 மில்லியன் ஆக 34 வீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் இந்நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கு அரசாங்கம் ஏற்க வேண்டிய செலவு அதிகரித்துக் காணப்படுகின்றது.

(ஏ) திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் பராமரிக்கப்படுகின்ற 18 காணிகளின் பெறுமதி நிதி வெளியீடுகளுக்கு அமைவாக ரூபா.4,367,290,394 ஆகும். அதன் சட்ட ரீதியான உரிமம் பெற்றுக் கொள்ளப்பட்ட 11 காணிகளின் ரூபா.266,539,328 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக கண்டறிபயப்பட்டுள்ளன.

(ஒ) பல்கலைகத்தில் உள்ள நூலகத்தில் பயன்பாட்டில் உள்ள புத்தகங்களின் பெறுமதி ரூபா.236,567,269 ஆகும். இவற்றில் கற்கை நிலையங்களில் காணப்படும் நூலகங்களின் இடங்கள் முறையாகக் பயன்படுத்தப்படாமை. சில நூலக அறைகளை மூடியிருத்தல், பௌதீக புத்தக தொகை மதப்பீடு மேற்கொள்ளப்படாமல் இருத்தல் மற்றும் பிரதான நூலகத்தில் நிறுவப்பட்டுள்ள கணனி முறைமை மூலம் சரியான தகவல்கள் கணக்கிடப்படாமல் இருத்தல் கோன்ற குறைபபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

(ஓ) தொகை மதிப்பீடுகளில் கண்டுகொள்ளப்பட்ட அசையா சொத்துக்களின் தொகை மற்றும் மெதுவாக அசைய்ும சொத்துக்களின் தொகை மதிப்பீடு கணக்கிடப்பட்டு களஞ்சியத்திலிருந்து அகற்றுவதற்குத் தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஐ) ஒப்பந்தங்களை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வருமானம் மற்றும் காலப்பிரிவில் பெற்றுக் கொண்ட வருமானம் தொடர்பாக நிதிப்பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் நிறுவனப் பிரிவினமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்குமிடையில் பரஸ்பர தன்மை காணப்படுவதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டருப்பினும், நிறுவனப் பிரிபின் ஏடுகளை விதிப்பது செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லலை.

(ஔ) பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள மின்பிறப்பாக்கிகளின் கொள்ளளவு போதுமானதாக காணப்படாமை மற்றும் செயழிழத்தல் போன்றவற்றுடன் இயங்காமல் இருத்தல் போன்ற காரணங்களினால் மின் துண்டிக்கப்பட்டு அசௌகரியங்கள் காணப்படும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமீடுள்ளன.

(க) தொலைகல்வி வேலைத்திட்டத்தினன் மூலம் பல்கலைக்கழகத்திற்கு 2009 ஆம் வருடத்தில் வழங்கப்பட்ட ரூபா.1,580,000 பெறுமதியான பொலிதீன் பைகளைதட தயாரிக்கக்கூடிய இயந்திரம் மற்றும் பல்கலைக்கழகத்திற்குரிய நிலையான சொத்து ஈபொருட்கள் 128 இயங்காமல் காணப்பட்டன.

(ச) திறந்த பல்கலைக்கழகம் மூலம் நடாத்திச் செல்லப்படும் நடைமுறைக்கணக்கு மற்றும் சேமிப்புக் கணக்கொன்றின் வருடத்தின் ஒழுங்கமைப்பில் ரூபா.14மில்லியன் மற்றும் ரூபா.10 மில்லியனுக்கு அதிகமான தொகையை பயனுள்ள முதலீடு செய்யாமல் வீணாக இருந்துள்ளன.

(ட) பல்கலைக்கழகத்தின் கல்விசார் வரைமுறைகளுக்கு ஏற்ப பொதுவாக 04 வருடங்களுக்கு ஒருமுறை சகல கற்கைநெறிகளும் மீள திருத்தப்பட்டு மேம்படுத்தப்படவேண்டி இருப்பினும், பல்கலைக்கழகத்தின் பல கற்கைநெறிகள் தொடர்பாக அவ்வாறான மீளாய்வுகள் இடம் பெறாமல் இருந்ததுடன் தாமதகாலம் 02 முதல் 24 வருடங்கள் வரையிலான இடைவெளியைக் கொண்டிருந்தது.

(த) பல்கலைக்கழகத்தில் ரூபா.3,000.000 ஆகின்ற முகாமைத்துவ தகவல் முறைமை 05 பிரிவுகளின் செயற்பாடுகள் தொடர்பாக 05 தொகுதிகளின் கீழ் நிறுவப்பட்டிருந்ததுடன் அந்த அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்திருக்கவில்லை.

(ப) பல்கலைக்கலகத்தின் ஒவ்வொரு பீடத்தினதும் கல்வி செயற்பாடுகள் தொடர்பான வேலைத்திட்டங்களின் உற்பத்தி பிரதான குறிக்கோளுடன் ரூபா.306.3 மில்லியன் பெறுமதியான

கட்டிடத்தில் ரூபா.133.2 மில்லியன் பெறுமதியான உபகரணங்களுடன் அமைக்கப்பட்டுள்ள கல்வி தொழிநுட்ப மற்றும் ஊடகப் பிரிவு மூலம் வணிக நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வெளிவாரி நிகழ்சிகளை தயாரிக்க கூடியதாக இருந்தாலும் அதன் மூலம் இலாபம் ஈட்டுவதற்கோ அல்லது மாணவர்களின் பயன்பாட்டிற்கோ பயன்படுத்தப்படவில்லை.

(ற) தேசிய வழிகாட்டல் தொலைகல்விச் சேவை 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2015 மார்ச் மாதம் 01 ஆம் திகதி ஆகின்ற போது வேலைத்திட்டத்தின் நிர்வாக செயற்பாடுகள் திறந்த பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டதன் மூலம் சமகாலத்தில் பல்கலைக்கழகத்திற்குள் கட்டிடமொன்றில் அவ்வலகு அமைக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் வருடம் முதல் 2013 ஆம் வருடம் வரை மொத்தம் ரூபா.100,757,839 ஈட்டப்பட்டிருந்தாலும் அன்று ஈட்டப்பட வெண்டிய விசாலமான வருமானம் ஈட்டப்படாமல் தவிர்க்கப்பட்டிருந்ததனால் அவ்வேலைத்திட்டம் தற்போது மிகக் கீழ்மட்ட பாவனைக்கு பயன்படுத்தப்படுகின்றது.

(ய) வரவு செலவுத்திட்டம் மற்றும்  செலவு உண்மை வரவு மற்றும் செலவுடன் ஒப்பிடும் போது முறையாக நூற்றிற்கு 32 முதல் நூற்றிற்கு 1,379 வரை போதுமானதாக இருந்தாலும் வரவு செலவு ஏட்டை விளைதிறனான நிதி நிர்வாகக் கூறாக பயன்படுத்தப்படவில்லை என்பது புலப்படுகின்றது.

டப்லியூ.பீ.சீ விக்ரமரத்ன
கணக்காய்வாளர்

## 9.2 கணக்காளர் நாயகம் அவர்களின் அறிக்கைக்கான மறுமொழி

கணக்காய்வாளர்
கணக்காய்வு திணைக்களம்
இல 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல

ஐயா,

**இலங்கை திறந்த பல்கழலைக்கழகத்தின் 2018 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வெளியீடுகள் மற்றும் நாளாந்த சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 வது பந்திற்கு அமைவான கணக்காய்வாளின் அறிக்கை.**

4. நிதி வெளிப்பாடுகள்
--------------------------------

1.1 தரம்கணிக்கப்பட்ட அபிப்பிராயங்கள்
---------------------------------------------------------------

1.2 தரம்கணிக்கப்பட்ட அபிப்பிராயங்களுக்கான அடிப்படை
---------------------------------------------------------------------------------------

(அ) இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு தரங்கள்

2019-06-03 ஆம் திகதி தேசிய கணக்காய்வு காரியாலயத்தில் பிரதி கணக்காய்வாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் உடன்பட்டதற்கு இணங்க சட்டம், உடைமை உறுதிப்படுத்தபடாத ஆனால் பல்கலைக்கழகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற காணிகள் பல்கலைக்கழக சொத்துக்களாக நிதி வெளிப்பாடுகளில் வெளியிடாமலும் அது தொடர்பாக நிதி வெளிப்பாட்டுக்குறிப்புகளின் கீழ் வெளியிடுவதற்கும் 2019 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே நூலக புத்தக கணக்கெடுப்பு மேற்கொள்ளும் செயற்பாடு 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டிற்குள் புத்தகங்களின் பௌதீக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. எனினும் அப்புத்தகங்களின் பெறுமதியைக் கணக்கிடும் செயற்பாட்டிற்கு அதிக காலம் செல்வதால் 2018ஆம் ஆண்டின் நிதி வெளிப்பாடுகளில் தொகை மதிப்பீட்டுக் கணக்கெடுப்பு வெளியிட முடியவில்லை. எனினும் 2019 ஆம் நிதி வெளிப்பாடுகளை முன்வைக்கும் போது இத்தொகை மதிப்பீடுகளை வெளியிடுவதற்குத் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) கணக்கீட்டுக் கொள்கைகள்
---------------------------------------------

(I) தொகை மதிப்பீடு மேற்கொள்ளும் போது பல்கலைக்கழகம் மூலம் ஒருநிலைக் கொள்கை பின்பற்றப்பட்டுள்ளது. அதற்கமைய பிரதான களஞ்சியத்தில் உள்ள தொகைகளை

ஏனைய அலகுகள் மற்றும் பிராந்திய கற்கை ிலையங்களுக்குரிய தொகைகளையும் பௌதீக தொகைக்கணக்கில் கணக்கிடப்பட்டுள்ளது.

எனினும் பிரதான களஞ்சியத்தில் தொகை மதிப்பீடு மேற்கொள்ளும் போது தவறு ஏற்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்கின்றேன். இருப்புக் களஞ்சியத்தில் வருடாந்த தொகை மதிப்பீட்டு அறிக்கைக்கு ஏற்ப 2018-12-31 ஆம் திகதி இடம் பெற்ற தொகையை கணக்கிடுவதற்க நடவடிக்கை மேற்கொண்டாலும் தவறுதலாக அசையும் சொத்து இருமுறை கணக்கிடப்பட்டுள்ளது. அதனால் இருப்புத் தொகை ரூபா.403,617.00 அதிகமாக கணக்கிடப்பட்டுள்ளது.

அவ்வாறே பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் புத்தக தொகை மதிப்பிடும் போது பௌதீகத் தொகை , புத்தகங்களின் தொகை ஒப்பிடப்பட்டுள்ளது. இச்செயற்பாடு 2019 ஆம் ஆண்டு முதல் முறையாக மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------------------------

தொட்டு உணர முடியாத சொத்துக்களின் கீழ் OMIS மற்றும் Network அமைப்பு மற்றும் E-Books உள்ளடங்குகின்றன. ழுஆஐளு அமைப்பு 10 வருடங்களாக பல்கலைக்கழகத்தில் இயங்குவதுடன், ஏனைய அமைப்புகள் மற்றும் நு-டிழழமள போன்றன தொடர்பான ஆயுட்காலத்தை கணித்து உறுதியாக கூற முடியாது. அதனால் அவைகளின் தேய்வும் கணக்கிடப்படுவதில்லை. எனினும் 2019 ஆம் ஆண்டு முதல் தொகை மதிப்பீடு மேற்கொள்ள பல்கலைக்கழகம் நடவடிக்கை பூண்டுள்ளது.

1.3 நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்தினரின் பொறுப்பு

----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

1.4 நிதி வெளிப்பாடுகள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------------------------------------------------------------------------------------

2 ஏனைய சட்ட ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

--------------------------------------------------------------------------------------------------------------

2.1
2.2

| சட்டங்கள்,விதிகள்,பிராமணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக்கோவை | | |
| (I) நிதிப் பிரமாணங்கள் | 751(1) | கற்கைநெறிப்புத்தகங்கள் மற்றும் கற்கைப் பொருட்கள் தொகை மதிப்பீட்டிற்காக கணனி மென்பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அவை மேம்படுத்தப்படவில்லை. |

(II) நிதிப் பிரமாணங்கள் 756 மற்றும் 757

(III)

2018 ஆம் ஆண்டில் நூலக புத்தகங்கள் மற்றும் பட்ட லொக்களுக்காக வருடாந்த தொகை மதீப்பீடு இடம்பெற்றுள்ளது. நூலக

புத்தகங்கள் தொடர்பாக தொரக மதிப்பீடு மேற்கொள்ளும் குழுவினர் வழங்கிய பரிந்துரைகளுக்கு அமைவாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக 2019 மார்ச் மாதம் நிருவாகக்குழுவினருக்கு காரணங்களை முன்வைத்துள்ளதுடன் அதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது.

அவ்வாறே கணிப்பீட்டுக்குழு 12 இன் கீழ் பிரதான களஞ்சியத்தின் தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அதன் கீழ் பட்டமளிப்பு லோக் கணப்பிடப்பட்டுள்ளது.

(IV)

நிதிப் பிரமாணங்கள் 1645 வாகன லொக் புத்தகங்களை முறையாகப்பயன்படுத்த சகல சாரதிகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. புதிதாக லொக் புத்தகங்கள் சகல வாகனங்களுக்காகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) பல்கலைக்கழங்கள் மற்றும்
உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனக்கோவையின்

(I) XX ஆம் பந்தி 3.1

பல்கலைகக்கழக அமைப்பின் கல்விசார் ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேற்றம் பதியப்படுவதில்லை. இதனால் இது எங்களுடைய பல்கலைக்கழகத்திற்கு மாத்திரம் மேற்கொள்ள முடியுமான நடைமுறை அல்லாததுடன் இதற்காக ஒட்டுமொத்த பல்கலைக்கழக் அமைப்பிலும் மாற்றம் கொண்டுவரப்படல் வேண்டும். இது தொடர்பாக 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊழீநு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்கான முறையை ஏற்படுத்துவதற்கு உயர்கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் உடன்பட்டுள்ளனர்.

(II) XXVI பிரிவு 3.2 மற்றும் 3.3

தொகை மதிப்பீட்டு அறிக்கைகளின் பின்னர் கணக்காய்வுப் பிரிவின் மூலம் தெரியப்படுத்தப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் நிலையான சொத்துக்கள் காணப்போதல் அல்லது இழக்கப்படல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற அறிக்கைகளுக்கு அமைவாக எதிர்காலத்தில் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதியுடைய
118 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையின்

2.1.7 பந்திற்கு அமைவாக

வேறு பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 3 பேர்களினது தீர்க்கப்படாத கடன் காணப்படுகின்றது. அந்தக் கடனைத் தீர்க்குமாறு உரிய பல்கலைக்கழகங்களிற்கு அறியப்படுத்தப்பட்டுள்ளதுடன் நினைவு படுத்தப்பட்டும் உள்ளது. இந்தத் தொகை 2019 ஆம் ஆண்டிற்குள் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) உப வேந்தர் மூலம் வெளியிடப்பட்ட 2010 டிசம்பர் 27ஆம் திகதியுடைய இலக்கம் OU/F/IC/01 ஆவோசனைப் பத்திரத்திற்கு அமைவாக

முற்பணம் 30 நாட்களுக்குள் தீர்க்கப்படுவதற்கு பல்கலைக்கழகம் எப்போதும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

உங்களினால் குறிப்பிடப்பட்டுள்ள முற்கொடுப்பணவுப் பணத்தில் 31 2018-02-28 முதல் 2018-04-17 வரை பல்கலைக்கழக ஊழிய பணிப்பகிஷ்கரிப்பு இடம் பெற்றதினால் தீர்க்கப்பட்டுள்ளது ஏப்ரல், மே மாதங்களில் ஆகும். மீதமுள்ள பணம் முற்கொடுப்பணவு பெற்றுக் கொண்ட நாள் முதல் 30 நாட்களுக்குள் தீர்க்கப்படாததை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான நிலமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு உரிய சகல பிரிவினர்களினதும் பிரதானிகள் மற்றும் ஊழிர்களுக்கு அறியப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.3

2.4 (அ) கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்களில் புத்தக மிகுதி மத்திய புத்தக விநியோக மத்திய நிலையத்தில் இருப்பது அறியப்பட்டுள்ளது. இவ்வாறான புத்தக மிகுதிகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்தது,

(I) கற்கைநெறிகளுக்காக விண்ணப்பித்த சகல மாணவர்களும் அக்கற்கைநெறிக்கு பதிவுகளை மேற்கொள்ளாமை.

(II) ஒவ்வொரு வருடத்திலும் கற்கைநெறிக்காக பதியும் மாணவர்களது எண்ணிக்கையில் ஏற்ற இறக்கம் காணப்படல்.

(III) மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளும் போது தேவையான புத்தகங்களை வழங்க வேண்டியதுடன் பதிவு செய்வதற்காக வருகின்ற மாணவர்களது எண்ணிக்கை முறையாக கணப்பிட முடியாததன் பலவீனம் ஆகும்.

(IV) கற்கைநெறிக்காக பதிகின்ற சகல பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களிற்கு மாணவர்கள் வருவார்கள் என்கின்ற எதிர்பார்ப்புடம் புத்தகங்களை வழங்கியுள்ள தேவைப்பாடு.

(V) கற்கைநெறியின் தன்மையை உயர்த்துவதற்காக கற்கைநெறிப் பத்தகங்கள் அடிக்கடி மீளாய்விற்கு உட்படுத்த வேண்டியமை போன்ற காரணங்களாகும்.

மேற்கூறப்பட்ட காரணங்கள் மூலம் ஏற்படும் புத்தக மிகுதியை தடுப்பதற்காக முடியுமான அளவு சரியாக கணிப்பிடுவதன் மூலம் புத்தக மிகுதியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களின் புத்தக மிகுதியை தடுப்பதற்காக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் புத்தகங்களின் தொகையை துல்லியமாக ழுஆஐளு அமைப்பின் மூலம் முடியுமான அளவு தகவற் தொழிநுட்ப பிரிவின் மூலம் தற்போது செய்முறை தயாரிக்கப்பட்டுள்ளது.

அச்சிடுவதற்கான உத்தரவுகளை தயாரிக்கும் போது மேலதிகமாக அச்சிடப்படும் அளவை கருத்திற் கொண்டு அச்சிடுவதற்கு நடவடிக்ககை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) மக்கள் சுகாதார பரிசோதகரின் உடன்படிக்கைக்கு அமைவாக பல்கலைக்ககழகத்தின் துப்புரவு நடவடிக்கைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு 50 ஊழியர்களை நாள்தோறும் கடமையில் அமர்த்த வேண்டும் என்பது சரியான கூற்றறாகும். எனினும் உரிய சேவை வழங்கிய நிறுவனம் பல்வேறு சந்தர்ப்பங்களில் உடன்படிக்கைக்கு ஏற்ப கடமையை மேற்கொள்ளாததுடன், அது தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக வாய் மூலமும் தொலைபேசி மூலமும் எழுத்து மூலமும் எச்சரிக்கப்பட்டது. எனினும் உரிய நிறுவனம் குறைபாடுகளை திருத்திற் கொள்ள எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளளவில்லை. எனவே எதிர்கால துப்புரவு செய்யும் உடன்படிக்கையை வழங்குவதற்காக மதிப்பீட்டு நடவடிக்கைகளை கண்டிப்புடன் மேற்கொள்ள வேண்டியதுடன். இந்நிறுவனம் தொழிநுட்பக் குழு மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

(இ) சுகாதார விஞ்ஞான பீடத்தின் 5ஆம் மாடி கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் தொடர்பான பெறுகை செயற்பாடுகளை திட்டமிட்டு நிர்மாணிக்கும் முறைமையின் கீழ் கபினட் சபையின் மூலம் நியமிக்கப்பட்ட பெறுகைக்குழு (SCAPC) மூலம் இடம் பெற்றது. அதற்குத் தேவையான அடிப்படை செயற்பாடுகளான ஏல ஆவணங்களை தயாரித்தல் 2017 இன் இறுதிக் காலாண்டில் முடித்திருந்ததுடன் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவைக் கூட்டி ஒப்பந்தத்தை வழங்குவதற்காக அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக கபினட் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. கபினட் அனுமதி அதற்காக கிடைக்கப் பெற்றவுடன் ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) கல்விப்பீடத்தின் நான்காம் மாடியின் கூரையை புனர்நிர்மானம் செய்வதற்கு உரிய ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் போது, சுமனசேகர கன்ஸ்ட்ரெக்ஷன் (ப்ரை) நிறுவனம் (ஒப்பந்தக்காரர்கள்) ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறியதால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்து. அதற்குரிய சட்ட நடவளக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயினும் நிர்மாணத்தின் எஞ்சிய பணிகள் பூரணமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

3.ஏனைய அவதானங்கள்
-----------------------------------------

3.1 நிதிப் பெறுபேறுகள்
-----------------------------------

(அ) 14 உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. <u>**டி.எம் கருணாரத்ன**</u>

அறவிட வேண்டிய பெறுமதி ஊழிய சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலம், வலீவுகள் தொடர்பாக எழுந்த சிக்கலின் காரணமாக அதனை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போதைக்கு அது உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

2. <u>**எஸ்.யூ முணசிங்க**</u>

ஊழியர் சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போது உரிய உத்தியோகத்தர் மூலம் முன்வைக்கப்பட்ட ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடு காரணமாக அநவிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தேவையான ஆவணங்களை முன்வைக்குமாறு எஸ்.யூ முணசிங்கவிற்கு அறியப்படுத்தப்பட்டிருப்பதுடன், அவரினால் அவை முன்வைக்கப்படவில்லை. சட்ட நடவடிக்கைகள் மூலம் அப்பணத்தை அறவிட தீர்மாணம் எடுக்கப்பட்டுள்ளது.

3. <u>**ஏ.ஏ.சீ காஞ்சனா**</u>

பல்கலைக்கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு அமைவாக பிணை செலுத்துவது தட்டிக்கழிக்கப்பட்டுள்ளதினால் சட்ட நடவடிக்கைகள் மூலம் பிணையின் பெறுமதியை அறவிட 2019.01.03 ஆம் திகதி கூடிய லீவு செயற்குழு தீர்மாணம் எடுத்துள்ளது.வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்ககைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. **<u>சீ.ஜே கீகணகெ</u>**

ஊழியர் சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போது முன்வைக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டையினதும் கடவுச்சீட்டினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படும் வரையில், உரிய பணத்தை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவர் மூலம் அவை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஊழியர் சேமலாப நிதியத்தை விடுவிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளத.

5. **<u>ஜே.சி.டி பிரதிவ்ராஜ்</u>**

சம்பளமில்லாத காலப்பகுதிக்குரிய ஒப்பந்தத்தின் பெறுமதி கணக்கிடுவது தொடர்பாக சிக்கல் காணப்படுகின்றது. அச்சிக்கல்களைத் தீர்க்கும் வரை ஒப்பந்தத்தின் பெறுமதியை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளத. அதைக் கணக்கிடும் முறைமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதற்கமைய ஒப்பந்தத்தை கணக்கிட்டு பிரதிவ்ராஜ் அவர்களுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளத. எவ்வாறாயினும் 2019.03.07 ஆம் திகதி இடம் பெற்ற லீவு செயற்குழு கூட்டத்தில் அவருக்கு எதிராக வழக்குத் தொடர் தீர்மானிக்கப்பட்டது. டிதற்கமைய வழக்குத் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

6. **<u>யூ.ஜீ ஜயசெகர</u>**

இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது யூ.ஜி ஜயசேகர மற்றும் அவரது பிணைக்கு எதிராகவாகும். சிரேஸ்ட உதவிப் பதிவாளர் (சட்ட மற்றும் ஆவண) மூலம் 2018.08.20 ஆம் திகதி கடிதம் மூலம் பதிலளிக்கப்பட்டது.

7. **<u>டி.பீ அபேசேகர</u>**

மொத்த பிணை ஜயவர்தனபுர பல்கலைக்கலகத்தின் சுற்றறிக்கை இலக்கம் 03.'.2014 க்கிற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய பிணையின் பெறுமதி 25மூ அப்பல்கலைக்கழகத்திற்கு செலுத்தி மீதமுள்ள 75% வீதத்தினை புதிய பிணை ஒன்றில் உள்ளடக்கியுள்ளதாக ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் USJP/AE/MGT/08/03/PF/179 மற்றும் 2018.05.08 ஆம் திகதியுடைய கடிதம் மூலம் அறிவித்துள்ளனர். அக்கடிதத்தின் பிரதியொன்று சிரேஸ்ட உதிவியாளர் (சட்டம் மற்றும் ஆவணம் மூலம் 2019.0318 ஆம் திகதியுடைய கடிதம் மூலம் கணக்காய்வுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

8. **<u>ஜே.ஜே.டி சேதுங்க</u>**

முதற் கடன்காரர் மற்றும் பிணையாளிகள் சமர்ப்பித்துள்ள முகவரியை விட்டுச் சென்றுள்ளதுடன் அவரகளுடைய தற்போதைய முகவரியை கண்டுபிடிக்க முயன்ற போதிலும் முடியாமற் போனதுடன் வழக்குத் தொடரவும் முடியாமல் போனத. ஊழியர் சேமலாப நிதியத்தியத்தின் தொகையை பிணையின் ஒரு பங்காக அறவிட முயன்ற பொதிலம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் 2012.10.22 ஆம் திகதியுடைய கடிதத்திற்கு அமைவாக அதை மேற்கொளள்ள முடியவில்லை.

9. **<u>எச்.கே.டி.ஏ.என். அன்னக்ககே</u>**

முதற் கடன்காரர் மற்றும் பிணையாளிகள் சமர்ப்பித்துள்ள முகவரியை விட்டுச் சென்றுள்ளதுடன் அவரகளுடைய தற்போதைய முகவரியை கண்டுபிடிக்க முயன்ற போதிலும் முடியாமற் போனதுடன் வழக்குத் தொடரவும் முடியாமல் போனத. ஊழியர் சேமலாப நிதியத்தியத்தின் தொகையை பிணையின் ஒரு பங்காக அறவிட முயன்ற பொதிலம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் 2012.10.22 ஆம் திகதியுடைய கடிதத்திற்கு அமைவாக அதை மேற்கொளள்ள முடியவில்லை.

10. **<u>டப்லியூ.எஸ்.டி பொன்சேகா</u>**

வழக்குத் தொடர நீதிபதி காரியாலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

11. **<u>எம்.கே.எம்.பி.டி ராஜபக்ச</u>**

ஒப்பந்தத்தை மீறிய முதல் தருவாயிலே வழக்குத் தொடரப்பட்டது.எனினும் முதற் கடன்காரர் மற்றும் பிணையாளி வழங்கியுள்ள முகவரியை விட்டுச் சென்றுள்ளதுடன் அவர்களுடைய தற்பொதைய முகவரியை கண்டுபிடிக்க முயன்ற போதிலும் மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் யோயுள்ளது.

12. **<u>எஸ். தலுவத்த</u>**

ஒப்பந்தத்தை மீறிய முதல் தருவாயிலே வழக்குத் தொடரப்பட்டது.எனினும் முதற் கடன்காரர் மற்றும் பிணையாளி வழங்கியுள்ள முகவரியை விட்டுச் சென்றுள்ளதுடன் அவர்களுடைய தற்பொதைய முகவரியை கண்டுபிடிக்க முயன்ற போதிலும் மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் யோயுள்ளது.

13. **<u>ஜீ. சமரநாயக</u>**

ஒப்பந்தத்தை மீறிய முதல் தருவாயிலே வழக்குத் தொடரப்பட்டது.எனினும் முதற் கடன்காரர் மற்றும் பிணையாளி வழங்கியுள்ள முகவரியை விட்டுச் சென்றுள்ளதுடன் அவர்களுடைய தற்பொதைய முகவரியை கண்டுபிடிக்க முயன்ற போதிலும் மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் யோயுள்ளது.

14. **<u>வி.ஜி.எஸ் ஏகநாயக</u>**

ஒப்பந்தத்தை மீறிய முதல் தருவாயிலே வழக்குத் தொடரப்பட்டது.எனினும் முதற் கடன்காரர் மற்றும் பிணையாளி வழங்கியுள்ள முகவரியை விட்டுச் சென்றுள்ளதுடன் அவர்களுடைய தற்பொதைய முகவரியை கண்டுபிடிக்க முயன்ற போதிலும் மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் யோயுள்ளது.

(ஆ). இது அறவிடப்படாத ஊழியக்கடன்களில் 6 பேர்களுக்கு உரிய ரூபா.6,400.00 ஆகின்ற கடன் பணத்தை கழித்து மீதமுள்ள கடன் தொகை, வழங்கல் மற்றும் நிதி சுற்றறிக்கை இல. 40 மற்றும் 59 ற்கு அமைவாக ஊழியர் சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போது அறவிட பல்கலைக்கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(இ) கச்சிதமான திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் வருடத்திற்கு வருடம் மேம்படுத்தப்பட்டு மகா களஞ்சியத்தின் மூலம் பெறுகை வெளியிடப்படும்.

செயற்திட்டம் 04 வருடங்களுக்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பினும் அதன் முன்னேற்றம் சமப்படுத்தப்பட்டு வருடத்திற்கு வருடம் மேம்படுத்தப்பட்டு பல்கலைக்கழக செயற்குழுக்கு ஒப்படைக்கப்பட்டு அனுமதி பெறப்படும்.

(ஈ) பல்கலைகக்கழகத்தின் கல்விசார் பதவிகளுக்குான வேலைவாய்ப்புக்களை நிரப்புவதற்காக 2018.12.02 “Sunday Observer” பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு கிடைக்கப்பெற்ற விண்ணப்படிவங்களில் சுகாதார விஞ்ஞான பீடத்தில் மற்றும் பொறியியல் விஞ்ஞான பீடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு முடிந்ததுடன், கல்விப் பீடத்தில் ஆட்சேர்ப்பு இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றத. மீதமுள்ள பீடங்களுக்காக விளம்பரங்களை பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சில பீடங்களில் உதவி ஊழிய பதவிகள் “வகிப்பவருக்கு தனிப்பட்டதாக” ஊழியக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்படும்வாறு அப்பதவி வெற்றிடங்கள் ஏற்படுகின்ற பொது மீண்டும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள முடியாததனால் உரிய பதவிகள் வெற்றிடங்கள் இவ்வாறு காணப்படுகின்றன.

எவ்வாறாயினும் இதுவரை கல்விசார் மற்றும் கல்விசார் உதவி ஊழியர்கள் பதவிகள் பல பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

நிர்வாக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் இடம்பெறும்.

ஆட்சேர்ப்பின் செயன்முறையில் உள்ள சிக்கல்கள் காரணமாக அச்சகர் பதவிற்கு பதிலாக உதவி அச்சகர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதற்கைமைய வேலைவாய்ப்பு விளம்பரம் ஒன்று 2019-03-31 “Sunday Obsever” பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

வெற்றிடம் காணப்படும் உதவி பணிப்பாளர்/ பிராந்திய கல்வி சேவை நிலையங்களின் பதவிகள்,அழகியலாளர் பதவி, பயிற்சி பொறியியலாளர்கள் பதவி போன்றவற்றறிற்காக பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

சிரேஸ்ட உதவி பணிப்பாளர் / பிராந்திய கல்விச் சேவைப் பதவி போன்றவற்றிற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாததுடன் உதவிப் பணிப்பாளர் / பிராந்திய கல்விச் சேவை பதவி உயர்வின் மூலம் பூரணப்படுத்தப்படும்.

கல்விசாரா ஊழியர்கள் ஓய்வூதியம் பெற்றுச் செல்லல், பதவி விலகல், வேறு பதிவிகளுக்கு நியமிக்கப்படல் போன்ற காரணங்களினால் வெற்றிடங்கள் ஏற்படுவதுன், அவ்வெற்றிடங்களை நிரப்புதல் நகர திட்டமிடல், நீர்ப்பாசனம் மற்றும் உயர் கல்வி அமைச்சின் அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வனுமதியை பெற்றுக் கொள்ள சில காலங்கள் செல்வதுடன் அதுவரை வெற்றிடங்களை நிரப்பவும் முடியாது.

கல்விசாரா ஊழியர்களில் பல பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செயன்முறைக்கு ஏற்ப முதலில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படல் வேண்டும். அப்டிபாது இப்பல்கலைக்கழகத்தில் வேவையில் இருக்கும் ஓழியர்கள் அப்பதவிற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்ற போது ஒரு பதவியின் இடைவெளி நிரப்பப்பட்டாலும் இன்னொரு பதவிக்கு வெற்றிடம் ஏற்படுகின்றது. அப்போது ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைகக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் உயர் கல்வி அமைச்சிடம் இருந்து மீண்டும் அனுமதி பெற வேண்டும்.

ஆகவே, பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழிய பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படட போதிலும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை.

கல்விசாரா ஊழிய வெற்றிடங்களில் அநேக வெற்றிடங்களை நிரப்புவதற்கு உயர் கல்வி அமைச்சின் பெயர் பட்டியலைப் பெற்றுக் கொண்டு அப்பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு அவற்றறை மீள பெற்றுக் கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ள வேண்டியதனால் அதற்காக சில காலம் தேவைப்படுகின்றது.

கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடங்களை வெளியில் இருந்து நிரப்பவதற்கு பத்திரிகை விளம்பரங்கள் ஏடாக விண்ணப்பங்களைக் கோருவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாயின் மற்றும் தற்போதிருக்கும் ஊழியர்கள் ஓய்வூதியம் பெற்றுச் செல்லல், ஊழியர்கள் பதவி விலகல், வேறு வெற்றிடங்களுககு நியமிக்கப்படல் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீண்டும் அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும் என்கிற தேவைப்பாட்டை நீக்கினால் ஆட்சேர்ப்பு செய்வதற்காக செல்லும் காலத்தை குறைக்க முடியும்.

2018 ஆம் ஆண்டில் ஊழியச் செலவு அதிகரித்திருப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 17/2016 மூலம் 2018.01.01 ஆம் திகதி முதல் செயற்படுத்தும் முகமாக பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளத்தை மீள பரிசீலிப்பு ஏற்பட்டதன் காரணமாக பல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்ததை கொண்டு கணப்பிடப்படுகின்றது கொடுப்பணவுகள் மற்றும் செலுத்துகைகளின் அதிகரிப்பின் காரணத்தினால் ஆகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான2030 நியாயப் பத்திரம் தொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக்கழகத்தின் செயன்முறை மற்றும் கச்சிதமான திட்டம் 92016-2020) தயாரிக்கப்பட்ட போது பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை உள்ளடக்கி ஒழுங்குபடுத்தப்பட்டது. பேண்தகு அபிவிருத்தி இல 04 “Widen Access to Education and Increase Opportunities for life – long Learning” நிறைவேற்றல் முதன்மையான இலக்காகும். எனினும் நோக்கங்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. எதிர்காலத்தில் அவ்வாறான தாமதங்களை தவிர்த்து நோக்க குறிக்கோள்களை அடைந்து கொள்ள வழங்குவதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

(எ) நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றுமு் முகாமைத்தவ கணக்காய்வு திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் உள்ளக நிருவாகத்தில் குறைபாடுகளை கண்டறிதல் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்தல் போன்றவற்றிற்காக உள்ளக கணக்காய்வின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக உள்ளக கணக்காய்வுப் பிரிவின்:

I. வாய்மொழி மூல உதவிகள் தேவைப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் ெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை.

II. உள்ள கணக்காய்வு விசாரணை அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்படும் உள்ளக நிருவாகத்தின் குறைபாடுகள் மற்றும் சிபாரிசுகள் அண்மைக்காலங்களில் இருந்து அவசரப்படுத்தப்பட்டுள்ளன.

உள்ளகக் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் சிபாரிசுகளை செயற்படுத்துவது தொடர்பாக கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதனால், நிறுவனத்தின் உள்ளக நிருவாகத்தை பலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு மிகவும் வேகமான உரிய வழிமுறைகளை மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ). 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் அரசின் வழங்கல்களில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பினும், அது நிலையான ஊழியர்களின் ஊதியம் வழங்குவதற்கு போதியதாக இருக்கவில்லை.

2018 ஆம் ஆண்டு காணப்பட்ட தொடர் வேலைபகிஷ்கரிப்பு காரணமாக கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படல், உள்ளக வருமானம் கிடைப்பது குறைவதற்கு காரணமாகும்.

(ஒ). பல்கலைக்கழகம் மூலம் பராமரிக்கப்படுகின்ற காணிகளில் சில காணிகளுக்கு பல்கலைக்கழகத்திடம் சட்ட ரீதியான உரிமம் இல்லாதபோதிலும், அக்காணிகளின் சட்ட ரீதியான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழகம் தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொள்கின்றது.

(ஓ). பல்கலைக்கழகத்தின் கல்வி நிலையங்கள் பல நூலகத்திற்கான காணியை வேறாக பிரித்திருக்கவில்லை. அப்புத்தகங்கள் அலுமாரிகளில் அடுக்கப்பட்டு வாசிப்பாளர்களுக்கு வழங்குவதற்கு போதியளவு வசதிகள் காணப்படாததால் மாணவர்களுக்கு அப்புத்தகங்களை உரிய முறையில் வழங்க வேண்டும் என்கின்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நூலக கமிட்டி மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய கல்வி நிலையங்களில் காணப்பட்ட சகல புத்தகங்களையும் அருகில் உள்ள பிராந்திய நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளன.

பிராந்திய கல்வி நிலையங்களில் தொழில்சார் பயிற்சியளிக்கப்பட்ட நூலக ஊழியர்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அப்புத்தகங்கள் பயன்பாட்டிற்காக மாணவர்களுக்கு வழங்கப்படுவது வினைதிறனுடன் இடம்பெறுகின்றது.

(ஐ). தொகை மதிப்பீட்டில் கண்டறியப்பட்ட அசையாத பொருட்களை களஞ்சியலிருந்து அகற்றுவதற்கு தேவையான வழிமுறைகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன்.

(ஔ). நிதிப்பிரிவிலிருந்து பெற்றுக் கொள்கின்ற தகவல்களுக்கு ஏற்ப நிறுவனப் பிரிவின் உப ஏடுகளை மீளாய்வு செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(க). தேசிய வழிகாட்டல்கள் தொலைகல்வி வேலைத்திட்டத்தை பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கின்ற போது உடைந்து அல்லது செயலிழந்து காணப்பட்ட மின் பிறப்பாக்கிகள், கணனிகள் மற்றும் இயங்காத ஏனைய இயந்திரங்கள் போன்றவற்றைத் திருத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்ட நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து வருடாந்தம் பராமரிக்கப்படல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய மின்பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு பெறுகை வழங்கப்பட்டதன் பின்னர் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

(ச). பொலிதீன் பொதி செய்யப்படும் இயந்திரங்கள் பல்கலைக்கழகத்தின் மின்சாரம் மற்றும் கணனிப்பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

(ட). இலக்கம் 7417821 ஆகின்ற கணக்கின் தொகை 2019 ஆம் ஆண்டு முதல் குறைந்த அளவில் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலக்கம் 0174100170350215 ஆகின்ற ஊழிய கொடுப்பனவு தொடர்பான நடைமுறைக்கணக்கிற்கு காசாளர் மூலம் ஒவ்வொரு நாளும் வைப்பிலிடப்படும் பணம் மற்றும் திறைசேரியினால் மீள் செலவுகளுக்காக அளிக்கப்படுகின்ற பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் ஏனைய ஊழிய கொடுப்பனவுகளுக்காக இக்கணக்கில் இருந்து தினமும் குறிப்பிட்டளவு தொகையை நடாத்திச் செல்ல பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டது.

(த). கணக்காய்வுக்குழுவின் இறுதிக் கூட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டவாறு சகல நான்கு வருடங்களுக்கு ஒருமுறை கற்கைநெறிகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியது பற்றி மேயசஅள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களின் Norms குறிப்பிடப்பட்டுள்ளது கல்விசார் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய குறைந்தபட்ச கடமைகள் பற்றியாகும்.இந்த ஆவணத்திற்கு அமைவாக கல்விசார் ஊழியர்கள் 04 வருடங்களிற்குள் குறைந்தபட்சம் 16 பாடங்களையாவது நிவர்த்தி செய்திருத்தல் வேண்டும். சமகாலத்தில் பல்கலைக்கழகத்தில் 1000 கற்கைநெறிகள் உள்ளதுடன், ஒரு கற்கைநெறியில் பொதுவாக 25 பாடங்கள் காணப்படும். ஆதனால் சகல பாடநெறிகளுக்குமுடைய மொத்தப்பாடங்கள் 25,000 க்கு அதிகமாகும். சுகல கல்விசார் ஊழியர்களும் Norms க்கு அமைவாக 04 வருடங்களிற்குள் மேற்கொள்ள வேண்டிய மொத்த பாடங்கள் 6000 ஆகும். இதனால் சகல கற்கைநெறிகளும் 04 வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்ய முடியாது என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் தேவையான சந்தர்ப்பங்களில் கற்கைநெறிகளை மீளாய்வு செய்ய பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(ப). 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆகின்ற போது புதிக தகவல் தொழிநுட்ப முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்காக புதிய ஊழியக்குழுவொன்று பணியமர்த்தப்பட்டு, உரிய ஆரம்பப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

(ற). பெரியதொரு செலவை மேற்கொண்டு புதிய தொழிநுட்பக் கருவிகளுடன் அமைக்கப்பட்ட ஊடக நிலையம் மூலம் வெளியக ஒளிப்பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மேலதிக வருமானம் ஈட்டப்பட்டிருந்தாலும், இதுவரை போதியளவு கருமங்கள் இடம்பெறவில்லை என கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிறுவனத்தை அமைத்து 24 வருடங்கள் கடந்தோடியிருப்பதுடன், ஒளிப்பதிவு செய்யும் உபகரணங்கள் 08 வருடங்களுக்கு முன்னர் டிஜிடல் தொழிநுட்பத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. இந்நிறுவனத்தை பிரதானமாக அமைத்திருப்பது பீடங்களின் ஒலி-ஒளி கற்கைப் பொருட்களை தயாரிப்பதற்காக இருந்தாலும், முன்னிருந்தே இந்த நிறுவனம் தொழிநுட்ப உபகரணங்களை பராமரித்தல் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு இலாபம் ஈட்டுவதற்கு பங்களிப்புச் செய்வதற்கும், இலாபம் ஈட்டும் நிறுவனமாகவும் செயற்பட வேண்டி ஏற்பட்டது.

திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கைப் பொருட்களைத் தயாரிப்பதற்கான பங்களிப்பை எடுத்து நோக்கின் 2017/2018 ஆண்டு மானுடவியல் பீடத்தின் கணொளிகள் 26 யும், சுகாதார விஞ்ஞான பீடத்தின் 24 யும், பொறியியற் தொழிநுட்ப பீடத்தின் 04 யும், இயற்கை விஞ்ஞான பீடத்திற்காக 06 நிகழ்சிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல்கலைக்கழக கலாநிதிகளுக்காக கல்விசார் நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளில் இந்நிலையம் உயரிய பங்களிப்பை அளித்தள்ளது.

அத்துடன் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் சகல முக்கியமான நிகழ்வுகளின் போதும் ஒலி-ஒளி பதிவுகள் எடுக்கப்படுவதும் மத்திய நிலையத்தினால் ஆகும். அதற்கமைய பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சகல விழாக்கள், அழைப்பு விரிவுரைகள் மற்றும் ஏனைய விசேட சந்தர்ப்பங்களிலும்

உரிய புகைப்படங்களை எடுத்தல் மற்றும் அவற்றை சேர்த்து வைத்தல் ஊடக நிலையம் மூலம் இடம் பெறும்.

